ஸ்ரீமதே ராமானுஜாய நம:



ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

சிங்கப் பெருமாள் கோயில்



ஸ்ரீ கோயில் கந்தாடை வாதூல தேசிக அண்ணாவிலப்ப குமார வேங்கடாசார்யார்


(வைகுண்டவாஸி)

ஸ்வாமியின் ஸதாபிஷேக மஹோத்சவ சிறப்பு மலர்

(விஷு வ்ருச்சிக – க்ருத்திகா)

நவம்பர் – 30 – 2001

acharya.org



பாடலாத்ரி ந்ருஸிம்மன்
நம் ஸ்வாமி ஸமர்ப்பித்த சாளக்ராம ஹாரத்துடன் சேவை

acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீவேங்கடகுரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்
ஸ்ரீவைஷ்ணவசிரோபூஷா ஸ்ரீராமாநுஜபாதுகா।
ஸ்ரீவாதூல குலோத்தம்ஸ: ஸ்ரீ தாசரதிரேததாம் ॥

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யோபய வேதாந்தப்ரவர்த்தக ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரகஸார்வபௌம ஸ்ரீமத்பாஷ்யகார பரிகல்பித சதுஸ்ஸப்ததி ஸிம்ஹாஸநாத்யக்ஷ குருபங்க்தி சிரோபூஷணாயமான,ஸ்ரீ ராமாநுஜயதீச்வராஜஹத்பாகிநேய, ஸ்ரீவாதூலகுலதிலக ஸ்ரீமத் தாசரதி திவ்யஸூரி மஹாவம்சஸம்பூத, ஸ்ரீமத் வரவரமுநி பரம க்ருபாலப்த, ஸ்ரீ மத்துண்டீரமண்டல மண்டநாயமான ஸத்யவ்ரதக்ஷேத்ராபர நாமதேய ஸ்ரீமத் காஞ்சீநகர விராஜமாந கரிசைல மஸ்தவாஸ்தவ்யார்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதவரப்பிரத தேவேசகடாக்ஷபாத்ரபூத, ஸ்ரீ புண்யாரண்ய க்ஷேத்ர ஸ்ரீபாடலாத்ரி ந்ருஸிம்ம ஸ்வாமி ஸந்நிதி பரம்பரா ஸ்தலாசார்யாதிபூத, ஸ்ரீயதுகிரி யதிராஜ ஸம்பத்குமார விசேஷ கடாக்ஷபாத்ர கைங்கர்ய பூதராய் எழுந்தருளியிருந்த

ஸ்ரீமான் கோயில்கந்தாடை வாதூலதேசிக அண்ணாவிலப்பன் குமார வேங்கடாசார்யர் ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவ

சிறப்பு மலர்

விஷு ஆண்டு, வீறுடைய கார்த்திகையில் கார்த்திகை நன்னாள்
30-11-2001


பதிப்பாசிரியர் - **P.T. சேஷாத்ரி**

ஸ்ரீ கோ. க. வா. அ. குமார வேங்கடாசாரியர் ஸ்வாமி
சதாபிஷேக மஹோத்ஸவக் கமிட்டி

(ஸ்ரீ தாஸரதி டிரஸ்ட் வெளியீடு)
ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

acharya.org

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

வர்த்தமான ஸ்ரீ குமார ராமானுஜாசார்யர் ஸ்வாமியின்

மங்களாசாஸனம்

தாஶரத்யார்ய தநயம் ஸ்ரீ சைலார்ய பதாஶ்ரயம்
ஸ்ரீ வேங்கட குரும் வந்தே சீலாதி குணஸாகரம்

ஞானம், அனுட்டானம் இவை நன்னாகவே உடையனான குரு என்னும் மாமுனிகளின் ஸ்ரீஸூக்திக்கிணங்க எழுந்தருளியிருந்த நம் ஸ்வாமியின் ஶதாபிஷேக மஹோத்சவம் இவ்வருடம் கார்த்திகையில் கார்த்திகை ப்ராப்தமாகிறது. ஸ்வாமி எழுந்தருளியிருந்து நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஸ்வாமிக்கு இம் மஹோத்சவத்தை நடத்தும் பாக்யம் நமக்கு கிடைக்கவில்லை. இழந்தோம்! இழந்தோம்! இருப்பினும் ''குரும்ப்ரகாசயேத் தீமான்'' என்பதற்கேற்ப இம்மஹோத்சவத்தை கொண்டாட வேண்டியது, திருமாளிகையின் ப்ரதம சிஷ்யனான அடியேனுடைய கடமையாகிறது. ஸ்வாமியின் திருவடி சம்பந்தம் பெற்றவர்களும், அபிமானிகளும், இம் மஹோத்சவத்தை மிகவும் விலக்ஷணமாக, திருமாளிகையின் பெருமைக்குச் சேர நடத்துவது அறிந்து மிகவும் மனம் பூரிக்கிறது. நம் திருமாளிகையின் சிஷ்ய வர்கங்கள் பலர் இதற்காக அரும் பாடுபட்டு இதனை நடத்துகின்றனர். அனைவருக்கும் எல்லா க்ஷேமங்களை அருளும்படி, ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்மனையும், அழைத்து வாழ்வித்தவரையும், நம் பூர்வாசார்யர்களையும், ப்ரார்த்தித்து மங்களாசாசனம் பண்ணுகிறோம்.


பொலிக! பொலிக!

வர்த்ததாம் ! அபி வர்த்ததாம்!

ஸ்ரீ ராமானுஜதாஸன்
ஸ்ரீ. கோ.க.வா. அண்ணவிலப்ப குமார ராமானுஜாசார்

acharya.org

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீ கூரேஸாய நம:
ஸ்ரீ தாஸரதி மஹா குரவே நம:
ஸ்ரீமதே வரவமுனயே நம:
ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

நம் ஸ்வாமியின் வைபவம்

ஸ்வாமி எம்பெருமானாரின் தேஹ ஸம்பந்தமும், த்ரிதண்ட, பாதுகா ஸ்தானமும், 74- ஸிம்ஹாஸனாதிபதிகளில் முதல்வருமான ஸ்வாமி முதலியாண்டான் திருவம்சத்தில் வந்து தோன்றிய ஸ்ரீ. உ.வே. குமார வேங்கடாசார்யர் ஸ்வாமி (வைகுண்டவாசி) துர்மதி ஸூ (கார்த்திகையில் - கார்த்திகை) திருமங்கை மன்னனும், நம்பிள்ளையும் அவதரித்தருளின நன்னாளில் (13-12-1921) ஸ்ரீரங்கத்தில் திருவவதாரம் செய்தருளினார். திருமாளிகை கூடஸ்தரான அண்ணாவிலப்பன், குமார வேங்கடாசார்ய ஸ்வாமியின் திருநாமம் ஸ்வாமிக்கு சூட்டப்பட்டது. உரிய ஸமஸ்காரங்கள் திருத்தகப்பனாராலும், கீர்த்திமூர்த்தியான குமார ஸ்ரீசைலாசார் (திருத்தமையனார்) ஸ்வாமியினாலும், செய்விக்கப்பட்டார். திருத்தமையனாரிடம் ஸமாச்ரயணமும், பின்னர் காவ்ய, நாடகங்கள் திருக்கோட்டியூர் மெய்யுவய்யங்கார் ஸ்வாமியிடமும், அருளிச் செயல் சந்தை மல்லி ராமானுஜாசார், திருத்தமையனார் முதலியவர்களிடமும், உபயுக்த வேத பாகங்கள் அஷ்டகோத்ரம் வேங்கடாசார் ஸ்வாமியிடமும், ஸப்த காண்ட வேத அத்யயனம் கருநிலம் வரத ராமாநுஜய்யங்கார் ஸ்வாமியிடமும், திருமந்த்ரார்த்தம், தத்வத்ரயம், திருப்பாவை, ஸ்ரீவசனபூஷணம் முதலான க்ரந்தங்கள் திருத்தமையனார் ஸ்வாமியிடத்திலும், பகவத் விஷயம் மெய்யுவய்யங்கார், சேனங்குளம் கந்தாடை ராமானுஜயங்ஙகார் ஸ்வாமியிடமும் நடந்தது. இதைத் தவிர ஸங்கீத அப்யாஸம் சோளசிம்ஹபுரம் அம்மாள் ஸ்ரீ. கோ.க. சரண்யாசார், காழியூர் கோவிந்தாசார் ஸ்வாமியிடமும், திருநாராயணபுரம் கோட்டு வாத்யம் வித்வான் ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமியிடம் வீணை அப்யாஸமும், நடந்து சிறந்த வைணிகராகவும் ஸ்வாமி விளங்கினார். பற்பல திவ்ய தேசங்களில் சுமார் 65 ஆண்டுகள் அருளிச் செயல் கைங்கர்யம் புரிந்தும், சிஷ்யர்களின் ஆத்ம உஜ்ஜீவனத்தை செம்மையாக நடப்பித்தும், பற்பல உபயவேதாந்த வித்வான்களின் அபிமானமும் பெற்று விளங்கிய ஸ்வாமி, 22-3-1997 ஈச்வர (பங்குனி - பௌர்ணமி) அன்று தன்னுடைய 77வது திருநக்ஷத்திரத்தில் பெருமாள் கோயில் திருமாளிகையில் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

இத்தகைய வைபவம் பொருந்திய ஸ்வாமியின் சதாபிஷேகம் வைபவம் விஷு (2001) (நவம்பர்-30) (கார்த்திகையில் - கார்த்திகை) ப்ராப்தமாகிறது. இவ்வைபவத்தை ஒட்டி சதாபிஷேக சிறப்பு மலர் வர்த்தமான ஸ்வாமியின் அனுக்ரஹத்திற்க்கிணங்க வெளியிட்டு ஸ்வாமியின் திருவடிசம்பந்திகள் ஸத்தைப் பெறுகிறோம்.

acharya.org

ஸ்ரீ:

ஆசார்ய லக்ஷணம்

ஸ்ரீ கோ. க. வா. ரு. குமாரவேங்கடாசாரியர் ஸ்வாமி

''ஆசாரியன் சிச்சனுயிரைப் பேணுமவன்'' என்று பொய்யிலாத நம் மணவாள மாமுனிகள் காட்டியருளியபடி, சிஷ்யனுடைய ஆத்மோஜ்ஜீவனம் (ஆத்மாவைக் காப்பாற்றுதல்) ஆசாரியனுடைய தலையாய கடமையாகும். 'தேஹம் வேறு ஆத்மா வேறு என்று உணர்த்தி, தேஹ விலக்ஷணனான இந்த ஆத்மா திருமந்த்ரத்தில் காட்டியுள்ளபடி ''ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமையானவன்,' என்ற சேஷத்வ ஞானத்தை உண்டாக்கி, ஆத்மா ஸ்வதந்த்ரன்' என்று எண்ணி அஹங்காரப்படாமலும், பகவத் கைங்கர்யத்திற்கென்றே இட்டுப் பிறந்த இவ்வாத்மா அக்கைங்கர்யத்திலிருந்து விலகாமல் காத்து, *தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வை ஏற்படுத்தி ரக்ஷித்து, அவனுக்கு க்ஷேமத்தை உண்டு பண்ணி வளர்ப்பவனே ஆசார்யன். இப்படிப்பட்ட க்ஷேமத்தை உண்டு பண்ணுவதற்காக எம்பெருமான் தானே பல அவதாரங்கள் எடுத்துப் பாடுபட்டும், அவன் எண்ணம் ஈடேறாமல், திருவநந்தாழ்வானை இராமானுசனாக—மநுஷ்யஸஜாதீயராக—அவதரிப்பித்துக் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டான். வைஷ்ணவ தரிசனமே **எம்பெருமானார் தரிசனம்** என்று பெயரிட்டழைக்கும் படியான ஆசார்யத்வபூர்த்தி இவருக்கே உண்டு.

நம்மிராமானுசன் தர்சநப்ரவர்த்தகத்திற்காக நியமித்த 74 ஸிம்ஹாஸனாதிபதிகளின் திருவம்சங்களிலும் எம்பெருமான் தானே ஆசாரியனாக ''உறங்கும் பெருமாள் உலாவும் பெருமாளாக வந்தார்'' என்கிறபடி ஆசாரியனுக்கும் எம்பெருமானுக்கும் பேதமில்லாதபடி வந்தவதரிக்கிறான். ''மாடும் மனையும் மறைமுனிவர் தேடுமுயர் வீடும் செந்நெறியும், பீடுடைய எட்டெழுத்தும் தந்தவனை என்றிராதாருறவை விட்டுவிடு'' என்றும், ''ஐஹிகாமுஷ்மிகா ஸர்வம் குருரஷ்டாக்ஷரப்ரத:'' என்றும், ''சரணாகதி தந்த தன்னிறைவன் தாளே அரணாகும்'' என்றும், ''உபாயோபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத் | இதிஸர்வேஷு வேதேஷு ஸர்வ ஶாஸ்த்ரேஷு ஸம்மதம் | ஏவம் த்வயோபதேஷ்டாரம் பாவயேத் புத்திமாந்தியா: |'' என்றும், ''சக்ஷுர்கம்யம் குரும் த்யக்த்வா...கநஸ்தமபி வாஞ்சதி'' என்றும் சொல்லுகிறபடியே திருமந்த்ரம் த்வயம் இவற்றையுபதேசித்த ஆசாரியனை ''த்வமேவமாதாச பிதா த்வமேவ'' என்கிறபடி எல்லாமாகக் கொண்டு இவனைவிட்டு ''தேவுமற்றறியேன்'' என்றிருக்கும் சிஷ்யனுக்கு ஆசார்யஸ்தானம் வஹிக்கும் அதிகாரி உபகரிக்கும் விஷயங்களாவன:

''ஆசிநோதிஹி ஶாஸ்த்ரார்த்தான் ஆசாரேஸ்தாபயேத்யபி, ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே'' என்கிறபடி சாஸ்த்ரங்களைப் பரிசோதித்து விஷயங்களை உள்ளபடி உணர்ந்து ஸரியான ஆசாரத்தை நிஷ்கர்ஷித்துத் தானே அநுஷ்டித்துக் காட்டி நம்மை வாழ்விக்கிறான்.

''ஞானமநுட்டானம் இவை நன்றாக உடையனான குரு'' என்று மணவாள மாமுனிகள் திருவாக்கு. **ஞானம், வித்யை** என்பவை எவை என்று சிந்திக்க வேண்டியது ஆசாரியன், சிஷ்யன் இருவருக்கும் இக்காலத்தில் மிகவும் அவசியமாகிவிட்டது. மேல்நாடுகளில் ஆத்ம விசாரம் அவசியம் என்றுணர்ந்து அதில் பலர் புகும் இக்காலத்தில் நமது பாரதநாட்டில் இதில் அக்கறையுள்ளோர் அரிதாகி வருகிறார்கள். கால விபரீதம்—காலப் போக்கு இப்படி இருப்பது பற்றி மிகவும் வருந்தவேண்டியுள்ளது.

ஞானம் என்பது ச்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனை அடைந்து நிற்கும். அவனைத் தவிர வேறு விஷயஜ்ஞானம் ஞானமாகாது. ''தத்ஜ்ஞாநம்''—எந்த ஞானம் எம்பெருமானை ஸர்வேஶ்வரனை உள்ளபடி அறியும்படி காட்டுமோ அதுவே ஞானமாகும். அல்லாததெல்லாம் அஜ்ஞானமே. ''தத்கர்மம் யந்நபந்தாய ஸாவித்யா யாவிமுக்தயே | ஆயாஸாயாபரம் கர்ம

acharya.org

வித்யாந்யா சில்பநைபுணம் ॥ '' என்று ஸ்ரீவிஷ்ணு புராண வசனம். எந்த கர்மம் ஸம்ஸார பந்தத்தில் நம்மை அழுத்தாதோ அந்த (பகவத் கைங்கர்யமே) கர்மமாகும். மற்றவை வெறும் ப்ரயாஸையே. ஆத்மோஜ்ஜீவனத்துக்கு உதவும் வித்யையே வித்யை. மற்றவை பயனற்றவை. (செருப்புக்குத்தக்கற்றவோபாதி— என்று நம்பூருவர்கள் திருவுள்ளம்).

எம்பெருமானை அறிவதாவது: சித்து, அசித்து, ஈச்வரன் என்கிற மூன்று தத்வங்களில், சித்தாகிற உயிருள்ளவைகளும், அசித்தாகிற உயிரற்றவைகளும் ஈச்வரனாகிற ஸ்ரீமந்நாராயணனுக்கே ஆட்பட்டவை; தேஹமும் ஆத்மாவும் வேறுபட்டவை; தேஹம் ஆத்மாவுக்குச் சேஷப்பட்டிருக்குமா போல நாம் எம்பெருமானுக்குச் சேஷமாயுள்ளோம்; அவனே ஸர்வஸ்வாமி என்று அறிவதே அறிவு (வித்யை). மற்ற விஷயங்களைப் பற்றிய அறிவு அறிவல்ல. அவற்றையும் அறிவு என்பது, ஓரளவுக்குப் பெருமை படைத்தவரையும் பகவான் என்று உபசாரமாகச் சொல்லுவது போலவேயாகும்.

சாஸ்த்ரம், ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயம் முதலானவைகளைத் தக்க இடத்தில் காலக்ஷேபம் பண்ணி ஞானம் ஸம்பாதித்தால் மட்டும் போராது. அதற்குச் சேர அநுஷ்டானம் அவச்யம் இருக்கவேண்டும். ''யத்யதாசரதி ச்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந: | ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே ॥ '' என்கிற கீதாசார்ய வசனப்படி, சான்றோருடைய அநுஷ்டானத்தை உலகத்தவர் பின்பற்றுகையால், ஞானம் ஸம்பாதித்தவர்கள் பிறருக்கு வழிகாட்டும் வகையில் மாசற்ற அநுஷ்டான முடையவராய்த் திகழவேண்டும்.

ஆசாரியனிடம் ஆழ்ந்த பக்தி, நித்யஸ்நாநம் முதலான ஸதாசாரம், ஆகாரநியதி, திருமண்காப்பணிகை, எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனை ஒழிந்த வேறு எந்த தேவதாந்தர பஜநமும் பண்ணாமை, ''ஊர்த்த்வபுண்ட்ரதிலக மத்யேது கந்தபஸ்மாதிகம் சரேத் | ஸ்வாநயோநிச்சதம் ப்ராப்ய சண்டால: கோடி ஜந்மஸு | '' என்கிற வசனத்திற்கேற்ப, திருமண் காப்பின் மத்தியில் வேறெதையும் இடாமை (சில பெரியோர்கள் தாயார் மஞ்சள் காப்பு குங்குமத்தையும் நெற்றி மத்தியில் தரியாமல் ஸ்ரீசூர்ணரேகையின் மேல் முடிவில் தரிப்பார்கள்), பகவத் பாகவத ஆசார்யாபசாரங்கள் படாமை, சிஷ்யர்களின் உஜ்ஜீவனத்திலேயே நோக்குடைமை; சிஷ்ய மூல ஜீவனத்தை ஜீவனமாகக் கருதாமல், ''நம்மை எம்பெருமான் ச்ருஷ்டித்து ஸதாசார்ய திருவடி ஸம்பந்தம் பெறவைத்து ஆசார்யபதமநுக்ரஹித்து நம்மை வைத்துள்ளது சிஷ்யர்களது உஜ்ஜீவனத்துக்காகத்தான் என்ற நினைவு எப்போதுமுள்ளவனாக இருப்பது, இவை ஸதாசார்ய லக்ஷணங்களாம்.

பிள்ளை உலகாசிரியர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமாக அருளியுள்ள ஸ்ரீ வசநபூஷணத்தில், ''தான் ஹிதோபதேசம் பண்ணும்போது, தன்னையும் சிஷ்யனையும் பலத்தையும் மாறாடி நினைக்கை க்ரூர நிஷித்தம்'' என்றருளியுள்ளார். அதாவது, பஞ்ச ஸம்ஸ்கார மந்த்ரோபதேசாதி காலங்களில் ''நாம் ஆசாரியன்'' என்று நினையாமல் ''நமது ஆசார்யனே இங்கு ஆசார்ய க்ருத்யம் பண்ணுகிறார்; அவருடைய கையாக நாமிருக்கிறோம்; இந்த சிஷ்யனும் நம்மைப்போல நமதாசார்யனுக்குச் சிஷ்யன்'' என்றே எண்ணவேண்டும். பலம் என்பது, ''ஆளுமாளார்'' என்கிற ஸர்வேச்வரனுக்கு மங்களாசாஸன கைங்கர்யங்களுக்கு இவன் உபயோகமாகவேணும் என்று நினைக்கை. மற்ற பலன்களை நினைக்கை பாபமாகும். மற்ற பலன்களை எண்ணினால், ஓட்டை ஓடமும் ஒழுகல் ஓடமும் சேர்ந்தால் நீரில் இரண்டுமே மூழ்கிப் போமாப்போலே, ஆசார்யன் சிஷ்யன் இருவருக்குமே அவத்யமாகும். சிஷ்யனுக்கு பரம்பராகதமான ஆசார்ய ஸம்பந்தம் பெற்று, அவ்விடத்தில் ப்ரதிபத்தியால் அந்த ஸம்பந்தமாத்ரத்தாலே எம்பெருமானுடைய கடாக்ஷம் பெற்று உஜ்ஜீவித்துப் போக வழி உண்டு. ஆசாரியனுடைய நிலை அப்படியன்று. சிஷ்யோஜ்ஜீவன பரம் இவனிடமுள்ளமையாலே அவச்யம் மேலே காட்டினபடி ச்ரேஷ்டமான ஞானநுஷ்டானங்களையுடையவனாயிருக்க வேண்டும்.

லோக நடத்தையில் ஆசாரியன் சிஷ்யனாலே தன் தேஹயாத்ரையை நடத்துகிறானே எனில், ஆசாரியனுடைய தேஹரக்ஷணபரம் சிஷ்யனுடைய கடமையாக விதிக்கப்பட்டுள்ளது. அக்கடமையைச் செய்து அவன் ஸ்வரூபம் நிறம் பெறும்படி நடந்து கொள்கிறான். முன்னோர்கள் ஆசாரித்த பழக்கப்படி அவன் சக்திக்கு ஏற்ப ஆசார்யனுக்கு கிஞ்சித்காரமாக ஸமர்ப்பித்துக்

acharya.org

கைங்கர்யம் பண்ணுவதனால் ஆசாரியனுடைய திருவாராதனாதி காலக்ஷேபங்கள் நடக்கின்றன. ஆனால் சிஷ்யன், தான் தருவதைக் கொண்டு ஆசாரியன் ஜீவனம் நடத்துவதாக எண்ணினானா கில் ஸ்வரூபநாசமடைந்து அநர்த்தப்படுவான்.

ஆசாரியன் சிஷ்யன் இருவரும் தங்கள் ஸ்வரூபத்துக்குத் தக்கபடி நடந்து கொள்ள வேண்டும். ஈச்வரன் நினைவினாலே சிஷ்யனுடைய உஜ்ஜீவனம் ஸித்திக்கிறது. எம்பெருமானுக்கு மங்களாசாஸன பரரான அதிகாரிகளை உருவாக்குவது ஒன்றே உத்தேசம் என்று அதற்காகவே உபதேசிப்பதாலும், சிஷ்யனையும் பலனையும் உள்ளபடி நினைத்திருப்பதாலும், ''இவன் ஆசார்யன்'' என்று ஈச்வரனுடைய நினைவாலும், சிஷ்யன் அப்படி ப்ரதிபத்தி பண்ணுவதாலும், இவனுக்கு ஆசார்யத்வம் ஸித்திக்கிறது. இப்படியல்லாமல் இருவரும் மாறுடி நினைத்தால் இருவர் ஸ்வரூபமும் அழியும்.


எல்லாவிதமான ஸம்பத்துக்களையும்விட ஸ்ரீ வைஷ்ணவ சிஷ்ய ஸம்பத்தே ஆசார்யபதம் வகிப்பவனுக்கு மிகச்சிறந்தது. நாஸ்திகம் அதிகமாகத் தலையெடுத்தாடும் இக் காலத்தில் இப்படிப்பட்ட ஸம்பத்தை உடையவர்கள் மிகுந்த கவனத்துடன் சிஷ்ய ஸம்பத்தை ரக்ஷிக்க வேண்டும். இப்படி ரக்ஷை ஏற்படுவதற்காக, தமது ஸ்தானத்தை அலங்கரிக்கும்படி பவிஷ்ய தாசார்யர்களை (குமாரர்களை) ஸத்வித்யையும் ஸதாசாரமும் நிறைந்தவர்களாய் பால்யம் முதலே ஆக்கி வைத்து ஸ்ரீவைஷ்ணவத்தைப் பேணி வளர்க்க வேண்டும். ''ஆசாரியன் சிஷ்யனைக் கண்டால் அபிமத விஷயத்தைக் கண்டாற்போல மிகவும் ஆதாரத்துடனிருக்க வேண்டும்; சிஷ்யன் ஆசாரியனைக் கண்டால் பசித்தவன் சோற்றைக் கண்டாற்போல மகிழ வேண்டும்'' என்று நம்பூருவர்கள் சிக்ஷித்துள்ளார்கள்.

விலக்ஷணமான ஸ்தானங்களில் ஆசாரியர்கள் தம்மிருப்பிடத்தை க்ருஹம் என்றோ வீடு என்றோ சொல்லாமல் திருமாளிகை என்றே வ்யவஹரிப்பதற்கு காரணம் தானும் அங்கு சிஷ்யனாகவே எண்ணுகையாலே. சிஷ்யர்களையும் திருமாளிகை சிஷ்யர்கள் (தமது தனிப்பட்ட சிஷ்யர்கள் என்ற நினைவு கூடாது) என்றே சொல்லுவர்கள். இந்த ஸம்ப்ரதாயம் நடையாடுகையால் தான், தேஹஸம்பந்தத்தையிட்டு யாரையும் வ்யவஹரிக்காமல் ஆசாரியர்கள் ''ஸ்வாமி,'' ''சின்ன ஸ்வாமி'', 'அம்மங்கார்'', ''சின்னம்மங்கார்'' என்பனவான கௌரவமான சப்தங்களால் வ்யவஹரிப்பது அநுஷ்டானமாயுள்ளது. சிஷ்யர்களையும் தமக்கு ஸப்ரம்மசாரிகளாகவே நினைத்திருப்பது ஆசார்ய லக்ஷணம்.

தமதுபதேசமாத்ரமல்லாமல் தமது அநுஷ்டானத்தைப் பார்த்து அதன்படி சிஷ்யர்கள் தமது அநுஷ்டானத்தை அமைத்துக் கொள்ளும்படி ஆசாரியர்கள் நடந்து கொள்ளவேணும். லோகத்தில் ஒரு பழமொழி: ''வாத்யார் நின்று நீர்கழித்தால் பையன் ஓடிக்கொண்டே அதைச் செய்வான்'' என்று. தன்னைப் பின் பற்றியதால் சிஷ்யன் துராசாரத்தையுடையவனானான் என்ற அவத்யம் வரும்படி எந்த ஆசார்யனும் நடந்துகொள்ளலாகாது. புத்ரஸம்பத்துள்ளவர்கள்—குறிப்பாக ஆசார்யர்கள்—ஒரு குமாரனையாவது ஆங்கிலப்பள்ளிக்கனுப்பாமல், ஸத்ஸஹவாஸமாக, குருகுலவாஸமாக, ஒரு நல்ல வித்வானிடம் ஆத்ம வித்யையைக் கற்க வைக்க வேணும். அதாவது காவ்ய நாடகங்கள் மூலம் நல்ல ஸம்ஸ்க்ருத பாஷா ஞானம், அருளிச் செயல், உபயுக்தவேதபாகம் (சந்தை), திருமந்த்ரார்த்தம், ஸ்ரீவசநபூஷணம் முதலான ரஹஸ்ய க்ரந்த பாராயணம், அருளிச்செயல், ரஹஸ்யக்ரந்த வ்யாக்யானங்கள், இவற்றில் ப்ரவேசம் இவற்றைச் சிறு பிராயத்திலேயே பெறும்படி செய்து, அறியாக்காலத்தே அடிமைக்கணன்பு செய்வித்து என்னும்படி ''நாம் ஸ்ரீமந்நாராயணனுக்கே சேஷப்பட்டவர்கள்; அவனுக்கு மங்களாசாஸனம்தான் நமக்கு முதலான கர்த்தவ்யம்'' என்ற எண்ணம் ஆழ்ந்து வேரூன்றும்படி பண்ணி, அஸத் ஸஹவாஸமும் தேவதாந்தரபஜனமும் துளியும் தீண்டாதபடி ரக்ஷித்து வைக்க வேண்டும். எல்லார் சரித்திரமும் இப்படி அமையும்படி ஸ்ரீ அழைத்து வாழ்வித்தவர் அநுக்ரஹிக்க வேண்டும்.

ஸர்வ மங்களாநி பவந்து.

acharya.org



அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ உ.வே.கோ.க.வா.அ.
குமாரவேங்கடாசார்ய ஸ்வாமி

திருநக்ஷத்ரத்தனியன்

துர்மதௌ கார்த்திகே மாஸி க்ருத்திகாதார ஸம்பவம்
வாதூலார்ணவ பூர்ணேந்தும் வேங்கடார்யமஹம் பஜே.

ஆசார்ய பரம்பரைத் தனியன்

தாஶரத்யார்யதநயம் ஸ்ரீசைலார்ய பதாஶ்ரயம்
ஸ்ரீவேங்கடகுரும் வந்தே சீலாதி குணஸாகரம்

வாழி திருநாமம்

கார்த்திகையில் கார்த்திகைநாள் சிறக்கவந்தோன் வாழியே
கச்சிப்பே ரருளாளன் அடிபணிவோன் வாழியே
சீர்த்திகழ் ஸ்ரீவசனப் பொருள்விரிப்போன் வாழியே
சீர்பெறு வாதூலகுலம் செழிக்கவந்தோன் வாழியே
தீர்த்தன் திருவரங்கன் தொண்டில் நின்றோன் வாழியே
திகழ்தரு சீபாடியத்தைப் புகழுபவன் வாழியே
பச்சை வாரணம் கூரம்பொலியவைத்தோன் வாழியே
புகழ்சேர் குருவரர் வேங்கடார்யர் வாழியே

கச்சிநகர் வாழ கரிவரதர் தாம் வாழ
உச்சிவைக்கும் மாறனடிச்! சீர்வாழ-மெச்சுபுகழ்
மன்னுலகோர் வாழ முதலியாண்டான் ஸ்வாமியே
இன்னமொரு நூற்றாண்டிரும்.

சரமஶ்லோகம்

அப்தே தாத்ரு ஸுநாமகே திநமணௌ மீநம்கதே பூர்வகே
பல்குந்யுத்தர பூர்ணிமாதிதியுதே பாநோர்திநே ஸம்யுதே ।
ஜ்ஞாநீ ஶீலகுணாகரோ குருவரோ வாதூலவம் ஶாப்திஜோ
த்யாயந் தாஶரதிம் பரம் பதமகாத் ஸ்ரீவேங்கடார்யோ மஹாந் ॥

தாதுவர்ஷே மீநஶுக்ல பௌர்ணமாஸ்யாம் ரவேர்திநே ।
வாதூல வேங்கடாசார்ய: ஸ்வாசார்ய சரணவகாத் ॥

acharya.org

Sri Mudaliandan Swami Thirumaligai

Singaperumal Koil

Sathabisheka Mahothsava Committee

1. Sri. Ue.Ve.K.K.V.V. Ramanujachar Swamy
2. K.S.Srinivasan
3. Kadalazhi Srinivasan (Sri Karayam)
4. S.Venkatesan
5. A.G.Purushothaman
6. K.Sampath kumar
7. P.T.Seshadri
8. P.K. Raman
9. Madhavan
10. L.Vaideghi
11. R.Venkatachar
12. Varadachar
13. R.S.Srinivasan
14. Madusudanan
15. Kandadai Sridharan
16. R.Narayanan
17. Srivatsan
18. Gunaseelan
19. P.S.Anchaneyalu Chetty
20. Sugendran

SRI DASARATHY TRUST (REGD.)

Shri K.K.V.A. Ramanujachar Swamy
President

COMMITTEE MEMBERS :

Shri R.Varadhachari
Shri R.Venkatachari
Vice-Presidents

Shri. A.G. Purushothaman
Secretary

Shri P.K. Raman
Joint-Secretary

Shri. R.S.Srinivasan
Treasurer

Shri Kadalazhi Srinivasan
Srikarayam

Shri A.K. Alagia Singam
Addl. Srikarayam

TRUSTEES:

Shri K.Sridhar

Shri P.Sampathkumar

Shri S.Venkatesan

Shri P.T. Seshadri

Shri V. Gunaseelan

Shri M.S.P. Madhavan

Shri P.S. Anchaneyalu Chetty

Smt. L. Vaideghi

acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீவேங்கடகுரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்
ஸ்ரீவைஷ்ணவசிரோபூஷா ஸ்ரீராமாநுஜபாதுகா ।
ஸ்ரீவாதூல குலோத்தம்ஸ: ஸ்ரீ தாசரதிரேததாம் ॥

சதாபிஷேக மஹோத்சவ வைபவம்

கண்டோம் கண்டோம் கண்ணுக்கு இனியன கண்டோம்

ஸ்ரீராமாநுஜ யோகீந்த்ர கருணா பரிப்ரும்ஹிதாம் ।
ஶ்ரேயஸீமநகாம் வந்தே ஸ்ரீமத் வாதூல ஸந்ததிம் ॥

என்பது தண்ணரங்கன் புகழ் சாந்த குண தீவன் கருணை மணவாள மாமுனிகளின் பொய்யில்லா திருவாக்கு.

எம்பெருமானாரான ஸ்ரீ ராமானுஜருடைய கருணையால் பெருகியதும், சிறந்ததும், குற்றமற்றதுமான ஸ்ரீ வாதூல வம்சத்தை வணங்குகிறேன் என்பது மேலே கண்ட ஸ்லோகத்தின் பொருளாகும்.

வித்யா விமுக்தி ஜநநீ விநயாதி கத்வம்
ஆசார ஸம்பத் அநுவேல விகாஸ ஶீலம்
ஸ்ரீ லக்ஷ்மணார்ய கருணா விஷயீ க்ருதாநாம்
சித்ரம் நதாஶரதி வம்ச ஸமுத் பவாநாம்

(மோக்ஷத்திற்கு உறுப்பான ஜ்ஞாநம், சிறந்த அடக்கம், அநுஷ்டானச் செல்வம், மேன் மேலும் வளரும் குணம். ஆகியவை எம்பெருமானார் கருணைக்கு இலக்கான முதலியாண்டான் வம்சத்தினர்க்கு வாய்த்துள்ளதில் வியப்பில்லை)

என்பதற்க்கேற்ப எழுந்தருளியிருந்து நம்மையெல்லாம் அழைத்து வாழ்வித்தவர் திருவடிகளில் அழைத்து வாழ்வித்தவர் கருணையங்கடலான நம் ஸ்வாமி.

மணவாள மாமுனிகள் அருளியது போல அனைத்து குண நலன்களை பெற்றிருந்த நம் ஸ்வாமி (ஸ்ரீ குமார வேங்கடாசார் ஸ்வாமி) ஏள்ளியிருந்து சதாபிஷேக மஹோத்சவம் ப்ராப்தமாக நமக்கு வழியில்லை. இருப்பினும் ஸ்வாமியின் பெருமைக்கேற்ப, நம் திருமாளிகையின் வைபவத்திற்கேற்ப நம் ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்சவத்தை அதி விமரிசையாக நடப்பித்து வைத்தான் நம் அழைத்து வாழ்விக்கும் நம்பெருமான்.

நம் வர்த்தமான ஸ்வாமி இம்மஹோத்சவம் மிகச்சிறந்த முறையில் நடைபெற வேண்டும் என திருவுள்ளம் பற்றி எம்பெருமானிடம் சங்கல்ப்பிக்க, ஆசார்யன் இட்ட கட்டளையை நிறைவேற்றிட ஸ்வாமியின் திருவடி சம்பந்திகளும்,

acharya.org

அபிமானிகளும் சேர்ந்து பல கூட்டங்களை (Meeting) நடப்பித்து, அதற்காக ஒரு குழுவினை ஸ்வாமி தலைமையில் அமைத்தனர். அதன்படி சதாபிஷேக மஹோத்சவ கமிட்டி ஒன்று ஸ்வாமியினால் உருவாக்கப்பட்டது. திருமாளிகையில் சதாபிஷேக மஹோத்சவத்தை ஒட்டி ஒவ்வொரு குழுவினரிடம் ஒவ்வொரு பொறுப்பு ஸ்வாமியினால் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி, ஸ்வாமியின் கார்த்திகையில் கார்த்திகை மஹோத்சவம், வித்வத்சதஸ், விருது வழங்குதல், மலர் வெளியீடு, திருமாளிகை நித்யானுஸந்தான ஒலிநாடா, முதலியாண்டான் வைபவ ஒலிநாடா, உபன்யாசங்கள், சதகலச திருமஞ்சனம், லோக க்ஷேமார்த்தமான ஸ்ரீ ஸுதர்சன ஹோமம், மண்டகப்படி உத்சவம், ஜீயர் ஸ்வாமிகளின் மங்களாசாசன வைபவம், இன்னிசைக் கச்சேரிகள், சம்ப்ரதாய விஷயமான நாடகம், உபய வேத பாராயணம், லக்ஷார்ச்சனை, ஸ்வாமி அண்ணாவிலப்பனுக்கு புறப்பாடு, சிங்க வேள்குன்ற சிங்கபெருமானுக்கு சாளக்ராம ஹாரம், என்று பலவித வைபவத்துடன் நடைபெற்றதை கண்டவர்கள், இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன் என்றுரைப்பர். இனி சதாபிஷேக மஹோத்சவ கொண்டாட்டங்கள் நடைபெற்ற சுபதினங்களை நினைவு கூறுவோம்.

17-11-2001 - அன்று நம் ஸ்வாமி சிங்கபெருமாள் கோயில் திருமாளிகையிலிருந்து புறப்பட்டு, வேளச்சேரி திருமாளிகைக்கு ஏளிய பின் பற்பல சிஷ்யர்கள், அபிமானிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க ஸ்வாமி அண்ணாவிலப்பன், நங்கநல்லூர் எழுந்தருளி பல மண்டகப்படிகளை கண்டருளினார். அன்று இரவு மீண்டும் வேளச்சேரி திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

18-11-2001 - ஞாயிறு (திருமூல திருநக்ஷத்திரம்) அன்று நம் திருமாளிகை எம்பெருமானான ஸ்ரீ ப்ரணதார்த்தி ஹரவரதன் மஹாவித்வான் ஸ்ரீ. உ.வே. கீர்த்தி மூர்த்தி காரப்பங்காடு ஸ்வாமி திருமாளிகைக்கு எழுந்தருள, ஸ்ரீ. உ.வே. காரப்பங்காடு ஸ்வாமியின் குமாரர்களும், குடும்பத்தினரும், பூர்ண கும்பத்துடன் நம் ஸ்வாமியையும், எம்பெருமானையும் ஏள பண்ணினர்.

அங்கு காலை 10.00 மணிக்கு **ஸ்ரீ ப்ரணதார்த்தி ஹர வரத வித்வத் சதஸ்** தொடங்கியது.

ஸ்ரீ ப்ரணதார்த்தி ஹர வரத வித்வத் சதஸில், ஸ்ரீ. உ.வே. ஸ்ரீரங்கம் நரஸிம்மாசார் ஸ்வாமி, ஸ்ரீ Dr. K.K.A. வேங்கடாசார் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி க்ருஷ்ணன்ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. குமாரவாடி ராமானுஜாசார் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. V.V.R. ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. வைத்தமாநிதிஸ்வாமி, ஸ்ரீ.உ.வே. கபிஸ்தலம் ஸ்ரீநிவாசாசார் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. K.B. தேவராஜன் ஸ்வாமி முதலானோர் பல விஷயங்களை அருளிச் செய்ய சதஸ் மாலை 6.00 மணிக்கு பூர்த்தியானது. சுமார் ஏழு மணி நேரத்திற்க்கும் மேலாக சதஸ் நடைபெற்றது. சதஸின் முடிவில் நடைபெற்ற டோலோத்வத்தில் காரப்பங்காடு ஸ்வாமியின் பௌத்ரி செல்வி ராதா பார்த்தசாரதியின் இன்னிசைக் கச்சேரி செவிக்கின்பம் பயங்கும் படியாக அமைந்தது. ஸ்ரீ காரப்பங்காடு ஸ்வாமியின் குமாரர்களும், குடும்பத்தினரும், இம்மஹோத்சவ வைபவத்தின் ஒரு பகுதியான வித்வத் சதஸ் ஸ்வாமியின் திருமாளிகையில்

acharya.org

நடைபெறுவதற்காக செய்த உதவிகள் வார்த்தைகளால் கூற இயலாது. காரப்பங்காட்டிற்கும், நம் திருமாளிகைக்கும் உள்ள சம்பந்தம் வாசாம கோசரம். மஹா வித்வான் காரப்பங்காடு ஸ்ரீ. உ.வே. தேசிக வரதாசார் ஸ்வாமியின் மணி விழா இவ்வருடம் நடைபெறுவதை ஒட்டி, ஸ்ரீ. உ.வே. தேசிக வரதாசார் ஸ்வாமியின் **மணிவிழா மலர் (120-வது திருநக்ஷத்ரம்)** ஒன்று ஸ்ரீ. உ.வே. V.V.R. ஸ்வாமியினால் யதிராஜ பாதுகா வெளியீடாக, நம் வர்த்தமான ஸ்வாமி வெளியிட, காரப்பங்காடு வேங்கடாசார் ஸ்வாமியின் குமாரர் ஸ்ரீ. உ.வே. சிங்கராசார் ஸ்வாமி பெற்றுக் கொண்டார். இரவு 8.00 மணிக்கு மங்கள ஹாரத்தியுடன் வித்வத் சதஸ் பூர்த்தியாயிற்று. ஸ்வாமிக்கு க்ரமமான மரியாதைகள் பண்ணப்பட்டது. இரவு வேளச்சேரி திருமாளிகைக்கு ஸ்வாமி எழுந்தருளினார்.

19.11.2001 - (திங்கள்) - நம் பெரிய ஸ்வாமி லோக க்ஷேமார்த்தமாக பல ஆண்டுகள் நடத்தி வந்த ஸ்ரீ ஸுதர்சன ஹோம மஹாயக்ஞம் இன்று நடைபெற்றது. திரளான சிஷ்யர்களும், அபிமானிகளும் கலந்து கொண்டு சிறப்பித்து, ஸ்ரீ ஸுதர்சனாழ்வான் அனுக்ரஹத்திற்கு பாத்ரர் ஆயினர். நம் வர்த்தமான ஸ்வாமி முன்னின்று நடத்தி தந்தருளியது நம்முடைய பாக்யமேயாகும்.

20-11-2001 - (செவ்வாய்) இன்று ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெற்றது. அனைவர்க்கும் ஓர் டாலர் (பெரிய பிராட்டியார் உருவம் பொறித்தது) வழங்கப்பட்டது. மாலை ஸ்ரீமதி மீரா குழுவினரின் வீணா கான இன்னிசைச் கச்சேரி நடைபெற்றது.

21-11-2001 - இன்று முதல் 10-நாட்கள் சதாபிஷேக மஹோத்சவம் தொடங்கியது. 21.11.2001 - அன்று தொடங்கி 30.11.2001 **(வ்ருச்சிக-க்ருத்திகா)** (கார்த்திகையில் கார்த்திகை) முடிய அருளிச்செயல் கோஷ்டி அசீதி த்வய பாராயணம், முதலியன க்ரமமாக காலையும், மாலையும் நடைபெற்றது. பற்பல திவ்ய தேசங்களிலிருந்து, உபய வேதத்திற்க்கும் ஸ்வாமிகள் எழுந்தருளி சிறப்பாக நடத்தி தந்தருளினர். இம்மஹோத்சவத்தின் அனைத்து நாள்களிலும் இரு வேளையும், விசேஷமான ததீயாராதனம் நடைபெற்றது.

இன்று 21-11-2001 - முதல் ஸ்ரீ. உ.வே. காழியூர் தேவராஜன் ஸ்வாமி முன்னின்று திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி எம்பெருமான் திருவடி வாரத்தில் ஸ்ரீ வானமாலை மடத்தில் இரு உபன்யாசமாக (ஒவ்வொரு நாளும்) நடத்த ஏற்பாடு செய்திருந்தார். இதில். ஸ்ரீ. உ.வே. ஸ்ரீரங்கம் நரஸிம்மாசார் ஸ்வாமி, Dr. V.V.R. ஸ்வாமி, வானமாமலை தெய்வநாயகம் ஸ்வாமி, டாக்டர் K.A. மணவாளன் ஸ்வாமி, காழியூர் ஸ்ரீராமன் ஸ்வாமி, டாக்டர் M.A. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி, ஸ்ரீ.உ.வே. பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி, ஸ்ரீ.உ.வே. T.A. வரதராசர் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. வானமாமலை N.S. க்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிதி ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. அரவிந்த லோசனன் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி க்ருஷ்ணன் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. K.B. தேவராஜன் ஸ்வாமி முதலானோர் பல தலைப்புகளில் உபன்யசிக்க திரளான பெருமக்கள் உபன்யாசத்தை செவிமடுத்தனர். முதல் நாளும், முடிவு நாள் அன்றும் நம் ஸ்வாமி எழுந்தருளி அனுக்ரஹித்தார். ஸ்ரீ. உ.வே. K.B. தேவராஜன் ஸ்வாமிக்கு உடுத்திகளைந்த பீதகவாடையும்,

acharya.org

பத்ம மாலையும், மாலை ப்ரஸாத பஹுமானங்களை நம் ஸ்வாமி அனுக்ரஹித்தார். இவ்வுபன்யாசம் நடைபெற ஸ்ரீ வானமாமலை மடத்தை தந்தருளிய ஜீயர் ஸ்வாமிக்கும், மடத்தின் நிர்வாகிகளுக்கும் அடியோங்களுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

23-11-2001 - இன்று நம் திருமாளிகையின் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய நாள். ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஸ்ரீ கலியன் ராமானுஜ ஜீயர் ஸ்வாமி நம் ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்சவத்தில் கலந்து கொள்வதற்காகவே வானமாமலையிலிருந்து, சென்னை வந்து சேர்ந்தார். இன்று மாலை வேளச்சேரி, திருமாளிகைக்கு ஸ்ரீ வானமாமலை ஸ்வாமி எழுந்தருளி மங்களாசாசனம் செய்தருளினார். திருமாளிகை வாயிலில் ஸ்ரீசடாரி மரியாதையுடனும் பூர்ணகும்ப மரியாதைகளுடனும், ஸ்ரீ. உ.வே. கூரம்பாஷ்யமய்யங்கார் ஸ்வாமி முதலானோர்களால் வரவேற்கப்பட்டு, திருமாளிகைக்கு எழுந்தருளி ஸ்ரீ முதலியாண்டான் திருமாளிகைக்கும், ஸ்ரீ மடத்திற்கும் உள்ள தொடர்பை மிகப் பெரிய அளவில் கூடியிருந்த கோஷ்டியின் நடுவே உபன்யஸித்தார். பின்னர் ஸ்வாமியின் திருமுன் ஸ்ரீ பராங்குச நாடகம் (நம்மாழ்வாரின் சரித்திரம்) மிகவும் சிறிய குழந்தைகள் நாடகமாக நடித்து காட்டி ஸ்வாமியின் க்ருபையை பெற்றனர். அன்று நடைபெற்ற உபய வேத பாராயண கோஷ்டியை தொடங்கி வைத்தருளினார். இவ்வைபவத்தில் Dr. V.V.R., ஸ்ரீ K.B. தேவராஜன் ஸ்வாமி முதலானோர் ஸ்வாமிக்கு ஸ்வாகதம் செய்தனர். ஸ்ரீ வானமாமலை ஸ்வாமி நம் ஸ்வாமியை பஹுமானித்தார். ஸ்ரீ வானமாமலை ஸ்வாமிக்கு க்ரமமான மரியாதைகள் செய்விக்கப்பட்டது. என்னையாளுடையப்பன் ப்ரஸாதமாக பெரிய மாலை ஒன்று ஸ்ரீ வானமாமலை ஸ்வாமிக்கு பஹுமானம் ஆயிற்று.

25-11-2001 - ஞாயிறு இன்று ஓர் மஹத்தான நன்னாள். ஆம். நம் ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்சவத்திற்காக நம் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஜீயர் ஸ்வாமிகள் சென்னை தியாகராயநகர், ஸ்ரீ Y.G.P. ஆடிடோரியத்தில் நடைபெற்ற மங்களாசாசன வைபவ நிகழ்ச்சியில் எழுந்தருளியிருந்து மங்களாசாசனம் செய்தருளினர். ஆயிரக்கணக்கான ஸ்ரீவைஷ்ணவர்கள் இம்மஹோத்சவத்தில் கலந்து கொண்டு, முக்கோல் பகவர்களை ஒரே மேடையில் காணும் பாக்யம் அடைந்தனர். முதலில் திருமாளிகையின் ஆஸ்தான விதூஷி ஸ்ரீமதி சுகுணா புருஷோத்தமனின் சிஷ்யைகள் "ஸுநாதம்" குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும், பின்னர் ஸ்ரீ P.T. சேஷாத்ரியின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. காலை 11.00 மணிக்கு துவங்கிய மங்களாசாசன வைபவம் மாலை 4.30 மணிவரை நடைபெற்றது. இம்மஹோத்சவத்திற்கு எழுந்தருளிய அனைத்து ஜீயர் ஸ்வாமிகளும் பூர்ண கும்ப மரியாதைகளுடனும், ஸ்ரீ வைஷ்ணவ திரளாலும் வரவேற்க்கப்பட்டதை கண்டவர்கள் மிகவும் பாக்யவான்களே.

முதலில் வேதங்களை கொண்ட ஸ்துதி (Vedic Prayer)யுடன் விழாவானது தொடங்க, ஸ்ரீ K.B. தேவராஜன் வரவேற்புரை நிகழ்த்த, நம் ஸ்வாமி அனைவரையும் வரவேற்று, அனைவருக்கும் சால்வைகள் போர்த்தி, க்ருதக்ஞதயை தெரிவித்தார்.

acharya.org

பின்னர் சதாபிஷேக மஹோத்சவத்தை முன்னிட்டு மலர்கள், ஒலி நாடாக்கள் வெளியிடப்பட்டது.

வெளியிடப்பட்டவைகளும், வெளியிட்டு அனுக்ரஹித்தவர்களும்

1) முதலில் திருமாளிகையின் சார்பாக சிறப்பு மலரை ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஸ்வாமி வெளியிட நம் ஸ்வாமி பெற்றுக் கொண்டார்.

2) யதிராஜ பாதுகா சிறப்பு மலரை எம்பார் ஜீயர் வெளியிட K.B. தேவராஜன் பெற்றுக் கொண்டார்.

3) ஸ்ரீகுமார லோகாசார்ய பஞ்சாசத் (ஸ்ரீ வேதாந்த தேசிகன், பிள்ளை லோகாசார்யர் விஷயமாக அருளியது) இது வரை ஓலைச்சுவடியில் இருந்தது. தற்பொழுது, விளக்கவுரையுடன், வெளியிடப்பட்டது. இதனை மேல்கோட்டை சம்பத் குமார யதிராஜ ஜீயர் வெளியிட ஸ்ரீ வேளுக்குடி க்ருஷ்ணன் பெற்றுக்கொண்டார்.

4) எம்பார் வைபவம் (Dr. V.V.R. எழுதியது) எம்பார் ஜீயர் ஸ்வாமி வெளியிட, இதனை ஸ்ரீ. உ.வே. கபிஸ்தலம், ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி பெற்றுக்கொண்டார்.

5) ஸ்ரீமுதலியாண்டான் வைபவம் (ஒலி நாடா) ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி க்ருஷ்ணன் ஸ்வாமி (Double Album Cassettes) வழங்கியதை மேல்கோட்டை ஜீயர் வெளியிட திருமதி Y.G.P. அவர்கள் பெற்றுக் கொண்டார்.

6) முதலியாண்டான் திருமாளிகை நித்யானுஸந்தானம் (ஒலிநாடா) ஸ்ரீ. P.K.வீரராகவன் (ஸுரேஷ் ஸ்வாமியின் குரலில் பதிவு செய்யப்பட்டதை ஸ்ரீ காஞ்சீ அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமி வெளியிட ஸ்ரீமான் P. ஸ்ரீநிவாசன் (ஆடிட்டர்) பெற்றுக் கொண்டார்.

7) நரஸிம்மாவதார வைபவம் (வெளியீடு - ஸ்ரீ. உ.வே. காரப்பங்காடு ஸ்வாமியின் தௌஹித்ரன் - ஸ்ரீமான் முரளி) வீறுடைய கார்த்திகையில் கார்த்திகை நன்னாள் அன்று நம் ஸ்வாமியினால் வெளியிடப்பட்டது.

பின்னர் நம் தரிசனத்திற்காக பாடுபட்டு வரும் நிறுவனங்களில் சிலவற்றிற்கு நம் திருமாளிகையின் சார்பாக **"ஸ்ரீராமானுஜ பாதுகா ஸேவக"** என்னும் விருது வழங்கப்பட்டது. இவ்விருது எவ்வித பேதமும் இல்லாமல் நம் ஸ்வாமி மனோரதித்த படி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விருது பெற்ற நிறுவனங்களின் பெயர்கள்

1) ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் (மாத இதழ்) (புத்தூர் - திருச்சி)
2) மேல்கோட்டை ஸம்ஸ்க்ருத ஆராய்ச்சிக்கழகம் (மைசூர்)
3) ஸ்ரீ அஹோபில மட ஓரியண்டல் மேல் நிலைப்பள்ளி, சென்னை - 33
4) திருநாராயண ஸ்வாமி பாடசாலை (ஜல்லடம் பேட்டை) சென்னை
5) நங்கநல்லூர் ஸ்ரீபாதம் தாங்கிகள் சங்கம் - சென்னை
6) ஸ்ரீ வைணவ பேரவை - சென்னை

acharya.org

ஆகிய ஆறு நிறுவனங்களுக்கு எம்பெருமானாரின் திருவுருவம் பதித்த, (Shield) மற்றும் ரூபாய் 1,000 - பண முடிப்பாக ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது.

பின்னர் விருது பெற்ற நிறுவனங்களின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீரங்கம் நரஸிம்மாசார் ஸ்வாமி "ஸ்ரீ ராமானுஜ பாதுகா" என்ற தலைப்பிலும், "ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ" க்ருஷ்ணமாசார்யார் ஸ்வாமி முதலியாண்டானைப் பற்றிய சரித்திர குறிப்புகள் என்ற தலைப்பிலும், டாக்டர் M.A. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி சதாபிஷேகம் கண்டருளும் ஸ்வாமியின் "கைங்கர்ய ஸ்ரீ" விஷயமாகவும், ஸ்ரீ. உ.வே. வேளுக்குடி க்ருஷ்ணன் ஸ்வாமி முதலியாண்டான் வைபவம் பற்றியும் உபன்யஸித்தனர். இவ்வைபவத்தில் மேல்கோட்டை தாதாசார் ஸ்வாமி எழுந்தருளி உபன்யஸித்தார்.

பின்னர் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஜீயர் ஸ்வாமிகளின் மங்களாசாசன உரை நிகழ்த்தப் பெற்றது.

ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ஸ்வாமி ஒன்றான வானமாமலை ஸ்வாமியின் ப்ரபத்தியை கொண்டு, நம் திருமாளிகையுடன், வானமாமலை மடத்திற்குள்ள சம்பந்தத்தையும், ஸ்ரீ ராமானுஜ பாதுகா மஹிமை பற்றியும் எடுத்தியம்பினார்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ - ஸ்ரீபெரும்பூதூர் வரத யதிராஜ ஜீயர், ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர், காஞ்சி அழகிய மணவாள ஜீயர், ஆழ்வார் திருநகரி எம்பெருமானார் ஜீயர், மேல்கோட்டை யதிராஜ ஜீயர் - முதலியோரும் மங்களாசாசன அனுக்ரஹ பாஷணம் செய்தருளினர்.

தன் திருமேனி அசக்தியையும் பொருட்படுத்தாமல் சுமார் 5 மணிநேரம் எழுந்தருளியிருந்து, இம் மஹோத்சவத்தை நறுமணமுள்ளதாக மாற்றிய ஜீயர் ஸ்வாமிகளின் திருவடிகளில் மனமார்ந்த க்ருதக்ஞதயை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விழாவில் சக்ரிகா ஆடியோஸ் உரிமையாளர் ஸ்ரீ கஸ்தூரி ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. ஸுரேஷ் ஸ்வாமி, விழா நடைபெற்ற மேடையில் 108 திவ்யதேச எம்பெருமான்களையும், அவதார ஸ்தல ஆழ்வார், ஆசார்யர்களின் திருவுருவப் படங்களை அலங்கரித்து, மேடையை பொலிவு பெறச் செய்த ஸ்ரீ. உ.வே. K.E.B.ரங்கராஜன் ஸ்வாமி ஆகியோர்கள் சால்வை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

முடிவாக விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் விசேஷமான திருப்பணியாரங்கள் வழங்கப்பட்டது.

முடிவில் ஸ்ரீமதி வைதேஹி குழுவினரின் மங்களத்துடனும், ஸ்ரீ கார்யம் ஸ்ரீ உ.வே. கடலாழி ஸ்ரீநிவாசன், ஸ்ரீ P.T. சேஷாத்ரி ஆகியோரின் நன்றி தெரிவித்தலுடன் விழா தலைக்கட்டிற்று. இந்நிகழ்ச்சி முழுவதையும் கோபுர தரிசனம் Jan - 2002 மாத இதழில் வெளியிட்டுள்ளனர். அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றிகள்.

30-11-2001 - வீறுடைய கார்த்திகையில் கார்த்திகை நன்னாள்

நம் ஸ்வாமி சதாபிஷேக மஹோத்சவ திருநக்ஷத்திரம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது. பற்பல திவ்யதேச, அவதார ஸ்தல, அபிமான ஸ்தல

acharya.org

பஹுமானங்கள் ஸ்வாமியின் திருவுருவ படத்திற்கு பஹுமானமாக சமர்ப்பிக்கப்பட்டது. காலை 9.00 மணிக்கு சாற்றுமுறை நடைபெற்றது. தீர்த்தம், ஸ்ரீபாத தீர்த்தம், ஸம்பாவனை நடைபெற்று ததீயாராதனம் விசேஷமாக நடைபெற்றது. ஸ்ரீ. உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் அப்பன் ஸ்வாமி, சோளசிம்ஹபுரம் தாதாசார் ஸ்வாமி முதலானோர் கோஷ்டியை அலங்கரித்து சதாபிஷேகம் கண்டருளும் ஸ்வாமியின் வைபவத்தை பரக்க உபன்யஸித்தனர். அனைத்து சதாபிஷேக மஹோத்சவ கொண்டாட்டங்கள் முடிந்து ஸ்வாமி மாலை 3.00 மணி அளவில் சிங்கபெருமாள் கோயில் திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

இவ்வைபவத்தினை ஒட்டி பாடலாத்ரி எம்பெருமானுக்கு ஓர் சாளக்ராம ஹாரம் திருமாளிகை மூலமாக சமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ. உ.வே. பார்த்தசாரதி பட்டர் உடனிருந்து நடத்தி வைத்தார். பின்னர் அண்ணாவிலப்பனுக்கு பாடலாத்ரி எம்பெருமானின் பஹுமானம், ஸ்ரீ உ.வே. பார்த்தசாரதி பட்டர் ஸ்வாமியினால் செய்விக்கப்பட்டது. இரவு திருவீதி புறப்பாடு முடிந்து உபயகாரர் மரியாதை செய்யப்பட்டது.

"தன்னாரியனுக்கு தான் அடிமை செய்வது" என்ற விசதவாக் சிகாமணியின் அருளிச் செயலை திருவுள்ளம் பற்றுவது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். இம்மஹோத்சவ வைபவம் இத்துணை சிறப்பாக நடைபெற உழைத்தும், ஒத்துழைத்தும், பொருள்கொடுத்தும், அடியோங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தவர்களுக்கு என்றும் எங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இம்மஹோத்சவத்திற்காக எழுந்தருளி சிறப்பித்த ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீ. உ.வே. அப்பன் ஸ்வாமி, திருமணிஸ்வாமி, தொட்டயாசார் ஸ்வாமி, இளையவல்லி ஸ்வாமி, தாதாசார் ஸ்வாமி, சிறுபுலியூர் ஸ்வாமி, கோயிலண்ணன் ஸ்வாமி, முதலான ஸ்வாமிகள் திறத்தில் தலையல்லால் கைமாறில்லோம்.

மேலும் ஸ்ரீ Y.G.P. ஆடிடோரியத்தை எவ்வித நிபந்தனையுமின்றி கொடுத்து உதவிய ஸ்ரீமதி Y.G.P. அவர்களுக்கும், அவரை சார்ந்த மற்ற உறுப்பினர்களுக்கும், மலர்களை அச்சிட்டு தந்துதவிய Kopparam Printers திரு. பத்ரிநாராயணனுக்கும், Guru Achagam திரு. கிருஷ்ணன் அவர்களுக்கும் விருதுகளை வழங்கிட உதவி புரிந்த ஸ்ரீ. உ.வே. சம்பத் ஸ்வாமி, (அடையார்) ஸ்ரீ. உ.வே. குணசீலன் ஸ்வாமி, Vedic Bridge (U.S.A.) விளம்பரங்கள் உதவிய மஹனீயர்கள், வாங்கி கொடுத்த பெருமக்கள், ஆலோசனைகள் பல வழங்கி வழிகாட்டிய பெரியோர்கள், ஆண்டாள் கோஷ்டியினர், திருமாளிகை கைங்கர்ய பரர்கள், உபயதாரர்கள், வித்வான்கள், இசை வல்லுனர்கள், ஸ்ரீபாதம் தாங்கிகள், முதலான அனைவருக்கும் சதாபிஷேக மஹோத்சவ கமிட்டியின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவருக்கும் எல்லா மங்களங்களும் பெருகிட ஆசார்ய முகேந ப்ரார்த்தித்து விடை கொள்கிறோம்.

இங்ஙனம்,

சதாபிஷேக மஹோத்சவ
கமிட்டியினர்


acharya.org



ஸ்ரீ கோ. க. வா. அண்ணாவிலப்பன்
குமாரசிங்கராசார்ய ஸ்வாமி



ஸ்ரீ கோ. க. வா. அண்ணாவிலப்பன்
குமாரமுதலியாண்டான் ஸ்வாமி




ஸ்ரீ கோ. க. வா. அண்ணன்
ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி



ஸ்ரீ கோ. க. வா. அண்ணாவிலப்பன்
குமார ஸ்ரீசைலாசார்ய ஸ்வாமி

acharya.org





பெரிய ஸ்வாமிகள் இருவரும்

acharya.org



ஸ்ரீ சைலாசார்ய ஸ்வாமி

acharya.org



அம்மங்கார், இளையஸ்வாமி இவர்களுடன் நமது ஸ்வாமி.

acharya.org



ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமியும் அம்மங்காரும்
குழந்தைப் பருவத்தில் பெரியஸ்வாமி



நமது ஸ்வாமி
(பால்யத்தில் எடுத்த படம்)

acharya.org




குமாரர்களுடன் ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி
பின்னால் ஸ்ரீ மல்லி ராமாநுஜாசாரியர்



பெரியஸ்வாமியும் இளையஸ்வாமியும்


acharya.org





பிங்கள (1978) உடையவர் உத்ஸவத்தில்
ஸ்ரீ பார்த்தஸாரதிஸ்வாமி மங்களாசாஸனம்-ஸன்னிதி பஹுமானங்களுடன் நமது ஸ்வாமி

acharya.org



நமது ஸ்வாமி (இளையஸ்வாமியுடன்)

acharya.org

ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம்




மங்கள மந்த்ர ஸ்நாநம்




நித்ய ஔபாஸனம்

acharya.org



சாற்றுமறை கோஷ்டி




சாற்றுமறை கோஷ்டி

acharya.org




பெருந்தேவித்தாயாரும் பேரருளாளனும்




பேரருளாளன் பஹுமானம்

acharya.org



திவ்யதேச பஹுமானங்கள் ஊர்வலம்



ஸ்வாமி பஹுமானங்கள் பெற்றபின் பெருமாள் ஸன்னிதி
ஸ்ரீவரதராஜ பட்டர் ஸ்ரீசடகோபனை ஸ்வாமிக்கு சென்னிக்கணியாக ஸாதித்தல்

acharya.org



ஸ்ரீ உ.வே. காஞ்சி P.B.A. மஹாவித்வான் ஸ்வாமி
உபன்யாஸம் ஸாதிக்கும் அவஸரம்




திவ்யதேச பஹுமானங்களுடன் ஆசார்ய தம்பதி

acharya.org




தேவப்பெருமாள் இயல்கோஷ்டியில்



மேலமாம்பலத்தில் ஸ்ரீ கோதண்டராமன்
ஸன்னிதி மங்களாசாஸனத்தின் போது வரவேற்பு

acharya.org






பெரியஸ்வாமி ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவ கோஷ்டி

acharya.org



ஸ்ரீ[illegible]ன் ஸன்னிதியில் கைங்கர்யம்



ஸ்ரீகூரத்தாழ்வான் ஸன்னிதியில் கைங்கர்யம்


acharya.org




நம் ஸ்வாமியும் அம்மங்காரும்


acharya.org

ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்சவத்தில் ஜீயர் ஸ்வாமிகளின் மங்களாசாசனம்





acharya.org



ஊர் திருந்தச் சீர்பாதம் ஊன்றிய நம் ஆசார்ய வள்ளல் ஸ்ரீ முதலியாண்டான்
(அவதார ஸ்தல திருநக்ஷத்திர மஹோத்சவத்தில் சேவை)
(பச்சை வாரணம் என்கிற பேட்டை)

acharya.org

ஸ்ரீ:

முதலியாண்டான் வைபவம்

ஸ்ரீமதுபயவே மஹாவித்வான் பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யர் ஸ்வாமி

ஸ்வாமி எம்பெருமானாருக்கு ஸஹோதரிகள் இருவர் - நாச்சியாரம்மை என்றும் தாமரையாளம்மை என்றும். அவர்களுள் மூத்தவருடைய திருக்குமாரர் முதலியாண்டான். பச்சை வாரணப் பெருமாள் கோவிலில் சித்திரை மாதப் புனர்வசு நன்னாளில் தோன்றியவர். பண்டு த்ரேதாயுகத்தில் ராமாவதாரத்தில் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீராமனாகவும் ஆதிசேஷன் லஷ்மணனாகவும் அவதரித்திருந்து, பெருமாள் இளையபெருமாளிடம் ஒழிவில் காலமெல்லாம் வழுவில்லாத அடிமைகளைக் கொண்டு போந்தமை ப்ரஸித்தம். அந்த அவதாரத்தில் ஒரு பரமார்த்தம் பெருமானுடைய திருவுள்ளத்தில் பட்டது; வகுத்த விஷயத்தில் அடிமை செய்வது ரஸமேயல்லது அடிமை கொள்வது நலமன்று என்று பட்டது. அதனால், அந்த ஆதிசேஷனை சேஷியாக வைத்துத் தான் சேஷபூதனாகவிருந்து அடிமை செய்து களிக்கக் காதல் கொண்டு த்வாபர யுகத்தில் அந்த ஆதிசேஷனை நம்பி மூத்த பிரானென்கிற பலராமனாக முன் தோன்றலாய்த் திருவவதரிப்பித்துத்தான் "பல தேவற்கோர் கீழ்க்கன்றாய்" என்று ஆண்டாள் அருளிச் செய்தபடி அவன் தம்பியான க்ருஷ்ணனாகத் தோன்றி, பலராமனுக்கு சேஷித்வத்தையும் காட்டி நின்றவிடத்திலும், செய்து போந்த அதிமானுஷ சேஷ்டிதங்களாலே தனக்கு சேஷித்வமே உலகறிய நின்றபடியால் அக்குறை தீர மீண்டும் ஒரு அவதாரம் செய்யத் திருவுள்ளங்கொண்டு இக் கலியுகத்தில் தம்பியான இளையபெருமாள் இளையாழ்வார் என்கிற ஸ்வாமியாகவும் தான், தாசரதியென்கிற நிஜ நாமத்துடனே முதலியாண்டானாகவும் திருவவதரிக்கலாயிற்று.

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா ।
தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாம்யஹம் ॥

என்பது இவ்வாசிரியருடைய தனியனாதலால் ஸ்ரீராமாநுஜ பாதுகா என்றே இவர் வழங்கப்பெற்று வந்தார். எம்பாருக்கு ராமாநுஜ பதச்சாயை யென்கிற ப்ரஸித்தி போலே இவருக்கு ராமாநுஜ பாதுகை யென்கிற ப்ரஸித்தி நிகழ்ந்தது.

ஸ்வாமி எம்பெருமானார் ஆச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு தென்னத்தியூரர் கழலிணைக் கீழே வாழ்ந்தருளுங் காலத்தில் கூரத்தாழ்வானோடு கூட இவரும் ஸ்வாமியை ஆச்ரயித்து வேதாந்த ரஹஸ்யார்த்தங்களை அதிகரித்து நல்விரகரா யிருந்தார். திருத்தகப்பனாரான வாதூல குல திலக - அநந்த நாராயண தீக்ஷிதரிடத்திலேயே ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் திவ்ய ப்ரபந்தங்களையும் அதிகரித்திருந்தபடியாலே ஸ்வாமியின் அபிமானத்திற்கு ஆழ்வானைப் போலவே இவரும் இலக்காயிருந்தார். ஸ்வாமி இவ்விருவரையும் தண்டும் பவித்ரமுமாகத் திருவுள்ளம் பற்றியிருந்தது.

"லௌகிகே ஸமயாசாரே க்ருதகல்போ விசாரத:"

என்று ஸ்ரீராமபிரானைப் பற்றி ஸ்ரீராமாயணத்திற் கூறியதுபோல, ஸ்வாமியின் சிஷ்ய வர்க்கங்களுள் இவர் லௌகிக சாமர்த்தியமும் சிறப்புறப் பொருந்தி யிருந்ததினால் ஸ்ரீரங்கநாத திவ்யாலய கைங்கர்ய நிர்வஹண துரந்தரத்வம் இவருக்குப் ப்ராப்தமாயிற்று.

acharya.org

ஸேனை முதலியார் போலவிருந்து அரங்கன் கைங்கர்யத்தை ஆண்டு வந்த படியினாலேயே இவர்க்கு முதலியாண்டானென்று திருநாமமாயிற்றென்பர் பெரியோர். கோயிலொழுகில் இவரைப் பற்றின ப்ரஸ்தாவத்தில் - "முதலியாண்டானும் ஆறட்டிலேயிருந்து கோயில் கார்யத்தையும், உள்ளே கருவுகல வாசலிலேயிருந்து திருமேனி யுபசாரத்தையும், ஸன்னதியிலே யிருந்து திருப்பவளா வுபசாரங்களையும் உடையவர் நியமனப்படி ஆராய்ந்து கொண்டு அனைத்தழகும் கண்டருளப் பண்ணிக் கொண்டிருந்தார்" என்றுள்ளது.

திருவாய்மொழி ஈட்டில் (2.9.2) ஞானக் கைதா என்றவிடத்தில் "எம்பாருக்கு ஆண்டானருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது; அதாவது- ஒரு கிணற்றில் விழுந்தவனுக்கு இரண்டு பேர் கை கொடுத்தால் எடுக்குமவர்களுக்கு மெளிதாய் ஏறுமவனுக்கு மெளிதாயிருக்குமிறே; அப்படியே யாகிறது என்று"- என்கிற ஐதிஹ்ய ஸ்ரீஸூக்தியுள்ளது. இதன் விவரணம் வருமாறு:- முதலியாண்டான் ஒருகால் திருநாராயணபுரத்தி லெழுந்திருக்கையில் அவருடைய சிஷ்யரான வொரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலிலே வந்து எம்பார் சன்னிதியிலே கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போதொரு நாள் சில ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு எம்பார் திருவிலச்சினை ஸாதிக்க விருக்கையில் இந்த ஸ்ரீவைஷ்ணவரும் தமக்கும் (சக்ராங்கனம்) ஸாதிக்கும்படி வேண்டினார். அப்போது எம்பார் 'உமக்கு விசேஷ சம்பந்தமுண்டோ? என்று அவரைக் கேட்க: தேவரீருடைய ஸம்பந்தமே ஸம்பந்தம்' என்று அவர் விண்ணப்பம் செய்ய அவ்வளவிலே எம்பார் இவர் முதலியாண்டானுடைய ஸ்ரீபாதத்தவரென்று அறியாதே இவருக்கும் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பண்ணி இவரைக் கொண்டு கைங்கரியங்களும் கொண்டெழுந்தருளியிரா நிற்கையில் ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே எழுந்தருள, அப்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆண்டானை வந்து சேவிக்க, ஆண்டானும் முன்பு போலே இவரைக் கொண்டு வேண்டும் கைங்கர்யங்களைக் கொள்ள, அப்போது எம்பாருமறிந்து ஆண்டான் பக்கலிலே யெழுந்தருளி, கனக்க அபசாரப்பட்டேன் என்றருளிச் செய்ய, இவருடைய திருவுள்ளத்தின் க்லேசத்தையறிந்து அப்போது ஆண்டானருளிச் செய்த வார்த்தை- "ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டு பேர் கை கொடுத்தால் எடுக்குமவர்களுக்கும் எளிதாய் ஏறுமவனுக்கும் எளிதாயிருக்குமிறே, அப்படியேயாகிறது" என்று. ஸம்ஸார ஸாகரத்திலே அழுந்தினவனுக்கு அடியேனும் கைகொடுத்து தேவரீரும் கை கொடுத்தால் என்ன குறை? தேவரீர் தவறாக ஒன்றும் செய்து விடவில்லையே; எதற்காக க்லேசிப்பது? என்பது முதலியாண்டானுடைய பரமோதார மதுரமான திருவாக்கு, (கை கொடுப்பதாவது - ஞானக்கை கொடுப்பது)

முதலியாண்டான் பணித்த வார்த்தைகளென்று அரியனவாகச் சில காண்கின்றன. ஸ்ரீராமாயணத்திற்கு ஸ்வாபதேசார்த்தம் போலே சில வார்த்தைகள் அருளிச் செய்தாராம்; அவையாவன -

1. பிராட்டிக்குச் சிறையிருப்புப் போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்சாரத்திலிருப்பு.

2. பிராட்டி இளையபெருமாள் விஷயத்தில் அபசாரப்பட்டு உடனே பெருமாளைப் பிரிய நேர்ந்தது போல, சேதநர்களுக்கு பாகவதாபசாரம் எம்பெருமான் திருவடி சம்பந்தத்தை விலகப் பண்ணும்.

acharya.org

3. பிராட்டிக்கு அசோக வனம் போலே இவர்களுக்கு ப்ரக்ருதி சம்பந்த ரூபமான தேஹம்.

4. பிராட்டிக்கு அரக்கிகளின் ஸஹவாஸம் போலே இவர்களுக்கு புத்ர களத்ராதிகளின் ஸஹவாஸம்.

5. பிராட்டிக்கு மாரீச மாய மிருகக்காட்சி போலே இவர்களுக்கு "பாவியேனை பலநீ காட்டிப் படுப்பாயோ" என்னும் படியான விஷயங்களின் காட்சி.

6. பிராட்டிக்குத் திருவடி நேர்பட்டாப் போலே இவர்களுக்கு ஆசாரியன் நேர்படுவது.

7. பிராட்டிக்குத் திருவடி சொன்ன ஸ்ரீராம குணங்கள் போலே இவர்களுக்கு ஆசாரியனுபதேசிக்கும் பகவத் விஷயாதிகள்.

8. பிராட்டிக்குத் திருவடி அடையாளங்கள் கூறித் திருவாழி மோதிரம் கொடுத்தது போலே இவர்களுக்கும் குரு பரம்பரா பூர்வகமான திருமந்த்ரோபதேசம்.

9. பிராட்டி திருவடிக்குச் சூடாமணி கொடுத்தாப் போலே இவர்கள் ஆசாரியன் விஷயத்தில் தலையல்லால் கைம்மாறிலேனே என்றிருக்கு மிருப்பு.

10. பிராட்டிக்கு விபீஷணாழ்வானது திருமகளாருடைய ஸஹவாஸமும் பேச்சும் தாரகமாயிருந்தது போலே இவர்களுக்கு பாகவத ஸகவாஸமும் அவர்களுடைய திவ்ய ஸூக்திகளுமே தாரகமாயிருக்கும்.

11. பெருமாள் பிராட்டியிருந்த விடத்தே வந்து விரோதிகளைக் கிழங்கெடுத்து அவளைக் கைக்கொண்டது போல, எம்பெருமான் ஆவாரார் துணையென்று அலைநீர்க் கடலுளழுந்தும் நாவாய் போல் பிறவிக் கடலுள் நின்று துளங்குமிவர்களிடத்தேற வந்து, பொய்ந் நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக் குடம்புமாகிற விரோதிகளை வேரோடே களைந்து, நித்ய முக்தர்களோடே ஒரு கோவையாக்கும்படி கைக்கொண்டருள்வது.... இங்ஙனே பல பொருள்கள் உள.

வேதாந்த வாசிரியர் இப்பொருள்களையே பெரும்பாலும் திருவுள்ளம் பற்றி:

> "தர்ப்போதக்ரதசேந்திரியாநநமநோநக்தஞ்சராதிஷ்டிதே
> தேஹேஸ்மிந் பவஸிந்துநா பரிகதே தீனாம் தசாமாஸ்திதஃ
> அத்யத்வே ஹநுமத்ஸமேன குருணா ஸம்போதிதார்தஸ்ஸூக்தீஃ
> லங்காருத்தவிதேஹராஜதநயாந்யாயேன லாலப்யதே"

என்கிற ச்லோகத்தை ஸங்கல்ப ஸூர்யோதயத்திலே பணித்தருளினார். அவ்வாசிரியர் தாமே ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஆண்டான் வார்த்தையாக அருளிச் செய்ததொன்றுண்டு; அதாவது- அதில் எட்டாவதான அதிகாரி விபாகாதிகாரத்தில்- "ஒரு மலையில் நின்றும் ஒரு மலையில் தாவும் ஸிம்ஹசரீரத்தில் ஜந்துக்களைப் போலே பாஷ்யகாரர் ஸம்ஸாரலங்கநம் பண்ண அவரோடுண்டான குடல்துடக்காலே நாம் உத்தீர்ணராவுதோமென்று முதலியாண்டருளிச் செய்த பாசுரம்".

acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ முதலியாண்டான் கட்டியம்

पाषण्डद्रुमषण्डदावदहनश्चार्वाकशैलाशनिः

बौद्धध्वान्तनिरासवासरपति जैनेभकण्ठीरवः ।

मायावादिभुजङ्ग.भङ्ग.गरुडस्त्रैविद्यचूडामणिः

श्रीरङ्गे.शजयध्वजो विजयते रामानुजोयं मुनिः ।।

பாஷண்டத்ருமஷண்ட தாவதஹந: சார்வாக சைலாசநி;

பௌத்தத்வாந்த நிராஸவாஸரபதிர் ஜைநேபகண்டீரவ:

மாயாவாதிபுஜங்கபங்க கருடஸ் த்ரைவித்ய சூடாமணி;

ஸ்ரீரங்கேசஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோऽயம்முநி:

अजहद्भागिनेयत्वं पादुकात्वं त्रिदण्डताम्। संप्राप्तो यतिराजस्य गुणै स्तत्प्रीतिहेतुभि: ।।

அஜஹத் பாகிநேயத்வம் பாதுகாத்வம் த்ரிதண்டதாம்.

ஸம்ப்ராப்தோ யதிராஜஸ்ய குணைஸ் தத்ப்ரீதி ஹேதுபி:.

श्रीवैष्णवानां दसत्वस्वामित्वप्रथिताह्वयम् । वाधूलकुलधौरेयं वन्दे दाशरथिं गुरुम् ।।

ஸ்ரீவைஷ்ணவாநாம் தாஸத்வ ஸ்வாமித்வ ப்ரதிதாஹ்வயம்.

வாதூலகுலதௌரேயம் வந்தே தாசரதிம் குரும்.

पादुके यतिराजस्य कथयन्ति यदाख्यया । तस्य दाशरथे: पादौ शिरसा धारयाम्यहम् ।।

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்க்ய யா.

தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாம்யஹம்

स्नानीयं घनसारकुङ्कु.मलवङ्गै.लादिभिस्सेवितम्

सौवर्णेषु घटेषु शुद्धसलिलं पूर्णं पुरस्तिष्ठति ।

कोशेयञ्च शरच्छशाङ्क.धवलं सिद्धा वयं किङ्क.रा:

कारुण्यं कमलापतिर्वितनुतां श्रीदेशिकेन्द्रो गुरु: ।।

ஸ்நாநீயம் கநஸார குங்குமலவங்கைலாதிபிஸ் ஸேவிதம்

ஸௌவர்ணேஷு கடேஷு சுத்தஸலிலம் பூர்ணம் புரஸ் திஷ்டதி.

கௌசேயஞ்ச சரச்சசாங்கதவளம் ஸித்தாவயம் கிங்கரா:

காருண்யம் கமலாபதிர் விதநுதாம் ஸ்ரீதேசிகேந்த்ரோ குரு:.

பராக்! பராக்! பஞ்சநாராயண ப்ரதிஷ்டாபநாசார்யா! பராக்! திருக்கோஷ்டியூர் நம்பி ஸந்நிதியில் தவமிருந்து துவண்டுவந்த வேர்வையாறவோ. திருவரங்கன் திருச்செல்வச் செங்கோலை அணைந்து நின்ற வேர்வையாறவோ. பெரியநம்பி திருமகளார்க்குச் சீதநமாய்ப் பணிசெய்த வேர்வையாறவோ. பேருலகில் எதிராஜன் முக்கோலாய்த் தொடர்ந்து நின்ற வேர்வையாறவோ. பாதுகைகள் ஊறிய ஊருணித் தண்ணீரை யளைந்து நின்ற வேர்வையாறவோ. பாதுகையா யெதிராஜன் பதமிரண்டால் துகையுண்ட வேர்வையாறவோ. பத்தரடிக் கந்தாடை முதலியாண்டானென்னும் அந்தணர்கள் சிந்தாமணியே! அத்திகிரி அருளாளர் அத்தாணிச் சேவகத்தால் விளங்குகின்ற எங்கள் குலமணியே! ஸ்ரீ பச்சை வாரணநகரும் உலகேழும் மிக வாழத் திருமஞ்சனம் கொண்டருள்கவே!

ஜய! விஜயீபவ!

கட்டியம் முற்றிற்று

முதலியாண்டான் திருவடிகளே சரணம்

acharya.org

श्री दाशरथिगुर्वष्टोत्तरशतनामस्तोत्रम् ।।

ஸ்ரீ தாசரதி குர்வஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

श्रीमान् दाशरथर्लीलानराकारः कृपाकरः ।
गुरुवर्यो यतीशानभागिनेय श्शुभेक्षणः ।।1

ஸ்ரீமாந் தாசரதிர் லிலாநராகார: க்ருபாகர:,
குருவர்யோ யதீசாநபாகிநேய: சுபேக்ஷண:

हरितद्विरश्रीशग्रामलब्धनिजोदयः ।
वाधूलकुलदुग्धब्धिनिर्मलामृतदीधितिः ।। 2

ஹரிதத்விரத ஸ்ரீச க்ராமலப்த நிஜோதய:
வாதூலகுல துக்தாப்த்தி நிர்மலாம்ருததீதிதி:

श्रीरामांशसनाविष्टः पाञ्चजन्यांशसंभवः।
भूदेवीगर्भसंभूतो भूतपुर्यधिपप्रियः 3

ஸ்ரீராமாம்ச ஸமாவிஷ்ட: பாஞ்சஜந்யாம்ச ஸம்பவ:
பூதேவீ கர்ப்பஸம்பூதோ பூதபுர்யதிப்ப்ரிய:

अनधोऽनन्तशास्त्रज्ञोऽनन्तनारायणात्मजः।
यतिराजपदांभोजचञ्चरीक स्सदाश्रयः ।।4

அநகோऽநந்த சாஸ்த்ரஜ்ஞோऽநந்த நாராயணாத்மஜ:
யதிராஜ பதாம்போஜ சஞ்சரீக: ஸதாச்ரய:

यतिराडपरितयज्यसंबन्धो भवबन्धहृत् ।
समस्तात्मगुणावासो मदत्रयनिवृत्तिकृत्।।5

யதிரா டபரித்யாஜ்ய ஸம்பந்தோ பவபந்த ஹ்ருத்
ஸமஸ்தாத்மகுணாவாஸோ மதத்ரயநிவ்ருத்திக்ருத்

गोष्ठीपूर्णार्यकरुणाशिक्षितात्मस्वरूपकः ।
यतीशलब्दचरमश्लोकार्थ श्चरितार्थकः 6

கோஷ்டீபூர்ணார்யகருணாசிக்ஷிதாத்மஸ்வரூபக:
யதீசலப்தசரமச்லோகார்த்த ச்சரிதார்த்தக:

श्रीरङ्ग.राजभोज्यान्नपरीक्षणकृतक्षण ।
जम्बूफलार्पणव्यक्तभगवद्भक्तिपष्कलः ।।7

ஸ்ரீரங்கராஜ போக்யான்ன பரீக்ஷண க்ருதக்ஷண:
ஜம்பூபலார்ப்பண வ்யக்த பகவத் பக்தி புஷ்கல:

यतिनाथाभिमानाप्तत्रिदण्डत्वपृथुप्रथ : ।
वेदान्तद्वयसिद्धान्तनिर्धारणविचक्षणः ।। 8

யதிநாதாபிமாநாப்த த்ரிதண்டத்வப்ருது ப்ரத:
வேதாந்த த்வயஸித்தாந்த நிர்த்தாரண விசக்ஷண:

श्रीवत्साङ्क.प्रियसुहृत् शास्त्रसागरपारगः ।
कुशाग्रनिशितप्रज्ञो रसिकरस्वरसार्थदः ।।9

ஸ்ரீவத்ஸாங்க ப்ரியஸுஹ்ருத் சாஸ்த்ரஸாகரபாரக:
குசாக்ரநிசிப்ரஜ்ஞோ ரஸிக: ஸ்வரஸார்த்தத:

सालग्रामस्थलव्यक्तश्रीपादांबुप्रभावकः ।
पञ्चनारायणस्थापकः पापकर्शनः 10

ஸாலக்ராமஸ்தலவ்யக்த ஸ்ரீபாதாம்பு ப்ரபாவக:
பஞ்ச நாராயண ஸ்த்தாபக: பாபகர்சந:

वेदमार्गप्रतिष्ठाता श्रीवैष्णवशिखामणिः ।
महापूर्णात्मजादास्यसज्जनिर्लज्जमानसः ।।

வேதமார்கப்ரதிஷ்டாதா ஸ்ரீவைஷ்ணவஸிகாமணி:
மஹாபூர்ணாத்மஜாதாஸ்ய ஸஜ்ஜ நிர்லஜ்ஜமாநஸ:

यतीशादेशवश्सगो वशीकृतरमासखः ।
देशिकादर्शभूतस्सच्छिष्यलक्षणलक्षितः ।।12

யதீசாதேசவசகோ வசீக்ருதரமாஸக:
தேசிகாதர்சபூதஸ் ஸச் சிஷ்யலக்ஷண லக்ஷித:

प्रहाराविहतप्रीतिविलसद्दाससेवितः ।
आन्ध्रपूर्णगृहीतोपयुक्तप्राक्तनभाजनः ।। 13

acharya.org

ப்ரஹாராவிஹதப்ரீதி விலஸத்தாஸஸேவித:
ஆந்த்ரபூர்ணக்ருஹீதோபயுக்த ப்ராக்தநபாஜந:

श्रीरङ्ग.धामकैङ्क.र्यसाम्राज्यैकधरन्धरः ।
लक्ष्मणाचार्यचरणत्राणप्रवणमानसः ।। 14

ஸ்ரீரங்கதாம கைங்கர்யஸாம்ராஜ்யைக துரந்தர:
லக்ஷ்மணாசார்யசரணத்ராணப்ரவண மாநஸ:

श्रीरामानुजयेगीन्द्रपादुकाख्याऽभिविश्रुत :।
शिष्यवतंसो हृष्यङ्ग.स्पष्टश्रुत्यन्तराशयः ।। 15

ஸ்ரீராமாநுஜயோகீந்த்ர பாதுகாக்க்யாபி விச்ருத:
சிஷ்யாவதம்ஸோ
ஹ்ருஷ்டாங்க:ஸ்பஷ்டச்ருத்யந்தராசய:

शारीरकार्थनिर्णेता शठानिहृदयानुगः।
बुधरस्यशठारातिदिव्योक्त्यर्थामृतप्रदः ।।16

சாரீரகார்த்த நிர்ணேதா சடாரிஹ்ருதயாநுக:
புதரஸ்யசடாராதி திவ்யோக்த்யார்த்தாம்ருத ப்ரத:

वाग्मी विजेता विजितमत्तवादीभवाहनः।
परपक्षप्रतिक्षेप्ता स्वीयपक्षाभिरक्षकः ।।17

வாக்மீ விஜேதா விஜிதமத்தவாதீபவாஹந:
பரபக்ஷப்ரதிக்ஷேப்தா நிஜபக்ஷாபிரக்ஷக:

कान्तोपयन्तृदेवाङ्.घ्रद्वयोपायो भयापहः ।
तद्दिव्यकायोपेयस्तत्पञ्चहेतीसहायकः ।।18

காந்தோபயந்த்ரு தேவாங்க்ரி த்வயோபாயோ பயாபஹ:
தத்திவ்ய காயோபேயஸ்தத் பஞ்சஹேதீஸஹாயக:

द्वयप्रमाणकः श्रीमद्राङ्ग.नाथप्रमेयक :।
प्रमाता नित्यसत्वस्थः चरमोपायनिष्ठित :।। 19

த்வயப்ரமாணக: ஸ்ரீமத் ரங்கநாத ப்ரமேயக:
ப்ரமாதா நித்யஸத்வஸ்த: சரமோபாய நிஷ்டித:

यतीशाङ्.घ्रिद्वयोपायो यतीशाङ्.घ्रिप्रयोजनः।
यतीशपूर्णकारुण्यलब्धप्रणवबोधकः ।। 20

யதீசாங்க்ரித்வயோபாயோ யதீசாங்க்ரிப்ரயோஜந:
யதீசபூர்ண காருண்யலப்தப்ரணவபோதக:

सद्गुणार्चावतरणप्रमुख्यप्रतिपादकः
अस्थानविपदाशङ्की श्लाघनीयो महामतिः।।

ஸத்குணார்ச்சாவதரண ப்ராமுக்க்ய ப்ரதிபாதக:
அஸ்த்தாந விபதாசங்கீ ச்லாகநீயோ மஹாமதி: 21

श्रीवेन्नगरनिर्वेशविवशः कुशलाग्रणीः ।
द्राविडागमसारज्ञः सर्वसंशयनाशनः ।।22

ஸ்ரீபேர்நகர நிர்வேச விவச: குசலாக்ரணீ:
த்ராவிடாகம ஸாரஜ்ஞ: ஸர்வஸம்சய நாசந:

श्रीरङ्ग.वासरसिको रङ्ग.दासप्रियङ्क.रः ।
निस्सङ्ग.ः परमैकान्ती यतिशेखरकिङ्क.रः। 23

ஸ்ரீரங்கவாஸரஸிகோ ரங்கதாஸப்ரியங்கர:
நிஸ்ஸங்க பரமைகாந்தீ யதிசேகரகிங்கர:

निश्चलोऽङ्कुशवज्रादिरेखाङ्क.ङ्घ्रितलोऽतुलः।
शशाङ्क.नखरोऽब्जाङ्घ्रिः नालजङ्.घः
सुजानुकः । 24

நிச்சலோங்குசவஜ்ராதி ரேகாங்கி தலோsதுல:
சசாங்க நகரோsப்ஜாங்க்ரி: நாளஜங்க: ஸுஜாநுக:

रंभोरुः शुभ्रवसनः सूत्रशोभिभुजान्तरः ।
साञ्जलिर्नलिनाक्षस्त्रग्धरबन्धुरकन्धरः ।।25

ரம்போரு: சுப்ரவஸந: ஸூத்ரசோபிபுஜாந்தர:
ஸாஞ்ஜலிர் நளிநாக்ஷஸ்ரக் தரபந்துரகந்தர:

मन्दस्मितोऽरविन्दास्यः सोर्ध्वपुण्ड्रललाटकः।
दयातरङ्गि.तापाङ्ग.ः कञ्जाक्षः स्निग्धमुर्धजः
26

acharya.org

மந்தஸ்மிதோரவிந்தாஸ்ய: ஸோர்த்வபுண்ட்ரலலாடக:
தயாதரங்கிதாபாங்க: கஞ்ஜாக்ஷ: ஸ்நிக்தமூர்தஜ:

शिखी रम्यापराङ्गोऽतिसुन्दरो गुरुनन्दनः ।
यतीन्द्रपादसंबन्धेत्तारकत्वप्रदर्शकः ।।

ஶிகீ ரம்யாபராங்கோ஽தி ஸுந்தரோ குருநந்தந:
யதீந்த்ரபாதஸம்பந்தோத்தாரகத்வ ப்ரதர்சக:

एवं गुरोर्दाशरथे नाम्नामष्टोत्तरंशतम् ।
पठतां घटतां योगिवरेण्यकरुणाफलम् ।।

ஏவம் குரோர்தாசரதேர் நாம்நாமஷ்டோத்தரம்சதம்
படதாம் கடதாம் யோகிவரேண்யகருணாபலம்

इदं मुदं वितनुते सदयस्य यतीशितुः।
पदवस्तोत्र माहत्य सदग्र्यैर्ग्राह्यमीरितम् ।।

இதம் முதம் விதநுதே ஸதயஸ்ய யதீசிது:
பதத்ர ஸ்தோத்ர மாத்ருத்ய ஸதக்ர்யைர்க்ராஹ்ய
மீரிதம்

जन्मस्थले दाशरथेर्गुरोः पादतलेऽर्प्यते ।
दिष्ट्या तिरुमलैनल्लान् विदुषा सतुषा स्तुतिः

ஜந்மஸ்த்தலே தாசரதேர்
குரோ:பாததலேர்ப்யதே,
திஷ்ட்யா திருமலைநல்லான் விதுஷா ஸதுஷாஸ்துதி:

इति श्रीदाशरथिगुर्वष्टोत्तरशतनामस्तोत्रम् संपूर्णम् ।।

இதி ஶ்ரீதாசரதி குர்வஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

With Best Compliments from



A. THIRUVENGADATHAN

CHENNAI TEXTILE CHEMICALS PVT. LTD.

I Floor, No.24, Customs Colony,
First Cross Street,
Besant Nagar,
Chennai - 600 090.
Ph. 491 8272.

श्रीकुन्नत्तूर्अनन्तगुरुभिरनुगृहीतम् वरवरमुन्यष्टकम्

ஸ்ரீகுன்னத்தூர் அநந்த குரு அருளிய வரவரமுனி அஷ்டகம்

सर्वप्रकारैराचार्य, सम्प्रीत्येकप्रयोजनम्
अनन्दार्यान्वयोत्तमूसम्, आश्रये
अन्नतदेषिकम् ।

ஸர்வப்ரகாரைராசார்ய, ஸம்ப்ரீத்யேகப்ரயோஜனம்
அனந்தார்யாந்வயோத்தம்மஸம், ஆஶ்ரயே
அனந்ததேஸிகம்

(श्रीमानन) न्दो भगवत्
रामावरजताम् गतः ।
वेदान्दार्थविनिष्कर्षम्
चकार भगवत्प्रियम् ।।

(ஸ்ரீமானன)ந்தோ பகவத்
ராமாவரஜதாம் கத: ।
வேதாந்தார்தவினிஷ்கர்ஷம்
சகார பகவத்ப்ரியம் ।। 1

(श्रीभाष्य) गूढदिव्यार्थ
प्रकाशनकृते पुनः ।
रम्यजामातृयोगीन्द्रः
बभूवगुणमूर्तिमान ।।

(ஸ்ரீபாஷ்ய) கூடதிவ்யார்த
ப்ரகாஶனக்ருதே புன:
ரம்யஜாமாத்ருயோகீந்த்ர:
பபூவகுண மூர்த்திமான் 2

(कालेविकस) दम्भोज
दलतुल्यकशङ्घ्रिकः ।
फणामणिनिभोरस्कः
विशालभुजमस्तक : ।।

(காலேவிகஸ) தம்போஜ
தலதுல்யகராங்க்ரிக:
பணாமணிநிபோரஸ்க:
விசால புஜமஸ்தக: 3

(अन्तःस्थित) रमाजानिः
मन्दास्मितमुखोज्जवलः ।
सदामन्त्रवरध्यान
गतगदस्निग्धनिः स्वनः।।

(அந்த: ஸ்தித) ரமாஜாநி:
மந்தஸ்மிதமுகோஜ்ஜ்வல:
ஸதாமந்த்ரவரத்யாந
கத்கதஸ்நிக்தநி: ஸ்வந: 4

(सुसम्स्कृत) विविक्ताक्तैः
मध्येचूर्णैर्विराजितै : ।
ऊर्ध्वपुण्ड्रैः परंसेव्यः,
सौमयजामातृयोगिराट् ।।

(ஸுஸம்க்ருத) விவிக்தாக்தை:
மத்யேசூர்ணைர்விராஜிதை:
ஊர்த்வபுண்ட்ரை: பரம் ஸேவ்ய:
ஸௌம்ஜாமாத்ருயோகிராட் 5

(पवित्र) तुलसीपद्म
मालाभूषितकन्धरः ।
सुकाशसुमनीकाश
यागसूत्रमनोहरः ।।

(பவித்ர) துலஸீபத்ம
மாலாபூஷிதகந்தர:
ஸீகாஶஸுமநீகாஶ
யாகஸூத்ரமனோஹர: 6

(चरन्) पुरोरङ्गपतेर्भयान्वितः
शठारियोगीन्द्रजगद्गुरुक्तिभि : ।
प्रमाणजालैरपि साधुजीवनः
परायणं सौम्यवरो महामुनिः ।।

acharya.org

(சரன்) புரோரங்கபதேர்பயாந்வித:
யடாரியோகீந்த்ரஜகத்குருக்திபி:
ப்ரமாணஜாலைரபிஸாதுஜீவன:
பராயணம் சௌம்யவரோ மஹாமுநி: 7

(सम्सार) गन्धमसहन्तमनन्दभग्तिम्
कम्सारिसक्तसकलेन्द्रियवृत्तिमान्यं
हम्सधिराजमनवदयगुणैर्निरूप्यम्
तं साध्यमुत्तममहम् कलयामि नित्यम् ।।

(ஸம்ஸார) கந்தமஸஹந்தமனந்தபக்திம்
கம்ஸாரிஸக்தஸகலேந்த்ரியவ்ருத்திமாந்யம்
ஹம்ஸாதிராஜமனவத்யகுணைர்நிரூப்யம்
தம்ஸாத்யமுத்தமமஹம் கலயாமி நித்யம் 8

श्रीमानन, श्रीभाष्य, कालेविकस, अन्त:सिथत, सुसम्स्कृत, पवित्र, चरन्,सम्सार

वरवरमुनिअष्टकं समाप्तम् ।

ஸ்ரீமானன, ஸ்ரீபாஷ்ய, காலேவிகஸ அந்த: ஸ்தித, ஸுஸம்ஸ்க்ருத, பவித்ர, சரன், ஸம்ஸார

வரவரமுனி அஷ்டகம் ஸமாப்தம்

श्रीकुन्नत्तुर श्रीनिवासगुरुभिरनुगृहीतम् रामानुजाष्टकम्

ஸ்ரீகுன்னத்துர் ஸ்ரீநிவாஸ குரு அருளிய ராமானுஜ அஷ்டகம்

तात्पर्यसारानुभवप्रहृष्टम्
वपुः स्पुरज्ज्ञानविरक्तिभक्तिम्।
अनन्तसूरेरभिनन्द्यसूनुम्
श्रीश्रीनिवासं गुरुमाश्रयेऽहम् ।।

தாத்பர்யஸாரானுபவப்ரஹ்ருஷ்டம்
வபு: ஸ்ப்புரஜ்ஞாந்விரக்தி பக்திம்
அனந்தஸூரேரபிணந்த்ய ஸூநும்
ஸ்ரீஸ்ரீநிவாஸம் குருமாஸ்ரயேஹம்

(रामानुजाय मुनये) नम उक्तिमात्रम्
कामातुरोऽपि कुमति: कलयन्नभीक्ष्णं ।
यामामनन्ति यमिनाम् भगवज्जनानाम्
तामेव विन्दति गतिम् तमस: परस्नात् ।।

(ராமானுஜாய முனயே) நம உக்திமாத்ரம்
காமாதுரோபி குமதி: கலயந்தபிக்ஷ்ணம்
யாமாமனந்தி யமிநாம் பகவஜ்ஜனானாம்
தாமேவ விந்ததி கதிம் தமஸ: பரஸ்தாத் 1

(सोमा) वचूडसुरशेखरदुष्करेण
कामातिगोऽपि तपसा क्ष्पयन्नधानि ।
रामानुजाय मुनये नम इत्यनुक्त्वा
को मामहीसहचरे कुरूतेऽनुरागम् ।।

(ஸோமா) வசூடஸுரஶேகரதுஷ்கரேண
காமாதிகோபி தபஸா க்ஷபயந்நகானி
ராமானுஜாய முனயே நம இத்யனுக்த்வா
கோ மாமஹீஸஹசரீரே குருதேநுராகம் 2

(रामानुजाय नम:) इत्यसकृद्दुणीते
यो मानमत्सरमदस्मरदूषितोऽपि ।
प्रेमनुर: प्रियतमामपहाय पद्मम्
गूमा भुजङ्ग.शयनम् तमनुप्रयाति ।।

(ராமானுநுாய நம:) இத்யஸ்க்ருத்க்ரிணீதே
யோ மானமத்ஸரமதஸ்மரதூஷிதோபி
ப்ரேமாதுர: ப்ரியதமாமபஹாய பத்மம்
குமா புஜங்கஶயனம் தமநுப்ரயாதி 3

acharya.org

(वामा) लकानयनवागुरिकागृहीतम्
कषेमाय किंचिदपि कर्तुमनीहमानम् ।
रामानुजो यतिपतिर्यदि नेक्ष्यते माम्
मा मामकोऽयमिति मुंचति माधवोऽपि ।।
(வாமா) லகாநயனவாகுரிகாக்ருஹீதம்
க்ஷேமாய கிஞ்சிதபிகர்துமனீஹமானம்
ராமானுஜோ யதிபதிர்யதிநேக்ஷ்யதே மாம்
மா மாகோயமிதி முஞ்சதி மாதவோபி 4

(रामानुजेति) यदिदं विदितं जगत्याम्
नामाऽपि न श्रुतिसमीपमुपैति येषाम् ।
मा मामदीय इति सद्भिरुपेक्षितास्ते
कामानुविद्धमनसो निपतन्त्यधोऽधः ।।
(ராமானுஜேதி) யதிதம் விதிதம் ஜகத்யாம்
நாமாபிந ஶ்ருதிஸமீபமுபைதியேஷாம்
மா மாமதீய இதிஸத்பிருபேக்ஷிதாஸ்தே
காமானுவித்தமனஸோ நிபதன்த்யதோத: 5

(नामा) नुकीर्त्य नरकार्तिहरं यदीयम्
व्योमाऽधिरोहति पदं सकलोऽपि लोकः ।
रामानुजो यतिपतिर्यदि नाऽऽविरासीत्
को मादृशः प्रभविता भवमुत्तरीतुम् ।।
(நாமா)னுகீர்த்ய நரகாதிர்ஹரம் யதீயம்
வ்யோமாதிரோஹதி பதம் ஸகலோபிலோக:
ராமானுஜோ யதிபதிர்யதி நா விராஸீத்
கோ மாத்ருஶ: ப்ரபவிதா பவமுத்தரீதும் 6

(सीमा) महीध्रपरिधिं पृथिवीमवाप्तम्
वैमानिकेश्वरपुरीमधिवासितुं वा ।
व्योमाऽधिरोदुमपि न स्पृहयन्ति नित्यं
रामानुजाङ्घ्रियुगलं शरणं प्रपन्नाः ।।
(ஸீமா) மஹீத்ரபரிதிம் ப்ருதிவீவாப்தும்
வைமாநிகேஶ்ரபுரிமதிவாஸிதும் வா
வ்யோமாதிரோதுமபி ந ஸ்ப்ருஹயந்தி நித்யம்
ராமானுஜாங்க்ரியுகளம் ஶரணம் ப்ரபன்னா: 7

(मामा) धुनोति मनसोऽपि न गोचरंयत्
भूमासखेन पुरुषेण सहाऽनुभूये ।
प्रेमानुविद्धहृदयप्रियभागतलभ्ये
रामानुजाङ्घ्रिकमले रमतां मनो मे ।।
(மாமா)துனோதி மனஸோபி கோசரம்யத்
பூமாஸகேன புருஷேன ஸஹாzனுபூயே
ப்ரேமானுவித்தஹ்ருதயப்ரியபக்தலப்யே
ராமானுஜாங்க்ரிகமலே ரமதாம் மனோ மே 8

(श्लोका) ष्टकमिदं पुण्यं यो भक्त्या
प्रत्यहं पठेत् ।
आकारत्रयसम्पन्नः शोकाब्धिं तरते ध्रुवम् ।।
(ஸ்லோகா) ஷ்டகமிதம் புண்யம் யோ பக்த்யா
ப்ரத்யஹம் படேத்
ஆகாரத்ரயஸம்பந்த: ஶோகாப்திம் தரதே த்ருவம் 9

रामानुजायमुनये सोमा रामानुजाय नम
वामा रामानुजेति नामा सीमा मामा श्लोका
रामानुजाष्टकम् समाप्तम्

ராமானுஜாயமுனயே ஸோமா ராமானுஜாய நம
வாமா ராமானுஜேதி நாமா ஸீமா மாமா ஸ்லோகா
ராமானுஜாஷ்டகம் ஸமாப்தம்

acharya.org

ஸ்ரீகாஞ்சீ மகாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி
அனுக்ரஹித்தருளிய

ஸ்ரீவரவரமுனி நக்ஷத்ர மாலா

தனியன்

ஸ்ரீ வத்ஸ வம்சாம்புதி பூர்ணசந்த்ரம் ஸ்ரீ ரங்கநாதார்ய தநூஜ ரத்நம்।
தத்பாதயுக்மாம்புஜ ப்ருங்கராஜம் அண்ணங்கராசார்ய மஹம் ப்ரபத்யே।।

श्रीमद्वरमुनीन्द्रार्यस्तुतिं नक्षत्रमालिकाम् ।
सात्विकानां सदा ध्येयां संतनोमि सतां मुदे ।।

ஸ்ரீமத்வரமுனீந்த்ரார்யஸ்துதிம் நக்ஷத்ரமாலிகாம்।
ஸாத்விகாநாம் ஸதா த்யேயாம் ஸம்தநோமி ஸதாம் முதே।।

श्रीमान् सुन्दरजामातृमुनिर्जीयमद्युदुत्तकय: ।
अश्विनावप्यध: कृत्य चिकित्सां भुवि तन्वते ।। 2

ஸ்ரீமாந் ஸுந்தரஜாமாத்ரு முனிர்ஜீயாத்யதுத்த்தய:।
அஶ்வினாவப்யத: க்ருத்ய சிகித்ஸாம் புவி தந்வதே।।

(அச்விநி) அச்விநௌவே தேவாநாம் பிஷஜௌ என்று வேதம் ஓதின படியே தேவதைகளின் மருத்துவர்களான அச்விநி தேவர்கட்கும் மேலாக, தம்முடைய ஸ்ரீ ஸூக்திகளினால் ஸம்ஸாரிகளுக்குச் சிறந்த சிகித்ஸையைச் செய்தருளும் மணவாள மாமுனிகள் வாழ்க.

तरुणार्यमजैत्रवपुस्सुषम: करुणावरुणालयदिव्यमना: ।
वकुलाभरणीयवचोरसिको वरयोगिवरश्शरणं भविनाम् ।।2

தருணார்யமஜைத்ரவபுஸ்ஸுஷம: கருணாவருணாலயதிவ்யமனா:।
வகுலாபரணீயவசோரஸிகோ வரயோகிவரஶ்ஶரண்பவிநாம்।।

(பரணி) திருமேனியொளியால் ஸூர்யனை வென்றவரும், கருணை கடலான திருவுள்ள முடையவரும் திருவாய்மொழியின் . சுவையுணர்ந்தவருமான மணவாளமாமுனிகளே முமுக்ஷுக்களான ஸம்ஸாரிகளுக்குத் தஞ்சம்

नानारूचिर्जन इहाश्रयते मुकुन्दं स्कन्दं तथा पशुपतिं धृतकृत्तिकायम् ।
कामं तथा भजतु रम्यवरोपयन्तृ योगीन्द्रतोऽन्यमहमत्र न भावयेयम् ।। 3

நாநாருசிர்ஜந இஹாஶ்ரயதே முகுந்தம்
ஸ்கந்தம் ததா பஶுபதிம் த்ருதக்ருத்திகாயம்।
காமம் ததா பஜது ரம்யவரோபயந்த்ரு
யோகீந்த்ரதோzந்யமஹமத்ர ந பாவயேயம்।।

(க்ருத்திகை) 'லோகோபிந்நருசி' ஆகையினாலே முகுந்தனைச் சிலரும் முருகனைச் சிலரும்,முக்கண்ணனைச் சிலரும் ஆச்ரயிக்கக்காண்கிறோம். யதேஷ்டமாக அப்படியே ஆச்ரயிக்கட்டும்.

acharya.org

மாமுனிகளைத் தவிர வேறொருவரையும் சிந்தையிற்கொள்ளேன்யான். (த்ருத க்ருத்திகாயம்) க்ருத்தியென்று யானைத் தோலுக்குப்பெயர். தரிக்கப்பட்ட யானைத் தோலுடைய உடம்பை யுடையனான பசுபதியை என்றபடி.

यत्पादावधिरोहिणी हि भगवत्पादाब्जयो श्शाश्वती
 यद्गात्रं कलशाम्बुराशिसुषमासंस्पर्धमानद्धिकम् ।
यद्वक्त्रं निरवद्यशास्त्रनिचयोदञ्चन्महासौरभं
 सोऽयं भाति वरोपयन्तृयमिराट् चित्ते मदीयेऽनिशम् ।।

யத்பாதாவதிரோஹிணீ ஹி பகவத்பாதாப்ஜயோஶ்ஶாஶ்வதீ
யத்காத்ரம் கலஶாம்புராஶிஸுஷமாஸம்ஸ்பர்தமாநர்த்திகம்।
யத்வக்த்ரம் நிரவத்யஶாஸ்த்ர நிசயோதஞ்சந்மஹாஸௌரபம்
ஸோऽயம் பாதி வரோபயந்த்ருயமிராட் சித்தே மதீயே நிஶம்।।

(ரோஹிணி) அடியேனது உள்ளத்துள் எந்நாளுமுறைகின்ற மணவாள மாமுனிகளின் திருவடிகளானவை எம்பெருமானுடைய திருவடித்தாமரைகட்டு ஏணி போலும்: திருமேனி விளக்கமானது பாற்கடலை எதிர்க்க வல்லது. திருப்பவளமானது ஸகல சாஸ்த்ரஸாரார்த்த பரிமளமும் கமழ நிற்பது.

शशादिमृगशीर्षकेष्वपि भवेद्विषाणं कचित्
 नभस्यपि कदाचनो द्भवमियाच्च पङ्के.रुहम् ।
न जातुचिदहो भवेद्वरवरस्य योगीशितु :
 गभीरमधुरोक्तिषु ध्रुवमवद्यशङ्क.ङ्कुर: ।। 5

ஶஶாதிம்ருகஶீர்ஷகேஷ்வபி பவேத்விஷாண் கசித்
நபஸ்யபி கதாசநோத்பவமியாச்ச பங்கேருஹம்।
ந ஜாதுசிதஹோ பவேத்வரவரஸ்ய யோகீஶிது:
கபீரமதுரோத்திஷு த்ருவமவத்யஶங்காங்குர:।।

(மிருகசீர்ஷம்) முயல் முதலான சில மிருகங்களின் தலைகளில் கொம்பு முளைக்கவுமாம் ஆகாசத்திலும் ஒருகால் தாமரை முளைக்கவுமாம். இங்ஙனே அஸம்பாவிதங்கள் ஸம்பவித்தாலும், மணவாள மாமுனிகளின் கம்பீர மதுர ஸ்ரீ ஸூக்திகளில் ஒருகாலும் அவத்ய சங்கையும் ஸம்பவிக்க மாட்டாதென்பது திண்ணம்.

रम्यवरयोगिवरसूक्तिरससेकै:
 संततमिहास्तु मम साधु रसनाऽऽद्रा ।
ये खलु पवित्रतमगाङ्ग.गजलसेकाम्
 अप्यहह! मन्दयितुमत्र शुचि शक्ता : ।। 6

acharya.org

ரம்யவரயோகிவரஸூக்திரஸஸேகை:
ஸம்ததமிஹாஸ்து மமஸாது ரஸநாத்ரா।
யே கலு பவித்ரதமகாங்ககஜலஸேகாம்
அப்யஹஹ மந்தயிதுமத்ர புவி ஶக்தா:।।

(ஆர்த்ரா) பரம பவித்திரமான கங்கா நீர்ப்பெருக்கையும் கீழ்படுத்த வல்லதான மணவாளமாமுனிகளின் ஸ்ரீ ஸூக்திரஸப் பெருக்கினால் எனது நா எப்பொழுதும் நன்கு நனைந்தேயிருக்க வேணும்.

तातस्सर्वजनीन एष भगवान् मा नाम मां रक्षतात्
नैघृण्येन पुनः पुनर्वसुमतीकोणेऽत्र कामं क्षिपेत् ।
एतत्केवलमर्थये मुररिपुं श्रीरम्यजामातरि
स्वामिन्यद्भुतभक्तिभूषितहृदां वंशे समुत्पादय ।। 7

தாதஸ்ஸர்வஜநிந ஏஷ பகவாந் மா நாம மாம் ரக்ஷதாத்
நைர்க்ருண்யேன புன: புனர்வஸுமதீகோணேzத்ர காமம் க்ஷிபேத்।
ஏதத்கேவலமர்தயே முராரிபும் ஸ்ரீரம்யஜாமாதரி
ஸ்வாமிந்யத் புதபக்திபூஷிதஹ்ருதாம் வம்ஶே ஸமுத்பாதய।।

(புநர்வஸு) ஸர்வ லோக ஹிதபிதாவான எம்பெருமான் என்னைக் காக்க வேண்டா: திருவுள்ளத்தில் இரக்கமின்றிக்கே மேன்மேலும் இக் கொடுவுலகத்திலேயே என்னைத் தள்ளினாலும் தள்ளட்டும். எம்பெருமானை அடியேன் யாசிப்பதொன்றே மணவாள மாமுனிகளிடத்தில் பக்தி பூண்ட மஹான்களின் குலத்திலேயே என்னைப் பிறப்பிக்க வேணும்.

यतस्व ननु सन्ततं वरमुनीन्द्रदिव्योक्तिभिः
सुधारससरीतिभिर्गमयितुं निजं जीवितम् ।
इतीह सुबहुर्जनो गुरुवरोपदिष्टोऽयहो
यतिष्य इति केवलं प्रतिवदन् भवे भ्राम्यति ।। 8

யதஸ்வ நநு ஸந்ததம் வரமுனீந்த்ரதிவ்யோக்திபி:
ஸுதாரஸஸரீதிபிர்கமயிதும் நிஜம் ஜீவிதம்।
இதீஹ ஸுபஹுர்ஜநோ குருவரோபதிஷ்டோzப்யஹோ
யதிஷ்ய இதி கேவலம் ப்ரதிவதந் பவே ப்ராம்யதி।।

(புஷ்யம்) மணவாள மாமுனிகளின் அமுதமொழிகளைக் கொண்டே நித்யகாலக்ஷேபம் பண்ணும்படி பெரியோர்கள் பலருக்கு உபதேசித்தாலும், ஆகட்டும், பார்ப்போம் என்று சொல்லி வீண்போது போக்கிப் பிறவிக் கடலிலேயே துவள்கின்றாரே! அந்தோ! (இதில் 4-ம் பாதத்தில் திஷ்ய பதம் புஷ்ய வாசகம்)

acharya.org

तिरस्कृत्य प्राचामतिमधुरसंदेशमनघं
पलायध्वे भोभोः पिशितवपुराश्लेषकुतुकात् ।
अमन्दानानन्दान् सृजति वरयोगीन्द्रफणिति
प्रवाहे स्वादिष्टे घटयत सकृद्वाऽपि रसनाम् ।। 9

திரஸ்க்ருத்ய ப்ராசாமதிமதுரஸம்தேஶமநகம்
பலாயத்வே போபோ! பிஶிதவபுராஶ்லேஷகுதுகாத்।
அமந்தாநாநந்தாந் ஸ்ருஜதி வரயோகீந்தரபணிதி-
ப்ரவாஹே ஸ்வாதிஷ்டே கடயத ஸக்ருத்zவாபி ரஸநாம்।।

(ஆச்லேஷம்) மேலையார் செய்யும் மதுரமான உபதேசங்களைப் பேணாமல் மாம்ச சரீர ஸம்ச்லேஷ விருப்பத்தினால் இங்குமங்கும் ஓடி உழல்கின்றீர்களே! பேரின்பம் பயக்கும் மணவாள மாமுனிகளின் திவ்ய ஸூக்தி அமுத வெள்ளத்தில் ஒரு நிமிஷமாவது நாவை நனைக்கலாகாதா?

नार्हत्येवात्र नूनं हरिरपि भविनां मादृशानामघानि
प्रोद्धर्तुं, दैत्यरक्षोगणदलनकलामात्रदक्षो हि सोऽभूत् ।
एकस्सर्वज्ञचूडामणिरनघगुणो रम्यजामातृयोगी
दिव्यश्रीसूक्तितेजोविताततिभिरतनोत् द्रागाधध्वान्तशान्तिं ।। 10

நார்ஹத்யேவாத்ர நூநம் ஹரிரபி பவிநாம் மாத்ருஶாணாமகானி
ப்ரோத்தர்தும் தைத்யரக்ஷோகநதலநகலாமாத்ரதக்ஷோ ஹிஸோzபூத்
ஏகஸ்ஸர்வஜ்ஞசூடாமணிர்நககுணோ ரம்யஜாமாத்ருயோகீ
திவ்யஶ்ரீஸூக்திதேஜோவிததிபிரதநோத் த்ராககத்வாந்தஶாந்திம்

(மகம்) எம்போல்வாருடைய பாவங்களைத் தொலைக்க எம்பெருமானும் வல்லனல்லன். அவன் அஸுர ராக்ஷஸர்களைத் தொலைப்பதில் மாத்திரமே நிபுணன். ஸர்வஜ்ஞரான மணவாளமாமுனிகள் ஒருவரே தமது திவ்ய ஸூக்தி தேஜ: புஞ்ஜங்களினால் பாவங்களாகிற இருளைப் பாற்றியருளினார். (இதில் முதல் பாதத்தில் முடிவில் "**மகா**" என்பது நக்ஷத்ர நாமம்.)

शान्तं कर्तुं संसृतिरोगं स्पृहयन्तः
पूर्वे फल्गुन्यौषधवर्गे हततृष्णाः ।
यत्सूक्त्योघे दिव्यमहाभेषजबुद्धिं
भेजुस्सोऽयं पातु सदा मां वरयोगी ।। 11

ஶாந்தம் கர்தும் ஸம்ஸ்ருதிரோகம் ஸ்ப்ருஹயந்த:
பூர்வே பல்குந்யௌஷதவர்கே ஹதத்ருஷ்ணா:।
யத்ஸூக்த்யோகே திவ்யமஹாபேஷஜபுத்திம்
போஜுஸ்ஸோzயம் பாது ஸதா மாம் வரயோகீ।।

acharya.org

(பூர்வ பல்குநி) ஸம்ஸார நோயைத் தொலைக்க விரும்பின முன்னோர்கள் அற்பமான மருந்து வர்க்கங்களில் ஆசையற்றவர்களாய் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளையே அதற்கு மருந்தாகக் கொண்டனர். அந்த மாமுனிகள் என்னைக் காத்தருள்க. (இதில் 2-ம் பாதத்தில் 'பூர்வ பல்குந்யௌ' என்பது நக்ஷத்ர நாமம். இது வேத நிர்த்தேசம்) பல்குநி - அற்பமான.

गीरेषा मम धन्यभावमतुलं धत्तेस्म यस्मादहो
तौर्भाग्योत्तरफल्गुनीचजनतास्तोत्रे विरक्तिं गता ।
श्रीमद्रम्यवरोपयन्तृयमिनः श्रीसूक्तिसौवादवं
निस्सीमाद्भुतवैभवं प्रतिकलं स्तोतुं समुज्जृम्भते ।। 12

கீரேஷா மம தந்ய பாவமதுலம் தத்தேஸ்ம யஸ்மாதஹோ
தௌர்பாக்யோத்தரபல்குநிச ஜநதாஸ்தோத்ரே விரக்திம்கதா।
ஸ்ரீமத்ரம்யவரோபயந்த்ருயமிந: ஸ்ரீஸூக்திஸௌவாதவம்
நிஸ்ஸீமாத்புதவைபவம் ப்ரதிகலம் ஸ்தோதும் ஸமுஜ்ஜ்ரும்பதே।।

(உத்தரபல்குநி) என்னுடைய வாக்கு மிகவும் க்ருதார்த்தமாயிற்று. எதனாலென்றால், தௌர்ப்பாக்யம் மிகுந்த அஸார அல்பஜனங்களைத் துதிப்பதைவிட்டு மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தி மாதுர்யத்தையே துதிக்க எழுந்ததனால்.

ते ते सन्तु परस्सहस्रफणितिस्तोमाः प्रणीताः परैः
किं ते श्रीवरयोगितल्लजवचस्स्वेकेन दध्युस्तुलाम् ।
श्रीरङ्गेश्वरसंप्रकाशितमहामाहात्म्यसिन्धोर्गुरोः
अस्यैकां फणितिं मुखे कलयतां हस्तस्थितो माधवः ।। 13

தே தே ஸந்து பரஸ்ஸஹஸ்ர பணிதிஸ்தோமா: ப்ரணிதா: பரை:
கிம் தே ஸ்ரீவரயோகிதல்ல ஜவசஸ்ஸ்வேகேந தத்யுஸ்துலாம்।
ஸ்ரீரங்கேஶ்ரவர ஸம் ப்ரகாஶிதமஹாமாஹாத்ம்யஸிந்தோர்குரோ:
அஸ்யைகாம் பணிதிம் முகே கலயதாம் ஹஸ்தஸ்திதோ மாதவ:।।

(ஹஸ்தம்) பிறர் பணித்த பல்லாயிரக்கணக்கான வாக்குக்கள் கிடக்கட்டும், அவையத்தனையும் கூடி மணவாள மாமுனிகளின் ஒரு ஸ்ரீஸூக்தியோடு ஒப்பாகுமோ? அழகிய மணவாளனால் உலகறிய விளக்கப்பட்ட மஹிமை வாய்ந்தவரான இந்த மாமுனிகளின் ஒரு ஸ்ரீஸூக்தியையாவது வாய் கொள்ளவல்லவர்க்கு எம்பெருமான் கரஸ்தானவன்.

वरवरमुनिवर्यपादाब्जयुग्मैकसंबन्धिनां
जनिमृतिभवभीतिवैदेशिकत्वं तु निश्चप्रचम् ।
प्रतिजनि यदि तत्पदाब्जैकसंबन्धसंपद्ध्रुवा
जनिततिरतिमात्रचित्राऽपि मां काममासीदतु ।। 14

acharya.org

வரவமுனிவர்யபாதாப்ஜயுக்மைகஸம் பந்தினாம்
ஜனிம்ருதிபவபீதிவைதே ஸிகத்வம் து நிஸ்சப்ரசம்।
ப்ரதிஜநி யதி தத்பதாப்ஜைகஸம்பந்தஸம்பத்த்ருவா
ஜனிததிரதிமாத்ரசித்ராஉபி மாம் காமமாஸீதது।।

(சித்ரா) மணவாளமாமுனிகளின் திருவடி ஸம்பந்தம் பெற்றவர்களுக்குப் பிறப்பு, இறப்புகள் நேரா என்பது திண்ணம். ஆயினும் பிறவிதோறும் மாமுனிகளின் திருவடி ஸம்பந்தச் செல்வமே நியதமாக வாய்க்குமாகில் பலபல விசித்திரமான பிறவிகளும் எனக்கு நேரலாம்.

तुलायां मूलर्क्षे सकलजनसौभाग्यविभवात्
निभूत्यामेनस्यां समुदित यतीन्द्रप्रवण! नः।
क्षमस्वातीतानां समुदयमघानां अथ पुनः
मनो वाचं कायं प्रवणय भवत्सूक्तिनिवहे ।। 15

துலாயாம் மூலர்க்ஷே ஸகலஜனஸௌபாக்யவிபவாத்
விபூத்யாமேதஸ்யாம் ஸமுதித யதீந்த்ரப்ரவண! ந:!।
க்ஷமஸ்வாதீதாநாம் ஸமுதயமகானாம் அத புன:
மனோ வாசம் காயம் ப்ரவணய பவத்ஸூக்தி நிவஹே।।

(ஸ்வாதீ) உலகம் செய்த பாக்கியத்தினால், ஐப்பசியில் திருமூலத்தில் இவ்வுலகில் தோன்றிய மணவாள மாமுனிகளே! இதுவரையில் யாம் செய்த குற்றங்களை க்ஷமித்தருள்க, இனிமேல் ஒரு குற்றமும் ஏற்படாதபடி மநோவாக்காயங்களை தேவரீருடைய ஸ்ரீ ஸூக்திகளிலேயே ப்ரவணமாக்கி அருள வேணும்.

हरिरिह भुवि रङ्ग.धामा स्वयं रम्ययोगीश्वरात्
उपनिषदनुधाविशाखासहस्रं शठरीरितम् ।
बहुगुरुवरभाष्यसारार्थसंदोहसंधुक्षितं
निजहृदि विनिधित्सुरात्मानमाधत्त शिष्योत्तमम् ।। 16

ஹரிரிஹ புவி ரங்கதாமா ஸ்வயம் ரம்யயோகீஸ்வராத்
உபநிஷதனுதாவிஶாகாஸஹஸ்ரம் ஶடாரீரிதம்।
பஹுகுருவரபாஷ்யஸாரார்தஸம்தோஹஸம்த்ருக்ஷிதம்
நிஜஹ்ருதி வினிதித்ஸுராத்மானமாதத்த ஶிஷ்யோத்தமம்।।

(விசாகா) ஸ்ரீ ரங்கநாதன் உபநிஷத்திற்குத் தோள் தீண்டியான (ஸஹஸ்ரசாகோபநிஷத் ஸமாகமமான) திருவாய் மொழியை அநேக வியாக்கியான விசேஷப் பொருள்களுடன் கேட்டுணர விரும்பி மணவாள மாமுனிகளுக்குத் தன்னை சிஷ்யனாக்கிக் கொண்டான்.

acharya.org

महीयान् योगीन्द्रस्स खलु मनुराधातुमवनौ
प्रतिष्ठां धर्माणां यदवदन तद्भेषमिति ।
श्रुतिर्ब्रूतां कामं वरवरमुनीन्द्रोक्तिनिकरात्
प्रशंसन्ति प्राज्ञाः किमपि न परं भेषजवरम् ।। 17

மஹியாந் யோகீந்த்ரஸ்ஸ கலு மனுராதாதுமவநௌ
ப்ரதிஷ்டாம் தர்மாணாம் யதவதத தத்பேஷாமிதி।
ஸ்ருதிப்ருதாம் காமம், வரவரமுனீந்த்ரோக்திநிகராத்
ப்ரஸம்ஸந்தி ப்ராக்ஞா: கிமபி ந பரம் பேஷஜவரம்।।

(அநுராதா) மநு என்கிற மஹர்ஷியானவர் தரும ஸ்தாபநார்த்தமாகச் சொல்லியிருப்பதெல்லாம் மருந்து என்று யத் வை கிஞ்ச மநுரவ தத் பேஷஜம் என்கிற வாக்யத்தினால் வேதஞ் சொல்லுகிறது. ஆனாலும் மாமுனிகளின் திவ்ய ஸூக்திகளுக்கு மேற்பட்ட மருந்து ஒன்றிருப்பதாக மாஞானிகள் மதியார்.

रङ्ग.ाधीश्वरगीतपद्याविंशदख्यातेर्महायोगिनः
पादाब्जाश्रितशिष्यशिष्यपदयोस्सेवाऽप्यलं श्रेयसे ।
एवं सत्यापि हन्त येऽत्र विमुखा गुर्वन्तरान्वेषिणः
ते ज्येष्टासविधात्सुसंपदमिह प्रेप्सोर्जनस्याग्रजा : ।। 18

ரங்காதீஸ்வரகீதபத்யாவிம்ஸதக்யாதேர்மஹாயோகின:
பாதாப்ஜாஸ்ரிதஸிஷ்யஸிஷ்ய பதயோஸ்ஸேவாzப்யலம் ஸ்ரேயஸே।
ஏவம் ஸத்யபி ஹந்த யேzத்ர விமுகா குர்வந்தராந்வேஷிண:
தே ஜ்யேஷ்டாஸவிதாத்ஸுஸம் பதமிஹ ப்ரேப்ஸோர்ஜநஸ்யாக்ராஜா:।।

(ஜ்யேஷ்டா) ஸ்ரீ ரங்கநாதன் பணித்த தனியனால் பரம்பின புகழுடையரான மணவாள மாமுனிகளை நேராக வணங்கப் பெறாவிடினும் அவருடைய ஸம்பந்த ஸம்பந்திகளை வணங்கப் பெற்றாலும் நன்மை பெறக் குறையில்லை. இங்ஙனே உண்மையிருந்தும் மாமுனிகள் பக்கலில் விமுகர்களாய் வேறு ஆசிரியர்களைத் தேடுமவர்கள் மூதேவியிடத்தில் செல்வம் பெற நினைப்பார்க்குத் துணைவரேயாவர்.

திருமூலத்தின் சிறப்பு

जन्मशुद्धवैष्णवाग्रयमानसोद्यप्रमेयमोदमूलं
अद्वितीयभक्तियुक्तादिव्यसूरिसूक्तितत्त्वबोधमूलं ।
लक्ष्मणार्यदर्शनीयनिस्तुलार्थरत्नराशिजीवमूलम्
अत्र सुन्दरोपयन्तृयोगिवर्यनिस्तुलावतारमूलम् ।। 19

acharya.org

ஜன்மஶூத்தவைஷ்ணவாக்ரயமானஸோத்யதப்ரமேயமோதமூலம்
அத்விதீயபக்தியுக்த திவ்யஸூரிஸூக்திதத்வபோதமூலம்।
லக்ஷ்மணார்ய தர்ஶநியநிஸ்துலார்தரத்நராஶிஜீவமூலம்
அத்ர ஸூந்த்ரோபயந்த்ருயோகிவர்யநிஸ்துலாவதாரமூலம்।।

(திருமூலம்) மணவாள மாமுனிகளின் திருவவதார நன்னாளாகிய மூல நக்ஷத்ரமானது இயற்கையில் பவித்திரர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களின் நெஞ்சில் தோன்றும் பேரின்பத்திற்கு மூலம். மிகச்சிறந்த பக்தர்களான ஆழ்வார்களின் உண்மைப் பொருளை உணர்வதற்கு மூலம். எம்பெருமானார் தர்சனத்திலுள்ள ஆழ்பொருள்கள் உயிர் பெறுவதற்கு மூலம்.

मूर्तिरपूर्वाषाढगृहीतिस्फुटशोभा
वामनरूपा या बलिचित्तं हरतिस्म ।
सा तु मदग्रे तिष्टतु कामं न हि सा मे
हर्तुमलं हृद्रम्यमुनीन्द्रप्रतिपन्नम् ।। 20

மூர்த்திரபூர்வாஷாட க்ருஹீதிஸ்புடஶோபா
வாமனரூபா யா பலிசித்தம் ஹரதிஸ்ம।
ஸா து மதக்ரே திஷ்டது காமம் ந ஹி ஸாமே
ஹந்துமலம் ஹ்ருத்ரம்யமுனீந்த்ர ப்ரதிபன்னம்।।

(பூர்வாஷாடம்) பலாச தண்டத்தைக் கையிலேந்தி அழகு பெற்ற அபூர்வமான வாமனமூர்த்தியானது மாவலியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதென்கிறார்கள். அந்த மூர்த்தி என் கண் எதிரே வந்து நின்றாலும் மாமுனிகளிடம் ஈடுபட்ட எனது நெஞ்சைக் கவரமாட்டாதேயாம். (அபூர்வா, ஆஷாட க்ருஹீதி ஸ்புட சோபா) என்று பதவிபாகம். பலாச தண்டுக்கு ஆஷாட மென்று பெயர். கீழ் ஸ்லோகத்தின் முடிவில் லகாரத்திற்கு அடுத்து மகாரம் இந்த ஸ்லோகத்தின் முதல் எழுத்து. ஆகவே, அந்தாதி தொடைக்கு பங்கமில்லை.

नासहन्त यदहो तदषाढा इत्यदश्श्रुतिवचोनुगुणं ये
रम्ययोगिविभवान्न सहन्ते तानषाढपदतः कथयेयम् ।। 21

நாஸஹந்த யதஹோ ததஷாடா இத்யதஶ்ஶ்ருதிவசோனுகுண் யே।
ரம்யயோகிவிபவாந்ந ஸஹந்தே தாநஷாடபதத: கதயேயம்।।

(உத்தராஷாடம்) யஜுர் வேதத்தில் முதல் அஷ்டகம், ஐந்தாவது ப்ரச்நத்தில் நக்ஷத்ரங்களின் நாமங்களுக்கு நிருக்தி காட்டுமிடத்து, யந் நாஸஹந்த, தத் ஷாடா:. என்று ஓதிற்று. ஸஹியாதவர்களுக்கு 'அஷாடா' என்று பெயரானதாகச் சொல்லிற்று. ஸஹியாதவர்களென்றால் பொறாமைக் காரர்களென்றபடி. இந்த ச்ருதியின் படி, மணவாள மாமுனிகளின் வைபவங்களைப் பொறாத பாவிகளை நாம், அஷாடாமென்போம். (இந்த ச்லோகத்தில் அஷாடபதம் இரட்டித்து வந்தது உத்தராஷாட கமகம்)

acharya.org

यन्मन्त्रश्रवणकुतूहलं धरित्यामर्चामूर्तिषु निखिलासु नित्यमिन्धे ।
सेऽयं श्रीवरवरयोगिदैवमन्त्रस्सर्वेषामलमिह चित्तशोधनाय ।। 22

யந்மந்த்ரஶ்ரவணகுதூஹலம் தரித்ர்யாமர்சாமூர்திஷு நிகிலாஸு நித்யமிந்தே।
ஸோऽயம் ஸ்ரீவரவரயோகிதைவமந்த்ரஸ்ஸர்வேஷாமலமிஹ சித்தஶோதநாய

(ச்ரவணம்) மணவாள மாமுனிகளின் தனியனையே ஸகல திவ்ய தேசத்தெம்பெருமான்களும் திருச்செவி சாத்தக் குதூஹலம் கொண்டிருக்கின்றபடியை நன்கு உணரப் பெற்றால் உள்ளம் சுத்தமாகும்.

यतिपतिपदपद्मसंबन्धनिष्ठागरिष्ठात्मनाम्
अपि वरवरयोगिपादारविन्दानुबन्धो न चेत् ।
न भवति गतिरुत्तमेति प्रतीत्या महान्तः पुरा
वरमुनिपदपद्ममाश्रित्य संप्रापुरुज्जीवनम् ।। 23

யதிபதிபத பத்மஸம்பந்த நிஷ்டாகரிஷ்டாத் மனாம்
அபி வரவரயோகிபாதாரவிந்தாநுபந்தோ ந சேத்।
ந பவதி கதிருத்தமேதி ப்ரதித்யா மஹாந்த: புரா
வரமுனிபதபத்மஶ்ரித்ய ஸம்ப்ராபுருஜ்ஜீவநம்।।

(தநிஷ்டா) உடையவருடைய திருவடிஸம்பந்தம் பெற்றவர்களுக்கும் மணவாள மாமுனிகளின் திருவடி ஸம்பந்தம் இல்லையானால் உயர்கதியில்லை என்கிற அதயவஸாயம் கொண்ட முன்னோர்கள் மாமுனிகளின் திருவடிகளையே ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பெற்றார்கள்.

नरजनिमुपयाता नित्यरोगोपमर्दाः
दशशतभिषगंघ्रीन् संश्रयन्तो भ्रमन्ति ।
अहमिह वरयोगिश्रीपदाम्भोजरेणून्
हृदि कलयितुमिच्छन् सर्वरोगैर्विमुच्ये ।। 24

நரஜநிமுபயாதா நித்யரோகோபமர்தா:
தஶஶதபிஷகம்க்ரீந் ஸம்ஶ்ரயந்தோ ப்ரமந்தி।
அஹமிஹ வரயோகிஶ்ரீபதாம்போஜரேணூந்
ஹ்ருதி கலயிதுமிச்சந் ஸர்வரோகைர்விமுச்யே।।

(சதபிஷக்) மானிடராய்ப் பிறந்தவர்கள் நிச்சலும் நோயாளிகளாய் ஆயிரம் வைத்தியர்களை அடி பணிந்து உழல்கின்றனர். அடியேனோவென்னில், மாமுனிகளின் ஸ்ரீபாத ரேணுக்களை நெஞ்சிற் கொள்ள நினைத்த அளவிலேயே நோய்களெல்லாம் தீரப் பெறுகின்றேன்.

acharya.org

येऽपूर्वभद्रपदवीमिह लब्धुकामाः

ते रम्ययोगिपदभक्तसमीहितार्थान् ।

संसाधयेयुरिह चेदथ तैस्तु सद्य :

प्राप्येत सेति विशयोऽत्र न जातु लोके ।। 25

யே஽பூர்வபத்ரபதவீமிஹ லப்துகாமா:

தே ரம்யயோகிபத பக்தஸமீஹிதார்தான்।

ஸம்ஸாதயேயுரிஹ சேதத தைஸ்து ஸத்ய:

ப்ராப்யேத ஸேதி விஶயோ஽த்ர ந ஜாது லோகே।।

(பூர்வபத்ரா) இவ்வுலகில் (அதிகார ஸ்தானங்களில்) உயர்ந்த பதவிகளைப் பெற விரும்புமவர்கள் மணவாள மாமுனிகளின் அடியவர்க்கு நன்மை செய்வரேல் உடனே அவர்கள் உயர்ந்த பதவிகளில் ஏறப் பெறுவார்கள் என்பது திண்ணம் (இது ப்ரத்யக்ஷாநுபவ ஸித்தம்)

लोकोत्तरभद्रपदस्थितिमप्युत्सृज्य चिरं वरयोगिगुरोः ।

सद्भक्तगृहाङ्गणकिङ्करतां दासो मुहुरिच्छति लब्धुमसौ ।। 26

லோகோத்தரபத்ரபதஸ்திதிமப்புத்ஸ்ருஜ்ய சிரம் வரயோகிகுரோ:।

ஸத்பக்த க்ருஹாங்கண கிங்கரதாம் தாஸோ முஹுரிச்சதி லப்துமஸௌ।।

(உத்தரபத்ரா) லோகோத்தரமாய் மங்களமான பதவி கிடைத்தாலும் அதிலிருப்பதை விட்டு மாமுனிகளின் அடியார்களின் திருமாளிகையில் பணிவிடை செய்யவே அடியேன் காதலிப்பது.

सौमित्रिरेवतीशौ श्रीरामानुजवरोपयन्तृमुनी ।

इत्यवतारांश्चतुरःचतुरः कृतवान् फणीन्द्र एव परं ।। 27

ஸௌமித்ரிரேவதீஶௌ ஸ்ரீராமானுஜவரோபயந்த்ருமுனீ।

இத்யவதாராம்ஶ்சதுர: சதுர: க்ருதவாந் பணீந்த்ர ஏவ பரம்।।

(ரேவதீ) இளையபெருமாள், நம்பி மூத்தபிரான், எம்பெருமானார், மணவாள மாமுனிகள் என்கிற நான்கு அவதாரங்களைச் செய்த திருவனந்தாழ்வானே சதுரன்.

नक्षत्रमालां वरयोगिवर्यप्रभावसंकीर्तनसंप्रवीणाम् ।

नित्यं मुखे बिभ्राति ये महान्तः ते तारकाधीशव दुज्ज्वलेयु : ।।

நக்ஷத்ரமாலாம் வரயோகிவர்யப்ரபாவஸம்கீர்தநஸம் ப்ரவீணாம்।

நித்யம் முகே பிப்ரதி யே மஹாந்த: தே தாரகாதீஶவ துஜ்ஜ்வலேயு:।।

ஸ்ரீமத் வரவரமுநி நக்ஷத்ர மாலை முற்றிற்று.

நக்ஷத்ரமாலிகா ஸ்தோத்ரத்தை இம்மலரில் வெளியிட அனுமதி தந்தருளிய காஞ்சி ஸ்வாமியின் குமாரர்க்கும் பேரனார்க்கும் அடியோங்களுடைய நன்றியை உரித்தாக்குகிறோம்.

acharya.org

ஸ்ரீமத் வரவர முனிநக்ஷத்ர மாலிகாஸ்தவம்

முகவுரை

ஸம்ஸ்க்ருத மொழியில் பலவிதமான பிரபந்தங்கள் பல கவிகளாலும், சாஸ்த்ர விற்பன்னர்களாலும் இயற்றப்பட்டு, பல்லாயிரக்கணக்கான ரஸிகர்களுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்துக் கொண்டு விளங்கி வருகின்றன. ஒரு பொருளைப் பற்றிக் கூறும் நூலுக்குப் பிரபந்தம் என்பது பொதுவானபெயர். அது துதிநூல், காவ்யம், நாடகம், சம்பூ, இதிஹாஸம், புராணம் சாஸ்த்ரங்களின்கண் காணப்படும் கணக்கற்ற விஷயங்களுள் ஏதாவதொன்றைப் பற்றிய விவரணம் ஆகிய எண்ணிறந்த வகைகளில் ஏதேனுமொன்றாக இருக்கலாம். ஒவ்வொரு வகையான பிரபந்தத்திற்கும் வெவ்வேறு விதமான இலக்கணம் ஆலங்காரிகர்களால் வகுக்கப்பட்டுள்ளது. அவ்விலக்கண நெறி வழுவாமல் அந்தந்தப் பிரபந்தம் அமைக்கப்படவேண்டும்.

இவற்றுள் துதிநூல் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. பொதுவாக பகவான், அவனுடைய தனிப்பட்ட ஒருநிலை அல்லது பல நிலைகள், மற்ற தேவதைகள், ஆசாரியர்கள், முதலியவர்களுள் யாராவதொருவரைப் பற்றி ஒரு துதிநூல் இருக்கும். ஸ்தோத்ரம், ஸ்தவம், ஸ்துதி முதலிய சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும். இவற்றில் ஏதாவதொன்றை வைத்துத் துதி நூலுக்குப் பெயர் இருக்கலாம் ஸ்ரீஸ்துதி, வரதராஜ ஸ்தவம், தசாவதாரஸ்தோத்ரம் முதலியன உதாரணங்களாகும். நூலாசிரியரின் விருப்பப்படி நூல் சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். சில துதிநூல்களின் பெயர்கள் அவற்றில் கூறப்படும் தெய்வம் அல்லது ஆசாரியன் பெயருக்குப் பின்னால் அந்நூலிலுள்ள மொத்த சுலோகங்களின் எண்ணிக்கையைச் சேர்த்து வழங்கப்படும்- தேவராஜாஷ்டகம், யதிராஜ விம்சதி, வரதராஜபஞ்சாசத், ஸ்ரீஸுதர்சனசதகம், பாதுகா ஸஹஸ்ரம் முதலியவை உதாரணங்களாகும்.

துதிநூல்களில் நக்ஷத்ர மாலாஸ்தவம் என்று ஒருவகை உண்டு. அது குறைந்த பக்ஷம் 27 சுலோகங்களையுடைத்தாயிருக்க வேண்டும். ஏனெனில் 27 நக்ஷத்திரங்களின் பெயர்களும் அவற்றில் சுலோகத்துக் கொன்றாக இருக்க வேண்டும். மேற்கொண்டு அவையடக்கம், மங்களாசாஸனம், துதியாலேற்பாடும் பலன் இவற்றைக் கொண்டு சில சுலோகங்களும் இருக்கலாம். நக்ஷத்திரங்களின் பெயர்கள் சுலோகந்தோறும் காணப்படுவதால் இதற்கு முத்ரா அலங்காரம் என்று பெயர். ஆனால் நக்ஷத்திரங்களின் பெயர்களுக்கும் நூலின் கண் உள்ள பொருளுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்க வேண்டியதில்லை.

இரண்டாவதாக நக்ஷத்ரமாலை என்ற பெயருக்கேற்றபடி, மாலையைப் போல் நடுவில் பருத்தும், மேலும் கீழும் சிறுத்தும் இருக்க வேண்டும். அதனால் நூலாசிரியர்கள் ஆரம்ப சுலோகத்தை ஒரு பாதத்திற்கு எட்டு அக்ஷரங்கள் கொண்ட சிறிய விருத்தத்தில் அமைத்து, பிறகு வரிசையாக ஒவ்வொரு சுலோகத்திற்கும் பாதாக்ஷரங்களை ஒவ்வொன்றாக அதிகப்படுத்தி வேறு வேறு விருத்தங்களின் மூலம் சுலோகங்களைப் பெரிதாக்கி, நடுநாயகமான 14வது சுலோகத்தை பாதம் ஒன்றுக்கு 21 அக்ஷரங்கள் கொண்ட பெரிய விருத்தத்திலமைத்து, பிறகு வரும் சுலோகங்களைப் பாதந்தோறும் ஒவ்வொரு அக்ஷரமாக முறையே குறைத்து 27வது சுலோகத்தை மீண்டும் பாதத்திற்கு 8 அக்ஷரங்களுடைய சிறிய சுலோகமாக அமைத்து நூலின் அமைப்பை மாலையைப் போலாக்குவர்கள். இவ்விரண்டு விதிகளும் எல்லா நக்ஷத்திரமாலைத் துதிகளுக்கும் பொதுவானவை.

acharya.org

மூன்றாவதாக நூல் அந்தாதித் தொடரில் அமைக்கப்படுவதும் உண்டு. ஒவ்வொரு சுலோகத்தின் கடைசி பதம் அல்லது கடைசி எழுத்து அடுத்த சுலோகத்தின் முதல் பதம் அல்லது முதல் எழுத்தாக இருப்பதுதான் அந்தாதித் தொடர் எனப்படுவது. பெரும்பாலான இவ்வகைத் துதிகளில் இந்த விதியும் கையாளப்பட்டுள்ளது. உதாரணமாக புகழ் பெற்ற பராங்குச நக்ஷத்ர மாலிகையைக் கூறலாம். சில துதிகளில் இவ்விதி காணப்படவில்லை. வேங்கடாத்வரி என்னும் கவியால் இயற்றப்பட்ட லக்ஷ்மீ ஸஹஸ்ரம் என்னும் துதிநூலின்கண் காணப்படும் நக்ஷத்ர மாலாஸ்தபகம் என்னும் பகுதியில் இந்த அந்தாதித் தொடர் விதி அனுஸரிக்கப்படவில்லை. மற்றும் நவீன நூலாசிரியர்கள் பலரால் இயற்றப்பட்ட துதிகளிலும் இவ்விதி பின்பற்றப்படவில்லை.

இது தவிர சில நூலாசிரியர்கள் இன்னும் சில நிர்ப்பந்தங்களைத் தாமாக ஏற்படுத்திக் கொண்டு, திறமையால் நூற்களை அற்புதமாக இயற்றியுள்ளனர். வரதநாராயண நக்ஷத்ரமாலை என்னும் துதிநூலில் மணவாளமாமுனிகளின் சிஷ்யரான வரதநாராயணர் என்னும் கோயில் கந்தாடை அண்ணன் திருமாளிகையின் கூடஸ்தர் துதிக்கப் படுகிறார். அந்நூலில் மேற்கூறிய நிர்ப்பந்தங்களைத் தவிர ஒவ்வொரு சுலோகத்திலும் அச்சுலோக விருத்தத்தின் பெயர் அவ்விருத்தத்தின் இலக்கணம் இவற்றையும் சேர்த்து ஆசிரியர் தன் கவிபாடும் திறமையையும் சந்தஸ், வ்யாகரணம் முதலிய சாஸ்த்ரங்களில் தனக்குள்ள ஒப்பற்ற புலமையையும் நன்கு வெளிப்படுத்தி யுள்ளார். அது ஒரு நிகரற்ற நூல்.

ஸ்ரீமத்வரவரமுனி நக்ஷத்ர மாலா ஸ்தவம் என்னும் இந்நூலில் ஆசிரியர் ஒரு புதுவிதமான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். அதாவது 'க' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் இந்நூல் வரிசைக்கிரமமாக சுலோகாக்ஷரங்கள் அடுத்தடுத்த எழுத்துக்களில் ஆரம்பிக்கப்பட்டு 'ஹ'வில் ஆரம்பிக்கப்பட்டு 'க'வில் முடிக்கப்பட்டுள்ளது. 'ங', 'ஞ', 'ண', 'த' என்ற எழுத்துக்களில் ஆரம்பிக்கும் சொற்கள் இல்லாதபடியால் இவை நான்கை விலக்கி, 'க' முதல் 'ஹ' வரை சுலோகங்கள் வரிசைக்கிரமமாக இயற்றப்பட்டுள்ளன.

இந்நூல் ஆசாரிய ஸார்வபௌமரான ஸ்ரீமந் மணவாளமாமுனிகளைப் பற்றிய அருமையான துதிநூலாகத் திகழ்கிறது. சொற்சுவை, பொருட்சுவை, நிரம்பி இனிமையான திராக்ஷாபாகம் என்று சொல்லப்படும் எளிய நடையில் இயற்றப்பட்டுள்ளது. இதில் மாமுனிகளின் சௌந்தர்யம், லாவண்யம், ஜ்ஞானம், பக்தி, வைராக்யம், ஆத்மகுணபூர்த்தி, நூலியற்றும் திறன் சிஷ்யர்களிடம் அபிமானம், அனுஷ்டானம், ஆசார்யத்வ பரிபூர்த்தி முதலிய யாவையும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இந்நூலில் ஆசார்ய நிஷ்டை, அதற்கு மேலான ஆசார்யபிமானம் இவை தேறின தத்துவம். நூலாசிரியர் மதுரகவிகளையொத்த ஆசார்ய நிஷ்டாபரர் என்பது அவர் இந்நூலின் கண் ஹார்த்தமாகச் சொல்லியிருக்கும் பல ஸதுக்திகளின் மூலம் உள்ளங்கை நெல்லிக்கனியைப் போல் தெளிவாக வெளிப்படுகிறது.

அதிகம்பீரமான இந்தஸ்துதியை தினமும் பாராயணம் செய்வதால் சகலமங்களங்களும் உண்டாகும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதையருளிச் செய்தவர் *யதீந்த்ர மத தீபிகை, ஸ்ரீபாஷ்ய உபந்யாஸம் முதலிய க்ரந்தங்களை செய்த ஸ்ரீநிவாஸ ஸூரி என்னும் மஹார்யர்

acharya.org

என்று பிரஸித்திபெற்ற சோளங்கிபுரம் சண்டமாருதம் தொட்டாசாரியாரின் சிஷ்யர் என்று தெரிகிறது. வேறு அதிகமாக இவ்வாசிரியரைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.

இதற்கு ஸங்க்ரஹமான ஸம்ஸ்கிருதவ்யாக்யானம் ஒன்று சுமார் எழுபது வருஷங்களுக்கு முன்கிரந்தலிபியில் அச்சிடப்பட்டு வெளியாயிற்று. அது இப்போது லுப்தமாய்விட்ட படியால் சுருக்கமான தமிழ் உரையுடன் இப்போது வெளியிடப்படுகிறது. வரவரமுனி அடியவர்கள் இந்நூலை நன்குபடித்துப் பாராயணம் செய்து நல்ல பயனைப் பெறுவதுடன் மாமுனிகளின் அளவற்ற கருணைக்குப் பாத்ரர்களாகி அனைத்து மங்களங்களையும் பெற வேண்டுமென்று ஆசார்ய சூடாமணியான மாமுனிகளைப் பிரார்த்திக்கிறேன். இந்நூலின் பெருமைகள் அனைத்தும் ஆசிரியரைச் சேர்ந்தவை. இதில் குற்றங் குறைகளிருப்பின் அவை அடியேனுடையவை. அவற்றிற்காக ரஸிகஸுஹ்ருன் மணிகளிடம் க்ஷமை வேண்டி நிற்கின்றேன் அடியேன். அஸ்மதாசார்யரான ஸ்ரீ. கோ.கா.வா. அண்ணவிலப்பன் குமார வேங்கடாசார்யர் ஸ்வாமியின் (கீர்த்தி மூர்த்தி) சதாபிஷேக மஹோத்ஸவத்தில் இதனை ஸமர்பித்து ஸத்தைப் பெறுகிறேன்.

ஸ்ரீராமாநுஜ தாஸன்

R.V. சேஷாத்திரி

With Best Compliments from



A. SREENIVASAN AND FAMILY

acharya.org

வரவரமுநி நக்ஷத்ர மாலிகாஸ்தவம்

தனியன்

மஹனீய மஹார்யாங்க்ரி மஞ்ஜுலாப்ஜ மஹச்சடா!
மந்தாமி மாம் மனீஷாம்மே மங்க்ஷூஸந்து க்ஷயேதி ஹ!!

(உரை) மிகவும் போற்றத்தகுந்தவரான "மஹார்யர்" என்று பிரசித்தி பெற்ற தொட்டயாச்சாரியரின் அழகிய திருவடித்தாமரையின் ஸ்தானத்திலுள்ள அவர்சிஷ்யரான ஸ்ரீநிவாஸாச்சாரியார் என்ற காந்திசமூகமானது அடியேனுடைய தெளிவில்லாத புத்தியை உடனே பிரகாசிக்கச் செய்ய வேண்டும்.

தெளிவில்லாத புத்தியைத் தெளியவைக்க வேண்டுமென்று பிரார்த்தித்தபடி, இது இந்நூலாசிரியரான ஸ்ரீநிவாஸாசாரியர் என்று பிரசித்தி பெற்ற தொட்டயாச்சாரியரின் சிஷ்யரின் தனியன்.

நூல்

கருணாவாரிதிர் ஜீயாத் காந்த ஜாமாத்ருஸம்யமீ!
ஆஸீத்யேநாச்வினீலோக: தமோக்நேநேச்ச தாஸுகம்!!

(பதவுரை) (ஆசு) சீக்கிரமாக (சிஷ்யர்களால் நினைக்கப்பட்ட மாத்திரத்தில் சிறிதும் தாமதமில்லாமல்) **தமோக்நேந**- (அவர்களின்) அஜ்ஞானமாகிற இருளைப் போக்கவல்ல வரும், **ஸுகம்**- அவர்களுக்குப் பரமஸுகத்தை (மோக்ஷஸுகத்தை) **இச்சதா**- விரும்புகிறவருமான **யேந**- எவரால், **லோக:**- உலகமானது **இநீ**- ஸூர்யனை உடையதாக **ஆஸீத்**- ஆயிற்றோ, **கருணவாரிதி**- கருணைக் கடலான, **ஸ்காந்தஜாமாத்ருஸம்யமீ**- அந்த அழகிய மணவாளமாமுனிகள் என்ற ஆசாரிய ஸார்வபௌமர் சிறப்புற்று விளங்கட்டும்.

தன்னையாச்ரயித்தவர்களின் அஜ்ஞானத்தைப் போக்கி அவர்களுக்கு மோக்ஷம் என்ற பரமானந்தம் ஏற்பட வேண்டுமென்று எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிற கருணையங்கடலான மணவாளமாமுனிகள் என்கிற ஆசார்யஶ்ரேஷ்டர் சிறப்புற்று விளங்கட்டும் என்று அவருக்கு (பல்லாண்டு பாடி) மங்களாசாஸனம் செய்கிறார்.

அச்வினீ என்ற முதல் நக்ஷத்ரத்தின் பெயர் இங்கு ஸூசிப்பிக்கப்படுகிறது. ஆசாரிய பரமாகப் பொருள் கூறுகையில் ஆசு இநீ: என்று பதம் பிரிக்க வேண்டும் இன: என்றால் ஸூர்யன். ஸூர்யனையுடையது 'இனீ' 'லோகம்:' என்கிற பதத்திற்கு விசேஷணம். லோகம் என்றால் உலகம் அல்லது மனிதஸமூகம். உலகத்திற்கு இருளைப்போக்கவும் மகிழ்ச்சியையளிக்கவும் ஸூர்யன் இன்றியமையாதது போல, ஆச்ரிதஜனங்களின் மருள் நீங்கி அவர்களுக்குச் சிறந்த அறிவு ஏற்படுத்துவதும், அவர்களுக்கு மோக்ஷஸாம் ராஜ்யம் என்கிற பேரானந்தம் ஏற்படுவதற்கும் ஆசாரிய கடாக்ஷம் அத்யாவசியம் என்று பொருள்.

'க' என்ற எழுத்தில் ஆரம்பித்து அடுத்த 'க' என்ற எழுத்தில் சுலோகம் முடிகிறது. இப்படியே ஒவ்வொரு சுலோகத்திலும் அக்ஷரஸரணி நோக்கற்பாலது.

acharya.org

ஒவ்வொரு பாதத்திற்கும் 8 அக்ஷரங்களைக் கொண்ட அனுஷ்டுப் எனும் வ்ருத்தம் இங்குக் கையாளப்பட்டுள்ளது.

கண்டயதீயம் நோதுரிதம் காங்க்ஷித தாத்ரீ சிந்தயதாம்!
ஸந்ததபக்தி ஸ்ரீபரணீ ஸௌம்ய வராக்யாதே ஸுபகா!! 2

(பதவுரை) **ஸௌம்யவர-** ஹே அழகிய மணவாள மாமுனிகளே! **தே-** தேவரீருடைய, **இயம்-** இந்த ஸுபகா- மங்களகரமான, **ஆக்யா-** திருநாமமானது, **சிந்தயதாம்-** தேவரீரிடம் பக்திபண்ணுகிற **ந:** - அடியோங்களுடைய, **துரிதம்** - பாபத்தை **கண்டயதி-** போக்கடிக்கிறது. **காங்க்ஷிததாத்ரீ-** விரும்பியவையனைத்தையும் கொடுத்துக் கொண்டு **ஸந்தத பக்தி ஸ்ரீபரணீ** எப்போதும் இடையறாத பக்தியை மேலும் மேலும் விருத்தி பண்ணுவதாகவும் ஆகிறது.

திருவரங்கச் செல்வனாரான அழகிய மணவாளனின் திருநாமத்தையுடைய மாமுனியை விளித்து அவர்தம் நாமப்ரபாவத்தை விளக்குகிறார். தேவரீருடைய திவ்ய நாமம் ஆச்ரிதர்களின் பாபங்களைப் போக்கி, அவர்களின் இஷ்டங்களைப் பூர்த்தி செய்து பகவத் பக்தியை மேன்மேலும் அபிவிருத்தியடையச் செய்கிறது. நாமிக்குப் போலவே நாமத்துக்கும் பக்தர்களுக்கு அநிஷ்ட நிவ்ருத்தியையும், இஷ்டப் பிராப்தியையும் பண்ணிக்கொடுக்கும் சக்தி இருக்கிறது என்பது கருத்து.

பரணீ என்றால் தரிக்கிறது, அபிவிருத்தியடையச் செய்கிறது என்று பொருள். இங்கு பரணீ நக்ஷத்ரம் ஸூசிப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சுலோகம் பாதத்திற்கு 9 அக்ஷரங்கள் கொண்ட மணிமத்யம் என்னும் விருத்தத்தில் இயற்றப்பட்டுள்ளது.

காயம்ஸ்த்வாம் (காயேத்த்வம்) மனுஜ: கலேபரம்
க்ரவ்யாஸ்ருங் மலக்ருத்தி காரணம் !
ஸம்த்யஜ்ய த்வரிதம் ஸமோததே
வைகுண்டே ஹரிணா ஸஹாநக: !! 3

(பதவுரை) **மனுஜ:ஸ:** - தேவரீரிடம் பக்தி கொண்ட அந்த மனிதன், **த்வாம்-** தேவரீரை, **காயன்-** (பெருமைகளைப்) பாடிக்கொண்டு (பக்தி பண்ணுவானாகில்- இங்கு 'காயன்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'காயேத்' என்ற பாடம் இருக்குமாகில் ஸ்வாரஸ்யமாயிருக்கும். பொருள் நேராகவே ஏற்படும் - **க்ரவ்ய-** மாமிசம், **அஸ்ருக்-** ரத்தம், **மல-** மலம், **க்ருத்தி** - தோல் இவற்றை, **காரணம்-** காரணமாக உடைய (இவற்றினாலாகிய) **கலேபரம்-** சரீரத்தை **த்வரிதம்-** சீக்கிரமாக (இப்பிறப்பிலேயே) **ஸம்த்யஜ்ய-** விட்டொழித்து, **அநக-** பாபம் நீங்கியவனாய், **வைகுண்டே-** பரமபதத்தில், **ஹரிணாஸஹ-** எம்பெருமானுடன் கூட, **மோததே-** ஆனந்தத்தையனுபவிக்கிறான்.

செய்வினையடியாக கர்ம பூமியாகிய இவ்வுலகில் மாமிசம், ரத்தம், மலம், தோல் இவற்றாலாகிய அழுக்குடம்புடன் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும், ஆசாரியனை ஆச்ரயித்து அவருடைய பரமகிருபையால், இப்பிறப்பிலேயே (இதன் முடிவில்) ஸம்ஸாரத்தை விட்டொழித்து மோக்ஷத்தை அடைகிறான் என்னும் தத்துவம் இங்கு உணர்த்தப்படுகிறது.

கிருத்திகா நக்ஷத்ரம் ஸூசிதம். விருத்தம் **சுத்தவிராட்** பாதந்தோறும் 10 அக்ஷரங்கள் கொண்டது.

acharya.org

கண்டாபதோ லோககுரோ: க்ருதீனாம்
வ்யாக்யானரூபோ ப்ருசதுர்கமாணாம் ।
ஆரோஹிணீனாம் நிகமாந்த பூமே:
யேநாரசீடே தமிமம் ஸுவாசம் ॥ 4

(பதவுரை) **யேந-** எந்தமாமுனிவரால், **லோககுரோ:-** பிள்ளையுலகாசிரியருடைய, **ப்ருசதுர்கமாணாம்-** எளிதில் அடைய முடியாதவைகளும், (புரிந்து கொள்ள முடியாதவைகளும்) **நிகமாந்தபூமே:-** தெளியாத மறை நிலங்களுக்கு, **ஆரோஹிணீனாம்-** ஏணிபோல் ஏற்று விக்கவல்ல வைகளுமான (வேதாந்தார்த்தங்களை முழுதும் விளங்கவைப்பவைகளுமான) **க்ருதீனாம்-** மூமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசனபூஷணம் முதலிய கிரந்தங்களுடைய **வ்யாக்யானரூப: -** உரையாக உருவங் கொண்ட, **கண்டாபத:** - ராஜபாட்டை என்னலாம்படி வசதியான மார்க்கம் (எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வழியானது) **அரசி-** செய்யப்பட்டதோ (ஏற்பாடு செய்யப்பட்டதோ), **தம்-** அந்த, **ஸுவாசம்-** விசதவாக்சிகாமணிகள் என்று போற்றப்படும், **இமம்-** இந்த மாமுனிகளை, **ஈடே-** துதிக்கிறேன்.

அஷ்டாதசரஹஸ்யங்கள் என்று பிரசித்தி பெற்ற 18 ரஹஸ்யங்களைப்பரமாச்சார்யரான பிள்ளை லோகாசாரியர் இயற்றி அவற்றில் உயர்ந்த வேதாந்தார்த்தங்களைத் தமக்கே உரித்தான பாணியில் அழகாக அருளிச் செய்துள்ளார். அவற்றை எளிதில் புரிந்து கொள்வது கடினம். அதனால் நம் மாமுனிகள் அவற்றுள் முக்கியமான சிலகிரந்தங்களுக்கு இனிய எளிய வ்யாக்யானங்கள் அருளிச் செய்து யாவரும் பயன் பெறும் வகையில் பரமோபகாரம் செய்துள்ளார். ராஜா செல்லும் வீதி நன்கு செப்பனிடப்பட்டுச் சுகமாக நடக்கலாம் படியிருக்கும். அதுபோல் பிள்ளையுலகாரியரின் மறை நிலங்களான அவருடைய கிரந்தங்களுக்குச் சென்று அவற்றை நன்கு கற்று அனுபவிக்க மாமுனிகள் ராஜவீதி என்னலாம்படியான அருமையான வ்யாக்யானங்கள் இயற்றியுள்ளதை ஆசிரியர் அழகாக வருணித்துள்ளது. நோக்கற்பாலது.

இங்கு ரோஹிணீ நக்ஷத்திரம் ஸூசிப்பிக்கப்பட்டுள்ளது. பாதத்திற்கு 11 அக்ஷரங்கள் கொண்ட **இந்திரவஜ்ரா** என்னும் விருத்தம் கையாளப்பட்டுள்ளது.

சந்த்ரேம்ருகசீர்ஷாகாரம் மலமாஸ்தே
தஸ்மிந்நச சோபா காசித்திவஸேஸ்தி ।
நித்யம் வரயோகின் நைஜே வதனாப்ஜே
ஜாகர்த்யதிசாபா நூத்னாப்ருச மச்சா ॥ 5

(பதவுரை) **வரயோகின்-** மணவாள யோகியே! **சந்த்ரே-** சந்திரனிடத்தில், **ம்ருகசீர்ஷாகாரம்-** மானின் தலைவடிவமான, **மலம்-** களங்கம், **ஆஸ்தே-** இராநின்றது, **ச-** மேலும், **தஸ்மின்-** அந்தச் சந்திரனிடத்தில், **திவஸே-** பகலில், **காசித்**, எவ்விதமான, **சோபா-** பிரகாசமும், **ந அஸ்தி-** இருக்கவில்லை. **நைஜே-** தேவரீருடைய, **வதனாப்ஜே-** முகமாகிற சந்திரனிடத்தில், **நித்யம்-** எக்காலத்திலும், **ப்ருசம்-** மிகவும், **நூத்னா-** புதிய, **அச்சா-** நிர்மலமான **அதிசோபா-** அதிகமான சோபையானது, **ஜாகர்த்தி-** விளங்குகின்றது.

இச்சுலோகத்தில் மூன்றாம் பாதத்தில் (நித்யம்கமனீயோத்வோடுர் வதனேந்தௌான்ற மற்றொரு பாடமும்) காண்கிறது அப்பொழுது "**கமனீயோத்வோடு:-** அழகிய மணவாள மாமுனியின், **வதனேந்தௌ:-** முகமாகிற சந்திரனில்" என்று பொருள். மாமுனிகளின் திருமுகத்தைச்

acharya.org

சந்திரனுக்கு ஒப்பிட்டு அது சந்திரனைக் காட்டிலும் சிறப்புடையது என்கிறார். எங்ஙனேயென்னில், சந்திர பிம்பத்தின் நடுவில் மான் அல்லது முயல் வடிவமான களங்கம் உள்ளது. அதனால்தான் அவனுக்கு மிருகாங்கன், சசாங்கன் என்ற பெயர்கள் வழங்கி வருகின்றன. மாமுனிகளின் திருமுக மண்டலத்தில் எவ்விதமான களங்கமும் இல்லை. மேலும் அந்தக்களங்கத்துடன் கூடிய சந்திரபிம்பமும் பகலில் தெரிவதில்லை. கிருஷ்ணபக்ஷத்தில் பூர்த்தியாகத் தெரிவதில்லை. அங்ஙனன்றிக்கே மாமுனிகளின் திருமுகமானது பகல், இரவு, சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் என்ற வாசியற எல்லாக்காலங்களிலும் பூர்ணமான சோபையுடன் அழகாக விளங்குகின்றது.

மிருக சீர்ஷம் இங்கு ஸூசிதம். விருத்தம் மணிமாலா.

சாத்ரேப்ய: சடமதனார்யலோககுர்வா-
த்யாசார்யப்ரதிததமப்ரபந்தபாவான் !
வ்யாகுர்வத்யம்ருதமயீஸ்த்வயிஸ்வஸூக்தீ:
ஸ்நேஹார்த்ரா: பபுரிஹயே ஸுஜன்மபாஜ: !! 6

(பதவுரை) **த்வயி**- தேவரீர், **சாத்ரேப்ய:** - சிஷ்யர்களுக்கு **சடமதனார்ய**- நம்மாழ்வார், **லோககுர்வாத்யாசார்ய**- நம்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர் முதலிய மஹாசாரியர்களின், **ப்ரதித**- மிகவும் பிரசித்தி பெற்ற, **ப்ரபந்தபாவான்**- நூல்களின் அர்த்த விசேஷங்களை, **வ்யாகுர்வதி**- வ்யாக்யானம் செய்தருளுகையில், **அம்ருதமயீ:** - அமுதம் போல் இன்பம் பயப்பவைகளும், **ஸ்நேஹார்த்ரா:** - பக்தி நிறைந்தவையுமான, **ஸ்வஸூக்தி:** - தேவரீரின் ஸூக்திகளைஇ யே- எவர்கள், பபு:- பருகினார்களோ (கேட்டு அனுபவித்தார்களோ அவர்கள், **இஹ**- இவ்வுலகில், **ஸுஜன்மபாஜ:**- நற்பிறப்பெடுத்த பாக்யசாலிகள்.

மாமுனிகளின் பக்திததும்பும் அமுதம்போல் இன்பம் பயக்கக்கூடிய ஸ்ரீஸூக்திகளையனுபவிப்பவர்கள் பெரும்பாக்யசாலிகள். படிக்கும்போதே இன்பம் பயக்கவல்ல ஸ்ரீஸூக்திகளை நேரில் செவிமடுத்து அனுபவியாநின்ற சிஷ்யர்களின் பாக்யம் எடுத்துரைக்கற்பாலதன்று என்று கூறுகிறார். ஆசாரியரின் கிரந்த ரசனாசாதுர்யம் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

இச்சுலோகத்தில் (ஸ்வஸூக்தி) என்பதற்குப்பதிலாக (த்வதுக்தீ:) என்ற பாடபேதம் காணப்படுகிறது. அதற்கும் பொருள் ஒன்றுதான்.

ஆர்த்ரா என்னும் திருவாதிரை நக்ஷத்திரம் இங்க ஸூசிதம். விருத்தம் பாதத்திற்கு 13 அக்ஷரங்கள் கொண்ட ப்ரஹர்ஷிணீ.

ஜஜ்ஞே பவான் ப்ரதமமச்யுத தல்பரூபீ
சேஷஸ்ததோ ரகுபதே ரனுஜோத ஸீரீ!
ஸ்ரீபாஷ்ய க்ருத்வத புனர்வஸுதாதலே த்வம்
ப்ராப்யைவ ஸௌம்ய வரதாம் பவிதாம் ஸமௌஜ்ஜ:!! 7

(பதவுரை) **ப்ரதமம்**- முந்துற முன்னம், **அச்யுத**- எம்பெருமானுடைய **தல்பரூபீ**- படுக்கையான, **சேஷ:**- ஆதிசேஷனான **பவான்**- தேவரீர், **தத:**- பிறகு, **ரகுபதே:**- ஸ்ரீராமனுடைய, **அனுஜ:**- திருத்தம்பியான லக்ஷ்மணனாகவும் **அத**- அதற்குப் பிறகு, **ஸீரீ**- பலராமனாகவும், **அதபுன:**- பின்னையும் **ஸ்ரீபாஷ்யக்ருத்**- எம்பெருமானாராகவும் **ஜஜ்ஞே**- அவதரித்தருளிற்று.

acharya.org

அதபுன:து- அதற்குப் பின்னையோவென்றால் **த்வம்-** தேவரீர், **வஸுதாதலே-** பூமியில் **ஸௌம்யவரதாம்-** மணவாள மாமுனிகளான தன்மையை **ப்ராப்ய** ஏவ- அடைந்தபிறகே, **பவித்ரம்-** மானிடப்பிறப்பை, **ஸமௌஜ்ஜ:-** அறவே விட்டருளிற்று (மோக்ஷமடைந்தது).

எம்பெருமானின் மெத்தென்ன பஞ்சசயனமான ஆதிசேஷனே இளைய பெருமாளாகவும், நம்பி மூத்தபிரானாகவும், ஸ்ரீ பாஷ்யகாரராகவும், கடைசியில் மணவாள மாமுனிகளாகவும் அவதரித்தருளினார். ஆயினும் மணவாள மாமுனிகளுக்குப் பிறகு அவர் மீண்டும் அவதரிக்கவில்லையாதலால், "நசபுனராவர்த்ததே, நசபுனராவர்த்ததே" என்னும்படி மீண்டும் பிறவி எடுக்காத மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைந்தார். மேலே கூறிய மற்ற அவதாரங்களுக்குப் பிறகு பிறவி எடுத்தபடியாலும், மாமுனியவதாரத்திற்குப் பிறகு பிறவி எடுக்காததாலும் பரமபதமெய்தினபடி. ஆகவே மற்ற அவதாரங்களைக் காட்டிலும் மணவாள மாமுனிவதாரம் சாலச்சிறந்தது என்று சமத்காரமாக அருளிச்செய்கிறார்.

இதன்தேறின தாத்பரியம் வருமாறு: மந்தமதிப்புவிமானிடர் தங்களை வானிலுயர்த்தும் பொருட்டுப் பாம்பரையன் பலகாலும் இவ்வுலகில் தோன்றியருளினன். ஆயினும் முழுப்பயன் விளையாதொழிந்து அவனே மணவாள மாமுனிகளாகத் தோன்றியவாறே, பரமபதம் எவர்க்கும் கையிலங்கு நெல்லிக்கனியாயிற்று. எனவே மீண்டும் இவ்வுலகில் வந்து தோன்ற வேண்டிய பணி பணியரசனான ஆதிசேஷனுக்கு இல்லையாயிற்று என்றவாறு.

"ஸ்ரீபாஷ்யக்ருத்" எனபதற்குப் பதிலாக **"ராமானுஜ:"** என்றும், **"பவிதாம்"** என்பதற்கு பதிலாக, **"அவநீம்"** என்றும் பாடபேதங்கள் காணப்படுகின்றன. இங்கு புனர்வஸு நக்ஷத்ரம் ஸூசிதம். பாதந்தோறும் 14 அக்ஷரங்களைக் கொண்ட வஸந்ததிலகா இச்சுலோகவிருத்தம்.

ஜடிதி யதி பவாப்தே: ஸ்யாத்திதீர் ஷாந்ருணாம்தே
வரவர பதபக்திம் தர்ஹி புஷ்யந்து சித்தே
ஸகலு நிகில பக்தவ்ராத ரக்ஷைகதீக்ஷ:
ஸகல குணமணீநாம் காபி நிக்ஷேபபேட 8

(பதவுரை) **ந்ருணாம்-** மனிதர்களுக்கு, **ஜடிதி-** சீக்கிரமாக, **பவாப்தே: திதீர்ஷா-** பிறவிக்கடலைத் தாண்டும் விருப்பம், **யதி-** இருக்குமேயானால், அவர்கள், **வரவரபதபக்திம்-** மணவாள மாமுனிகளின் திருவடிகளில் பக்தியை, **சித்தே-** மனதில், **புஷ்யந்து-** போஷிக்கட்டும் **ஸ:-** அவர், **நிகில பக்தவ்ராத ரக்ஷைகதீக்ஷ:-** ஸகல பக்த சமூகங்களையும் காப்பாற்று வதாகிற ஒப்பற்ற விரதம் பூண்டவராகவும், **காபி-** ஈடு இணையில்லாத, **ஸகலகுணமணீநாம்-** எல்லாக் கல்யாண குண ரத்னங்களையும் **நிக்ஷேபபேட-** வைத்துக்காக்கும் பெட்டகமாகவும் இருக்கிறார் **கலு-** நிச்சயம்.

ஆச்ரிதர்களனைவரையும் காப்பாற்றுவதையே விரதமாகக் கொண்டவரும், எல்லாக் கல்யாண குணங்களுக்கும் உறைவிடமாகத் திகழ்பவருமான மணவாள மாமுனிகளின் திருவடிகளில் சிறந்த பக்தியுள்ளவர்களுக்கு எளிதில் மோக்ஷம் கிடைக்கும். பிறவிக்கடலை கடந்து மோக்ஷத்தையடைய அது ஒன்று தான் வழி என்கை, ஆசார்யாபிமானமே பரமோபாயம் என்றாராய்த்து.

ஜடிதி- சீக்கரம், அதாவது மறுஜன்மம் எடுக்க வேண்டாதபடி இப்பிறவியின் இறுதியிலேயே என்று பொருள்.

acharya.org

புஷ்ய நக்ஷத்திரம் ஸூசிதம். மாலினீ விருத்தம். பாதத்திற்கு 15 அக்ஷரங்கள் கொண்டது.

டிகதே மநஸ்ஸதைவ மாமகீன மாதாரத்வத்
பாதபத்யுக்ம மேவஸத்ம பூதமாச்ரிதானாம்!
அஞ்ஜஸார்ப் பயாத்ய மய்யபாங்க த்ருஷ்டிமிஷ்டதாம்த்வம்
ஸுந்தரோபயந்த்ருயோகி ராடபக்தி மத்தவிஷ்ட!! 9

(பதவுரை) **ஸுந்தரோபயந்த்ருயோகி ராட்**- ஹே அழகிய மணவாளயதி ஸார்வபௌமரே! **அபக்திமத்த விஷ்ட**- பக்தியில்லாதவர்களுக்குக் கிட்டாதவரே! **ஆச்ரிதானாம்**- பக்தர்களுக்கு, **ஸத்மபூதம்**- அடைக்கலமான, **த்வத்பாதபத்ம யுக்மமேவ**- தேவரீருடைய திருவடித் தாமரைகளையே, **மாமகீனம்**- என்னுடையதான, **மன:**- மனது, **ஸதாஏவ**- எப்பொழுதும் **ஆதராத்** **அன்புடன்**, **டிகதே**- சென்றடைகிறது (நோக்கி ஓடுகிறது) **த்வம்**- தேவரீர், **மயி**- அடியேன்மீது, **இஷ்டதாம்**- விரும்பிய பலனைக் கொடுக்ககூடிய **அபாங்கத்ருஷ்டிம்**- திவ்ய **கடாக்ஷத்தை**, **அத்ய**- இப்பொழுது. **அஞ்ஜஸா**- சீக்கிரமாக, **அர்ப்பய**- செலுத்தி அருள்வீராக!

ஸந்யாஸிகளுள் சிறந்தவரும், பக்தர்களுக்கு வெகுசுலபரும், மற்றவர்களுக்கு எட்டாதவருமான மணவாள மாமுனிகளின் ஆச்ரிதர்களுக்குப் புகலிடமான திருவடித் தாமரைகளிலேயே எப்பொழுதும் தன் மனம் அன்புடன் ஈடுபடுகிறது, அதையே புகலாக நினைத்து எப்பொழுதும் தியானம் செய்கிறது யாவற்றையும் கொடுக்க வல்ல திவ்ய கடாக்ஷத்தைத் தம் மீது செலுத்தவேண்டும், தம்மைக் குளிரக்கடாஷிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார். ஆசாரியகடாக்ஷத்தின் பெருமை கூறுவது இங்கு நூலாசிரியர்க்கு விவக்ஷிதம்.

ஏகயைவ குரோர்த்ருஷ்ட்யா த்வாப்யாம் வாபிலபேதயத்!
நதத்திஸ்ருபிரஷ்டாபி: ஸஹஸ்ரேணாபிகர்ஹிசித்!!

[ஆசாரியனின் (மானஸீகமான) ஒரு கடாக்ஷத்தினாலோ (பார்வையினாலோ) அல்லது (கண்களாலான) இருகடாக்ஷங்களினாலோ (பார்வைகளினாலோ) கிடைக்கக் கூடிய பலன் மூன்று பார்வைகளையுடைய (முக்கண்ணனான சிவ பெருமானாலோ, எட்டுப்பார்வைகளையுடைய (நான் முகனான) பிரம்மதேவனாலோ, ஆயிரம் பார்வைகளையுடைய (ஸஹஸ்ராக்ஷனான) எம்பெருமானாலோ கூடக்கிடைக்க வல்லதன்று]

என்ற வேதாந்தாசாரியருடைய ஸுபாஷிதநீவி சுலோகம் இங்கு அநுஸந்தேயம்.

ஸர்ப்பத்தை தேவதையாகவுடைய ஆச்லேஷா (ஆயில்ய) நக்ஷத்ரம் 'ஸார்ப்ப' என்னும் பதத்தால் இங்கு ஸூசிதம். விருத்தம் பாதமொன்றுக்கு 16 அக்ஷரங்கள் கொண்ட **சித்ரம்**.

டகார இவ தருச்தே யதிஹ வஸ்து நிச்யம்பரே
திவா விபணி கந்துவத்யதபாம் தரீத்ருச்யதே !
ஜனஸ் ததுபயம் முதா வததி புஷ்பவந்தாவிதி
ஸ்திதே வரவாரபிதே தவயிருந்ணாமகக்நேஜட: !! 10

(பதவுரை) **ந்ருணாம்**- மனிதர்களின், **அகக்நே**- அஜ்ஞானமாகிற இருளைப் போக்க வல்லவராய், **வரவராபிதே**- அழகிய மணவாளனின் திருநாமத்தையுடைய, **த்வயி**- தேவரீர் **ஸ்திதே**- எழுந்தருளியிருக்கையில், **இஹ**- இவ்வுலகில் (உள்ள), **ஜட:ஜன:** - மூடஜனங்கள் (வஸ்துக்களின் உண்மையான தன்மையையறியாத ஜனங்கள்), **அம்பரே**- ஆகாயத்தில், **நிசி**-

acharya.org

இரவில் **யத்**- எந்த, **வஸ்து**, (சந்திரனாகிற) வஸ்து, **டகார இவ**- 'ட' வர்க்கத்தின் இரண்டாவது எழுத்தைப் போல் வட்டமாக! **(O நாகரி, O கிரந்தம்)** த்ருச்யதே- காணப்படுகிறதோ, **திவா**- பகலில், **விபணிகந்துவத்**- கடையில் விற்கப்படும் தோசைக் கல்லை போல் வாட்டமாக **யத்**- எந்த **அபாம்வஸ்து**- மற்றொரு வஸ்து (சூரியன்), **தரீத்ருச்யதே**- நன்கு காணப்படுகிறதோ, **ததுபயம்**- அவையிரண்டையும், **புஷ்பவந்தௌ இதி**- சூரியன் என்றும், சந்திரன் என்றும் **முதா**- அறியாமையால், **வததி**- சொல்லுகின்றனர்.

இரவில் மட்டும் பிரகாசிக்கிற சந்திரனும், பகலில் மாத்திரம் ஒளிவீசுகின்ற சூரியனும், வெளி இருளை மட்டும் போக்க வல்லவர்கள். எப்போதும் பகல், இரவு என்ற வாசியின்றிக்கே அதிதேஜஸ்வியாகத் திகழ்ந்தவரும் அஜ்ஞானமாகிற அகவிருளையும், சகலபாபங்களையும் போக்க வல்லவருமான மணவாள மாமுனிகளை விட்டு சந்திரஸூர்யர்களைப் போற்றுவது அறியாமையாகும் என்கிறார்.

கந்து என்றால் தோசைக்கல் **'ஸ்வேதினீ'** என்று பர்யாயபதம். மூன்றாம் பாதத்தில் 'புஷ்பவந்தௌ' என்பதற்குப் பதிலாக, **'சந்த்ரஸூர்யௌ'** என்ற பாடபேதம் உள்ளது. பொருள் ஒன்றுதான். நாலாவது பாதத்தில் 'ஸ்திதே ப்ருசமகாபஹே' த்வயிவரோபயந்தர் ஜட: இதற்கும் பொருள் **வரோபயந்த**:- மணவாள மாமுனியே! **ப்ருசம்**- மிகவும் (அடியோடு) **அகாபஹே**- பாபத்தை (அஜ்ஞானத்தைப்) போக்குகின்ற **த்வயி**- தேவரீர் **ஸ்திதே**- எழுந்தருளிருக்கையில் 'ந்ருணாமகக்நே'யில் உள்ள மகம் என்னும் பதம் அப்பெயரையுடைய நக்ஷத்திரத்தை ஸூசிப்பிக்கிறது. இங்கு 17 அக்ஷரங்களையுடைய **ப்ருத்வீ** விருத்தம் கையாளப்பட்டுள்ளது.

டயனஸரணி மந்வியாத்வாய ஸச்சேத்கதாசித்க்ஷிதௌ
ஹரி பதகிணசிஹ்னித ஸ்வாம்ஸ தேசஸ்ய பக்ஷீசிது:
ததிஹ ஸரஸ பூர்வகா பல்குனீரந்த்ர ஸந்தர்பக்ருத்
வரவரமுனிபுததிசாதுர்ய மந்யே ந்வியுர்வைத்ருடம் !! 11

(பதவுரை) **க்ஷிதௌ**- இப்பூவுலகில், **கதாசித்**- ஒருக்கால், **வாயஸ:**- காக்கையானது, **ஹரிபத**- மகா விஷ்ணுவின் திருவடிகளாலேற்பட்ட, **கிண**- தழும்புகளினால், **ஹ்சிநித**- அடையாளமிடப்பட்ட, **ஸ்வாம்ஸதேஸ்ய**- தன்னுடைய தோள் பட்டைகளையுடைய **பக்ஷீசிது**- கருடனுடைய, **டயனஸரணிம்**- பறக்கும் விதத்தை, **அந்வியாத்சேத்**- பின் பற்றுமேயாகில், **தத்**- அப்பொழுது, **இஹ**- இங்கு, **அந்யேவை**- மற்ற சாமான்ய ஜனங்களும் **ஸரஸ**- சுவைமிக்க, **பூர்வகா**- வழிகாட்டிகளாயுள்ள (சிறந்த), **அபல்கு**- நல்லரஸமுள்ளவைகளான, **நீரந்த்ர**- ஏராளமான, **ஸந்தர்பக்ருத்**- கிரந்தங்களை இயற்றியுள்ள, **வரவரமுனி**- மணவாள மாமுனிகளுடைய **புத்திசாதுரீம்**- புத்திசாதுர்யத்தை, **அந்வியு**:- பின்பற்றுவார்கள் **த்ருடம்**- நிச்சயம்.

பிறர்க்கில்லாத மேதா விலாஸத்தையுடைய மணவாளமாமுனிகள் அருளிச் செய்துள்ள சிறந்த ரஸ பூர்த்தியுள்ளவைகளும், அநேகங்களுமான கிரந்தங்களை வேறு சாதாரண ஜனங்கள் எழுத முடியுமோ! அது காக்கைக்கு கருடனைப் போல் பறக்கும் நிலை ஏற்படுவதை யொக்கும் சாக்ஷாத் எம்பெருமானுக்கு வாகனமானதும், இடைவிடாமல் எம்பெருமானின் கால் அடிவைப்புகளினால் தழும்பேறி அதனால் அழகான தோள்பட்டைகளையுடையதுமான கருடன் எங்கே! அவரின் பறக்கும் திறன் எங்கே! அற்பமான ஒரு காக்கையும் அதன் பறக்கும் திறமையும் எங்கே! இந்த திருஷ்டாந்தத்தின் மூலம் மாமுனிகளின் நூல் இயற்றும் திறனை வருணித்தபடி. பூர

acharya.org

நக்ஷத்திரம் பூர்வகா பல்குனீ என்னும் சொற்களால் ஸூசிதம். பாதங்தோறும் 18 அக்ஷரங்களைக் கொண்ட 'நாராசம்' என்னும் விருத்தம் இங்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. இவ்விருத்தத்திற்கு 'நிசா' என்ற மற்றொரு பெயரும் உண்டு.

டக்காவேணும்ருதங்ககாளஹமுகைர்வாத்யை ஸ்ஸதா நாதிதே
ஸௌதாக்ர்யே வரஸுந்தரீசதவ்ருத: ஸானந்த மத்ய ப்ரபு:
ச்வோநக்ன: ஸகபால பாணிரவசோ பிக்ஷாமடன் த்ருச்யதே
தந்மர்த்யோத்தரபல்குனீரஸபவம் காந்தோபயந்த்ராச்ரித: 12

(பதவுரை) **மர்த்ய**- ஓ மனிதனே! **அத்ய**- இன்று **டக்காவேணு ம்ருதங்க காஹளமுகை:**- உடுக்கை, புல்லாகுழல், மிருதங்கம், எக்காளம் முதலிய, **வாத்யை** வாத்யங்களினால் **ஸதா**- எப்பொழுதும், **நாதிதே**- மங்களநர்தனஞ் செய்யப்பட்ட **ஸௌதாக்ர்யே**- மிகச் சிறந்த உப்பரிகையில்- **ஸௌதாக்ரே** என்ற மற்றொரு பாடத்தில் உப்பரிகையின் மேல் என்று பொருள் **ஸானந்தம்**- மிக்க மகிழ்ச்சியுடன், **வரஸுந்தரீசதவ்ருத:**- அழகிய பெண்கள் பலரால் சூழப்பெற்றுள்ள, **ப்ரபு:**- தனிகனொருவன், **ச்வ**- நாளையதினம் **நக்ன:**- உடுக்க உடையின்றி **ஸகபாலபாணி:**- கையில் பிச்சையெடுக்கும் ஓட்டுடன் கூடியவனாகவும், **அவச:**- திக்கற்றவனாகவும், **பிக்ஷாம் அடன்**- பிச்சை எடுப்பவனாகவும், **த்ருச்யதே**- காணப்படுகிறான் **தத**- ஆகையால், **பல்குணீரஸபவம்**- ஸாரமில்லாததும், துன்பம், நிறைந்ததுமான ஸம்ஸாரத்தை, **காந்தோபயந்தராச்ரித: (பூத்வா)** அழகிய மணவாள மாமுனிகளை அடைக்கலம் புகுந்தவனாகி, **உத்தர**- கடப்பாயாக!

செல்வம் நிலையற்றது. ஒருகால் சகல சௌபாக்யங்களையும் பெற்ற மனிதன் வெகு சீக்கிரமாகவே எல்லாவற்றையும் இழந்து பிச்சைக்காரனாகிவிடுகிறான். இன்றைய பிரபு நாளை த்ரித்ரனாகிவிடுகிறான். ஆகவே இம்மனித வாழ்க்கை நிலையில்லாதது, ஸாரமற்றது, துன்பம் நிறைந்தது. ஆகையால் மாமுனிகளின் திருவடிகளில் அடைக்கலம் புகுந்து ஸதாசார்ய கடாக்ஷத்தினால் ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவாயாக என்றபடி

காந்தோபயந்தராவித:- என்ற பாட பேதம் உள்ளது அப்பொழுது **காந்தோபயந்தரா**- மணவாள மாமுனியால், **அவித:**- காப்பாற்றப் பட்டவனாக என்று பொருள், "ஒரு நாயகமாயோட வுலகுடனாண்டவர்" என்ற நம் ஆழ்வார் ஸ்ரீஸூக்தி இங்கனுசந்தேயம்.

உத்தரபல்குனீ என்னும் உத்தர நக்ஷத்ரம் ஸூசிதம் பாதந்தோறும் 19 அக்ஷரங்கள் கொண்ட சார்தூல விக்ரீடிதம் இங்கு சுலோக விருத்தம்.

தந்நமாமிஸுந்தரோபயந்த்ருநாமமூர்த்திமந்மஹஸ்த மோக்னம்
இந்திராதவார்ஹதல்பூத சேஷ பந்நகாதி பாம்சமத்ய:
சிஷ்யதாம் விடம்பயன் ஸஸூரிஸூக்த்யுபக்ரமார்ஹபத்யமத்ர
ரங்கராட்ஸ்புடிசிகீர்ஷுரஸ்ய வைபவம்புராமுதா ஜகாத 13

(பதவுரை) **அத்ய**- இப்பொழுது, **தத்**- பிரசித்தி பெற்றதாய், **இந்திராதவ**- எம்பெருமானுக்கு, **அர்ஹ**- உகந்த, **தல்பபூத**- படுக்கையான, **சேஷபந்நகாதிபாம்சம்**- ஆதிசேஷனாகியஸர்ப்பத்தின் அம்சமானதும், **தமோக்னம்**- அஜ்ஞானமாகிற இருளைப் போக்க வல்லதும். **ஸுந்தரோபயந்த்ருநாம**- அழகியமணவான மாமுனிவன் என்ற பெயரையுடையதுமான, **மூர்த்திமத்**- வடிவெடுத்த, **மஹ:**- தேஜஸ்ஸை, **நமாமி**- வணங்குகிறேன். **ஸ: ரங்கராட்**- பிரஸித்தி

acharya.org

பெற்ற அந்த ரங்கனாதனும், **அஸ்ய**- இம்மாமுனிகளின், **வைபவம்**- பெருமையை **ஸ்புடீகர்த்தும்**:- வெளியிடவேண்டுமென்று விரும்பியவராய், **சிஷ்யதாம் விடம்பயன்**- அவருக்கு சிஷ்யனாயிருக்கும் தன்மையைப் பின்பற்றி, **ஸூரிஸூக்த்யுப**- **க்ரமார்ஹபத்யம்**- அருளிச் செயல் தொடங்கும்போது அநுஸந்திக்கத்தகுந்த சுலோகத்தை (**ஸ்ரீசைலேசதயா பாத்ரம்.... ரம்யஜாமாதரம் முனிம்** என்ற தனியன் சுலோகத்தை), **அத்ர**- இந்நிலையில், புரா- முன்பு, முதா- மிகுந்த சந்தோஷத்துடன், **ஜகதா**- அருளிச்செய்தார்.

ஆதிசேஷனின் அம்சமாயும், ஞான ஸூர்யனாயும் விளங்காநின்ற மணவாள மாமுனிகளை வணங்குகிறேன். அவர் பெருமையை வெளியுலகுக்கு வெளியிட வெண்ணிய ரங்கனாதன் மாமுனிகளை ஆசார்யனாக வரித்து ஒரு ஸம்வத்ஸரகாலம் தன் உத்ஸவங்களையெல்லாம் நிறுத்தி மாமுனிகளிடம் ஈடுகாலக்ஷேபம் கேட்டு ஆனந்தித்து, சாற்றுமுறையன்று ஒரு சிறிய பாலகனாய் கோஷ்டியின் நடுவிலே எழுந்தருளி, "ஸ்ரீசைலேச தயாபாத்ரம், தீபக்த்யாதி குணார்ணவம் யதீந்த்ரப்ரவணம் வந்தே, ரம்யஜாமாதரம் முனிம்" என்ற பிரசித்தி பெற்ற தனியனை ஒருபட்டோலையில் எழுதி சமர்ப்பித்துவிட்டு மறைந்தான். எல்லா ப்ரபந்தபாராயணங்களும் தொடங்கும் முன்பு இந்தத் தனியன் அநுஸந்திக்கப்படவேண்டுமென்று நியமனமும் செய்ததாக சான்றோர்களால் நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ளது என்னே மாமுனிகளின் பெருமை!

ஹஸ்த நக்ஷத்திரம் "**மஹஸ்தமோக்னம்**" என்ற சொற்றொடரில் ஸூசிப்பிக்கப்பட்டுள்ளது. பாதந்தோறும் 20 அக்ஷரங்கள் கொண்ட **விருத்தம்** என்னும் விருத்தம் இங்கு கையாளப்பட்டுள்ளது.

தத்யுர்நிச்ரேயஸம்நோவரவரயமிராட்ஸத்கடாக்ஷா தயார்த்ரா:
சித்ராயேஷாம்ப்ரபாவாஜகதிஸுபஹுச பூர்வகைர்நஸ்ஸுத்ருஷ்டா:
க்ருத்வாக: கிஞ்சிதஸ்மின் த்விஜகுலதிலக: கோऽபிபச்சாத்ததீயம்
த்ருஷ்ட்வாபோகீந்த்ரபாவம்சகிதமதிரபூதித்யுபாக்யாந்தி வ்ருத்தா: ॥ 14

பாடபேதம் - பின்பாதி

அத்வச்ராந்தஸ்ய தஸ்ய ச்ரமஹரண வசாத்திந் ரிணீ வ்ருக்ஷ ஏக:
ஸப்ருஷ்டஸ்தத்பாணினாத்ராகமுசதகமதாமித்யுபாக்யாந்தி வ்ருத்தா:

(பதவுரை) **யேஷாம்**- எவற்றினுடைய, **ப்ரபாவா**:- பெருமைகள், **ஜகதி**- உலகில், **ஸுபஹுச**:- பலபடியாக, **பூர்வகை**:- முன்னோர்களால், **ஸுத்ருஷ்டா**:- நன்கு எடுத்துக் காட்டப்பட்டனவோ, **சித்ரா**:- வியக்கத்தக்கவையும், **தயார்த்ரா**:- கருணை பொங்கியவையுமான, வரவரயமிராட்- மணவாள யோகிவர்யரின், **ஸத்கடாக்ஷா**:- திவ்ய கடாக்ஷங்கள், **ந**:- நமக்கு, **நிச்ரேயஸம்**- மோக்ஷத்தையும், **தத்யு**:- கொடுக்கக்கடவன **அஸ்மின்**- இவரிடத்தில், க: அபி- ஒரு **த்விஜகுலதிலக**:- (உத்தமநம்பி) என்ற பிராம்மணோத்தமர், **கிஞ்சித்**- சிறிய, **அக**:- பாபத்தை (அபசாரத்தை), **க்ருத்வா**- செய்துவிட்டு, **பச்சாத்**- பிறகு, **ததீயம்**- அவருடைய, **போகீந்த்ரபாவம்**- ஆதிசேஷனாயிருக்கும் தன்மையை, **த்ருஷ்ட்வா**- பார்த்து (அறிந்து), **சகிதமதி**:- பயந்த உள்ளத்தையுடையவராய், **அபூத்**- ஆனார் (ந: ஸுத்ருஷ்டா: என்பதற்குப் பதிலாக **த்ருஷ்டபூர்வா**: என்ற பாடபேதம் காணப்படுகிறது. அதற்கு 'முன்பு காணப்பட்டனவோ' என்று பொருள். 4வது பாதத்தில் "**சகிதமதி**:" என்பதற்குப்பதிலாக "**ப்ரவணமதி**" என்ற பாடபேதம் காண்கிறது, 'பக்திநிரம்பிய உள்ளத்தையுடையவராய்' என்ற பொருள்.)

acharya.org

இங்கு ஒரு ஐதிஹ்யம் பேசப்படுகிறது. ஒரு சமயம் மணவாள மாமுனிகள் ஏகாந்தமாக ரங்கநாதனைப் பக்தி பரவசராய் ஸேவித்துக் கொண்டிருக்கையில், உத்தமநம்பி என்னும் அரங்கனின் அந்தரங்ககைங்கர்யபரர் அவருடைய பால்போல் வெளுத்த திருமேனியைக் கண்டு துணுக்குற்று, ஸ்வாமி வ்யாதிக்ரஸ்தரென்றெண்ணி அவரை சீக்கிரம் ஸந்நிதியை விட்டு வெளியேறுமாறு உத்திரவிட, மாமுனிகளும் ஸாத்விகாக்ரேஸரரானபடியால், சித்தவிகாரமேது மின்றி உடனே மடத்திற்கெழுந்தருளிவிட்டார். அன்றிரவு அழகிய மணவாளப்பெருமாள் உத்தமநம்பியின் ஸ்வப்னத்தில் தோன்றி "மாமுனிகள் ஸாக்ஷாத் ஆதிசேஷனின் அவதாரம், அவரிடம் அபசாரப் பட்டுவிட்டாயே, உடனே அபராதக்ஷாமணம் செய்துகொள்" என்று ஆஜ்ஞாபிக்க, மறுநாள் காலையில் உத்தமநம்பி, ஆப்தர்கள் பலருடன் மாமுனிகளின் மடத்துக்குச் சென்று, அவர் முன் தெண்டனிட்டு முதல் நாள் தாம் செய்த அபசாரத்திற்கு க்ஷமை வேண்டினார்.

பாடாந்தர உத்தரார்த்தம்

அத்வச்ராந்தஸ்ய- வழிநடையாலேற்பட்ட களைப்பையுடைய. **தஸ்ய**- அவர், **ச்ரமஹரணவசாத்**- களைப்பைப் போக்கிக் கொண்ட வகையில், **ஏக:**- ஒரு **திந்த்ரிணீவ்ருக்ஷ:**- புளியமரம், **தத்பாணினா**- அவருடைய திருக்கையால், **ஸ்ப்ருஷ்ட:**- தொடப்பட்ட வளவில், **அகமதாம்**- மரமாயிருக்கும் **தன்மையை** **த்ராக்**- உடனே, **அமுசத்**- விட்டுவிட்டது, (மோக்ஷத்தையடைந்தது), **இதி**- என்று, **வ்ருத்தா:**- பெரியோர்கள், **உபாக்யாந்தி**- ஐதிஹ்யமாகக் கூறுகின்றனர்.

மற்றொரு ஐதிஹ்யம் இங்கு கூறப்படுகிறது. வேறொரு சமயம் மாமுனிகள் திருவணையாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி சிஷ்யவர்க்கங்களுடன் எழுந்தருளுகையில், நல்ல வெயிலில் ஒரு வறண்ட காட்டையடைய, அங்கு களைப்பு மேலிட்ட அனைவரும் நிழலைத் தேடியலைந்து ஒரு மூலையில் பெரிய புளியமரம் ஒன்றைக் கண்டு, அதனடியில் நன்கு இளைப்பாறி, பிறகு மீண்டும் மாமுனிகள் யாத்திரையைத் தொடர விரும்புகையில், பல சிஷ்யர்கள் அவரை நோக்கி, "ஸ்வாமின்! நம்மனைவர்க்கும் இவ்வளவு நேரம் அருமையான நிழலைக் கொடுத்து உபகரித்த இம்மரத்திற்கு ப்ரத்யுபகாரமாக தேவரீர் ஏதேனும் செய்யலாகாதோ?" என்று கூற, உடனே மாமுனிகள் தம் திருக்கையால் அப்புளிய மரத்தைத் தடவிக் கொடுக்க, எல்லோர் முன்னிலையிலும் அம்மரம் பட்டுப்போய்க் கீழே சாய்ந்தது, தன் மரத்தன்மையை விட்டொழித்து மோக்ஷமடைந்தது.

இத்துதிநூலுக்கு நடுநாயகமாய் விளங்கும் இச்சுலோகத்தின் நடுநக்ஷத்திரமான சித்ரா நக்ஷத்திரம் ஸூசிக்கப்பட்டுள்ளது. மாமுனிகளின் திருக்கல்யாண குணங்களை அவர் வரலாற்றில் சில சிறந்த நிகழ்ச்சிகளின் மூலம் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இம்மாதிரி நூற்களில் நடு ச்லோகத்தில் சிலர் சப்தாலங்காரங்களான ப்ராஸம், யமகம், சித்ரம் முதலியவற்றைக் கையாளுவது வழக்கம். அதற்கெல்லாம் மேலாக இதில் நூலின் முக்கிய பாத்திரமாகிய மாமுனிகளின் குணாதிசியம் பரக்கப் பேசப்பட்டுள்ளது சாலச் சிறந்தது. பாதந்தோறும் 21 அக்ஷரங்களைக் கொண்ட **ஸ்ரக்தரா** என்னும் பெரிய விருத்தம் இங்கு கையாளப்பட்டுள்ளது.

இனிவரும் சுலோகங்களில் பாதந்தோறும் ஒவ்வொரு அக்ஷரமாகக் குறைந்து விருத்தங்கள் முறையே சிறியவையாகவமையும்.

acharya.org

தாரயன்கராம்புஜே த்ரிதண்டமம்ஸ சோபிதோபவீதஏஷ
பாஸயன்கஷாயரக்த திவ்ய வஸ்த்ரரோசிஷா ஹரின்முகானி!
ஸ்வாதிஹ்ருத்யஸூக்திபி: ப்ரஹர்ஷயந்ஸுஹ்ருத்கணாம்சச ஸம்ஸதீஹ
வர்த்ததாம்ஸதைவ ஸுந்தரோபயந்த்ருயோகிபூபதி: ஸுகே!! 15

(பதவுரை) அம்ஸசோபித- தோள்பட்டையில் விளங்காநின்ற உபவீத- பூணூலையுடைய, ஏஷ:- இந்த, ஸுந்தரோ யந்த்ருயோபிபூபதி:- அழகியமணவாள யோகிஸார்வ பௌமர், கராம்புஜே- தாமரை போன்றகையில், த்ரிதண்டம்- முக்கோலை, தாரயன்- தரித்துக் கொண்டு (ஏந்திக் கொண்டு) கஷாயரக்ததிவ்யவஸ்த்ரரோசிஷா- மிகச்சிறந்த காஷாயவஸ்திரத்தின் காந்தியால், ஹரின்முகானி- திக்கு கோடிகளை, பாஸயன்- பிரகாசிப்பித்துக் கொண்டும், ஸ்வாதிஹ்ருத்ய, ஸூஸக்திபி:- தம்முடைய மதுரமான ஸ்ரீஸூக்திகளால் ஸம்ஸதி திருவோலக்கத்தில், ஸுஹ்ருத்கணான்- ஆப்தர்களை, ப்ரஹர்ஷயன்ச- மகிழ்வித்துக் கொண்டும், இஹ- இவ்வுலகில், ஸதாஏவ- எப்பொழும், ஸுகேனவர்த்ததாம்- வாழட்டும்.

அழகிய திருமேனியையுடையவரும், சுந்தரத்திருத்தோளின் மீது உலாவும் முப்புரி நூலையுடையவருமான மாமுனிகள், கையிலேந்தியமுக்கோலுடனும், திருவரையில் தரித்துக் கொண்டிருக்கும் கண்ணைக் கவரும் காஷாய வஸ்திரத்துடனும், சேவிப்பவர்களின் நேத்ரங்களுக்குத் தம்மதுரமான ஸ்ரீஸூக்திகளினால் கேட்பாரின் காதுக்களுக்கும் அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டு பல்லாண்டு காலம் வாழ்வாராக! மங்களாசாஸனமாயமைந்தது இந்தச்சுலோகம்.

நக்ஷத்ரம் ஸ்வாதி, வ்ருத்தம் என்னும் விருத்தம்.

நத்வம் ஹ்யம் பகதர்த்திதா நகவிபிர்வாக்தேவிசாகாம்ருகீ
ஹஸ்தப்ராபித மல்லிகாஸ்ரகிவஹாநிந்த்யான் ஸ்துவத்பிர் நரான் !
தத்தேது க்கமபாகரோம்யஹமிஹ ஸ்துத்யம் ஸ்துவன்மத்குரும்
திவ்யநந்தகுணாகரம் வரவரம் ஸூரிம் ஸுதுர்வாகபி !! 16

(பதவுரை) அம்பவாக் தேவி- அம்மா ஸரஸ்வதிதேவியே த்வம்- நீ, நிந்த்யான்- நிந்திக்கத் தகுந்த, நரான்- மனிதர்களை, ஸ்துவத்பி:- துதிக்கின்ற, கவிபி:- கவிகளால், சாகாம்ருகீ:- குரங்கினுடைய, ஹஸ்தப்ராபித- கையிலகப்பட்ட, மல்லிகாஸ்ரக்இவ- மல்லிகைமாலை போல், நகதர்த்திதாந- பாழ்படுத்தப்படவில்லை என்பதில்லை (பாழாக்கவேபட்டாய்). ஹி- நிச்சயம் ஹா- அந்தோ; தே- உன்னுடைய தத்- அந்த, துக்கம்- வ்ருதத்தை, அஹம்- நான், ஸுதுர்வாக் அபி- புல்லிய வாக்கையுடையவனாயினும் இஹ- இப்போது ஸ்துத்யம்- துதிக்கத்தகுந்தவரும், திவ்யானந்தகுணாகரம்- ஏராளமான கல்யாண குணங்களுக்கு உறைவிடமான வரும், மத்குரும் என் ஆசாரியருமான வரவரம் ஸூரிம்- அழகிய மணவாள மாமுனி என்ற ஆசார்ய ஸார்வபௌமரை ஸ்துவன்- துதியா நின்று கொண்டு அபாகரோமி- போக்கடிக்கிறேன்.

போற்றத்தகாதவர்களை மனதாரப் பாராட்டும் க்ஷுத்ரகவிகளை நிந்திக்கிறார், அவர்களால் போற்றப்படுவதே வாக்தேவியான சரஸ்வதிக்கு இழுக்கு- அக்கவிகளிடம் அகப்பட்ட கவிதாசக்தியானது குரங்கின்கையிலகப்பட்ட பூமாலைபோல் சின்னாபின்னமாக்கப்படுகிறது என்கிறார். அங்ஙனன்றிக்கே நீசனாயும் நிறைவொன்று மில்லாதவனாயும் உள்ளவடியேன் புல்லி யவாக்கையுடையவனாயினும், தேவரீரின் பெருமையை எடுத்துரைத்து அதன் மூலம்

acharya.org

விஷயவைலக்ஷண்யம் பொருந்திய இந்நூலையியற்றி கவிதாசக்தியின் பெருமையை மீட்டு வாக்தேவியான சரஸ்வதிக்கேற்பட்ட துக்கத்தை ஓரளவு போக்குகிறேன். விசாக நக்ஷத்ரம் இங்கு ஸூசிதம். சார்தூலவிக்ரீடிதம் என்னும் விருத்தம், 19 அக்ஷரங்களையுடையது.

பிபநயனயுகேஹரம்யோபயந்துர்வபு: ஸௌஷ்டவம்
ச்ரவணயுக ஸதைவதத்ஸூக்திபீயுஷமாஸேவ்யதாம் !
ஸததமபி ஸுஜானுராதாயதாம் ஹேசிரோங்க்ரித்வயீ
வரவரயிதுரேதிமாம் யத்புரா கண்டரோதீகப: !! 17

(பதவுரை) **நயனயுக**- இருகண்களே! **இஹ**- இங்கே (இப்பொழுதே), **ரம்யோபயந்து**:- மணவாளமாமுனியின். **வபுஸௌஷ்டவம்**- திருமேனியினழகை, **பிப**- பருகுவீர்களாக. **ச்ரவணயுக**- இருகாதுகளே! **ஸதாஏவ**- எப்பொழுமே. **தத்ஸூக்திபீயூஷம்**- அவருடைய ஸ்ரீஸூக்த்யம்ருதம். **ஆஸேவ்யதாம்**- கேட்டனுபவிக்கப்படட்டும். **ஹேசிர:**- தலையே **வரவரயிது**- மாமுனிகளின், **ஸுஜானு**:- அழகிய முழங்கால்களைத் தாங்கி கொண்டிருக்கிற. **பதத்வயீ**- இருதிவடிகளும், **ஸததமபி**- எக்காலத்திலும், **ஆதார்யதாம்**- (சென்னிக்கணியாய்) சூடிக்கொள்ளப்படட்டும், **யத்**- ஏனெனில், **கண்டரோதீகப**- நெஞ்சையடைக்கும் கபமானது. **மாம**- என்னிடம் **புராஏதி**- வந்துவிடும் (நான் இறந்துவிடுவேன்)

மாமுனிகளின் வடிவழகையும், அங்கங்களின் செம்மையையும், அவருடைய ஸ்ரீ ஸூக்திகளின் சீர்மையையும் சிறப்பித்துக் கூறுகிறார். தம் கண்களை விளித்து மாமுனிகளின் சௌந்தர்யத்தையனுபவிக்கும்படியும். காதுகளை விளித்து அவருடைய ஸ்ரீஸூக்த்யம்ருதத்தைப் பருகும்படியும். தலையைப் பார்த்து அவருடைய திருவடிகளை தரித்துக் கொள்ளும்படியும், தனக்கு மரணம் எளிதில் ஏற்பட்டுவிடுமாகையால் அதுவரை இவற்றைச் செய்துகொண்டிருக்கும் படியும் தம் உறுப்புகளை ஏவுகிறார். ஸுஜானுராதார்யதாம் என்ற சொற்றொடரிலுள்ள அனுராதா என்னும் பதம் அனுஷநக்ஷத்திரத்தை ஸூசிப்பிக்கிறது.

நிசா என்கிற நாராச விருத்தம் இங்கு கையாளப்பட்டுள்ளது.

பணமணிகணப்ரபாபடலபாடிதாசேஷதிக்-
ப்ரஸ்ருத்வரதமச்சய: ப்ரதித் ஏஷசேஷ புரா !
பலிஷ்டக்லி காடவத்ருடன பாடவஜ்யேஷ்ட்யா
ச்ரியாத்ய புவிராஜதே நயனயுக்மமேதம்பிப !! 18

(பதவுரை) **பணாமணிகண**- படங்களிலுள்ள ரத்னஸமூஹங்களின் **ப்ரபாடல**- ஒளித்திரள்களால், **பாடித**- போக்கடிக்கப்பட்ட, **அசேஷ**- முழுதுமான, **திக்ப்ரஸ்ருத்வர**- திக்குகளில் பரவியுள்ள. **தமச்சய:** இருளின் குவியல்களை (அஜ்ஞானராசிகளை) யுடையவரான **ஏஷ**:- இவர் (மாமுனிகள்) **புரா**- முன்பு. **சேஷ:**- ஆதிசேஷனென்று. **ப்ரதித**:- பிரசித்தமானவர். **அத்ய**- இப்பொழுது **பலிஷ்ட**- கடுமையான. **கலிகாடவ**- கலியின் கொடுமையை. **த்ருடன**- தொலைப்பதில் **பாடவ**- திறமையுடைமையால். **ஜ்யேஷ்டயா**- சிறந்த. **ச்ரியா**- சோபையுடன் - இங்கு **தியா** என்ற பாடபேதம் உள்ளது. அதற்கு. 'மதி நுட்பத்துடன்' என்று பொருள்- **புவி**- பூமியில், **ராஜதே**- விளங்குகிறார் **மே**- என்னுடைய. **நயனயுக**- கண்களே! **தம்**- அவரை, **பிப**- பருகுங்கள் (அவர் அழகை அனுபவியுங்கள்).

acharya.org

தன் படங்களிலுள்ள ரத்னங்களின் கிரணங்களால் எல்லா திக்குகளிலும் பரவியுள்ள இருட்டைப் போக்க வல்ல திறமையுடைய ஆதிசேஷனாயிருந்தவர் மாமுனிகள். இவரும் தன் திருமேனியின் காந்தியாலும், ஜ்ஞானத்தாலும் எல்லா மக்களின் அறியாமையாகிற இருளைப் போக்க வல்லவர். மேலும் கலியின் கொடுமையையும் போக்க வல்லவர் திவ்யதேஜஸ்ஸுடன் மாமுனிகளாக அவதரித்து இவ்வுலகில் திகழ்கிறார். கண்களே! அவருடைய அழகைப் பருகுங்கள்.

ஜ்யேஷ்டா என்னும் கேட்டை நக்ஷத்திரம் ஸூசிதம் ப்ருத்வீ விருத்தம்.

பஹிஸ்ஸதாபிநீயதே ஸுஸச்சரித்ரவந்மயா
நிரந்தரம் மதந்தரங்க மீஹதே ஹ்யஸத்பதம் !
ஸுஸுந்தரோபயந்த்ருயோகிவர்ய தே பதத்வயே
நிபத்த மூல மஸ்து தத்தயாநிதே சசிப்ரப !! 19

(ப-ரை) **ஸுஸுந்தரேபயந்த்ருயோகிவர்ய**- மஹாயோகியான அழகிய மணவாள மாமுனிகளே! மயா- என்னால், பஹி- வெளியில், **ஸுஸச்சரித்ரவத்**- நல்லொழுக்கம் உடையவனைப் போல், **அபிநீயதே**- அபிநயிக்கப்படுகிறது (வேஷம் போடப்படுகிறது). **மதந்தரங்கம்ஹி**- என் மனதோவென்றால், **நிரந்தரம்**- எப்பொழுதும், **அஸத்பதம்**- கெட்ட வழியையே, ஈஹதே- விரும்புகிறது **தத்**- ஆகையால் **தயாநிதே**- கருணைக்கடலே! **சசிப்ரப** சந்திரனைப் போன்ற சோபையையுடையவரே! **தே**- உம்முடைய, **பதத்வயே**- திருவடிகளிலே (என்மனது) **நிபத்தமூலம்**- உறுதியான ஈடுபாடுடையதாக **அஸ்து**- இருக்கட்டும்.

அடியேன் நல்லொழுக்கம் நிரம்பியவன் போல் வெளியில் உலகத்தோர் முன்னிலையில் கபடமாக நடந்து கொண்டு உண்மையில் தீய வழிகளிலேயே மனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறேன். கெட்ட காரியங்களையே செய்து வருகிறேன். கருணையங்கடலான தேவரீர் க்ருபை செய்து அடியேன் மனதை தேவரீரின் திருவடித் தாமரைகளில் உறுதியான ஈடுபாடுடையதாகச் செய்தருளி அடியேனை ஆட்கொண்டருள வேணும் என்கை. நைச்யாநுஸந்தானம் இங்குக் குறிக் கொள்ளத்தக்கது. திருமூல நக்ஷத்ரம் இங்கு ஸூசிதம். பாதத்திற்கு 16 அக்ஷரங்கள் கொண்ட பஞ்சசாமரா விருத்தம் இச்சுலோக விருத்தமாகும்.

பக்திச்ரத்தாபூர்வா ஷாடாக்ஷஸ்ரக்சீராதீன்த்த்ருத்வா
சீர்ணை: பர்ணைர் வந்யையரன்யை: காயக்லேசம் க்ருத்வேஹ !
யோகேநிஷ்டா நோதேசஸ் தாமோக்ஷாபேக்ஷா ஸ்யாச்சேத்த்ரா
ஸௌம்யோத்வோடு பாதத்வந்த்வம்சித்தேகுர்யா ஸ்ஸப்ரேம !! 20

(ப-ரை) **பக்திச்ரத்தாபூர்வா**- பக்தி, சிரத்தை இவற்றுடன் கூடிய, **யோகேநிஷ்டா** நல்ல பக்தியோக நிஷ்டை (சலனமில்லாமல் இடையறாத பக்தி பண்ணும் திறன்), **தே**- உனக்கு, **நசஸ்தா** சிறந்ததல்ல, **ஆஷாட**- பலாசதண்டம், **அக்ஷஸ்ரக்**- ஜபமாலை, **சீராதீன்**- மரவுரி முதலியவற்றை, **த்ருத்வா**- தரித்துக் கொண்டும், **சீர்ணை:**- உதிர்ந்து கிடக்கிற, **வந்யை:**- காட்டிலுள்ள, **பர்ணை:**- இலைகளாலும், **அன்யை:**- மற்றும் (காட்டிலுள்ள சிலவற்றாலும்), **காயக்லேசம் க்ருத்வா**- (இவற்றை உண்பதால்) உடம்பைக் கஷ்டப்படுத்திக் கொண்டும் (அதனாலேற்படும்) **யோக நிஷ்டா**- கர்ம யோக நிஷ்டையும், **தே**- உனக்கு, **நசஷ்தா**- சிறந்ததல்ல **இஹ**- இப்போது (உனக்கு), **மோக்ஷாபேக்ஷா ஸ்யாத்சேத்**- மோக்ஷத்தில் ஆசை இருக்கும் பக்ஷத்தில் **த்ராக்**- சீக்கிரமாக, **ஸௌம்யோத்வோடு:**- மணவாள மாமுனியின், **பாதத்வந்த்வம்**- இருதிருவடிகளையும், **ஸப்ரேம** சிறந்த பக்தியுடன், **சித்தேகுர்யா:**- மனத்தில் கொள்வாயாக (அவற்றில் சிறந்த பக்தியுடன் இருப்பாயாக!)

acharya.org

முமுக்ஷுவான ஒவ்வொரு மனிதனையும் விளித்து அவனுக்கு உபதேசம் செய்யும் முகத்தால் இச்சுலோகத்தை அருளிச் செய்கிறார். ஹே முமுக்ஷுவே! கடினமான பக்தியோகம் பண்ணும் ஆற்றல் உனக்கு வேண்டாம். சாஸ்திரத்தில் கூறிய கர்மானுஷ்டானங்களை மேற்கொண்டு அதன் வாயிலாக மோக்ஷமடையும் திறனும் உனக்கு வேண்டாம். இவையிரண்டையும் கூறியபடியால் உபலக்ஷணமாக ஞானயோகத்தையும் கூறியதாக வைத்துக் கொள்ள வேண்டும். ஞானயோக நிஷ்டையும் உனக்கு அப்பாற்பட்டது. ஆகவே ஆசார்ய நிஷ்டையின் மூலமாக ஏற்படுகிற ஆசார்யாபிமானமே உனக்கு உத்தாரகம். அதுவே உன்னை மோக்ஷத்தையடைவிக்கும். ஆகையால் ஆசார்ய ஸார்வபௌமரான மாமுனிகளின் திருவடிகளையே தஞ்சமாகப் பற்றி அதனாலேற்படும் ஆசார்யாபிமானமே உன்னை நற்கதியையுடையச் செய்யும். கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் இவற்றை விட்டு விட்டு ஆசார்யாபிமானத்தையடைந்து மோக்ஷஸாம்ராஜ்யத்தைக் கைப்பற்று வாயாக! என்று அருளிச் செய்கிறார்.

பூராடநக்ஷத்திரம் பூர்வாஷாடா என்னும் பதத்தால் ஸூசிதம் பாதந்தோறும் 15 அக்ஷரங்கள் கொண்ட லீலாகேலம் என்னும் விருத்தத்தாலாகியது இச்சுலோகம்.

மந்யே ஸ்ரீமத்ஸௌம்ய வரமுநே: ஸூக்தே ஸாம்யம்
நாந்யா பாஷா நௌகத இதி லோகேஸ்மிந்ஸத்யம்!
தன்யாஸ்தே யேதந்முகநளினஸ்யந்தி க்ஷௌத்ரம்
நான்யாத்ருசம்த்ருப்தி முபயயு: பாயம் பாயம் !! 21

(பதவுரை) **ஸ்ரீமத்**- பெருமை தங்கிய, **ஸௌம்யவரமுநே:**- மணவாளமாமுனியின், **ஸூக்தே:** ஸ்ரீஸூக்திகளும் **ஸாம்யம்**- ஒப்பாயிருக்கும் தன்மையை **அந்யா** பாஷா:- வேறு எந்த வாங்மயமும் (மற்ற எவருடைய ஸ்ரீஸூக்திகளும்), **நடௌகதே:**- அடையவில்லை. **இதி**- என்பது **அஸ்மிந்லோகே**- இவ்வுலகில், **ஸத்யம்**- உண்மையானது, **யே**- எவர்கள் (சிஷ்யர்கள்) **தந்முகநளினஸ்யந்தி**- அவருடைய திருமுகமாகிற தாமரையிலிருந்து பெருகும். **அன்யாத்ருசம்**- ஈடுஇணையற்ற **க்ஷௌத்ரம்**- தேனை (அமுதத்தை என்றபடி), **பாயம் பாயம்**- பருகிப்பருகி. **த்ருப்திம்**- திருப்தியை. **ந உபயயு:** அடையவில்லையோ. **தே**- அவர்கள், **தன்யா:**- பாக்யசாலிகள் (இவ்வாறு) **மந்யே**- நினைக்கிறேன்.

மாமுனிகளின் விசதவாச்சிகாமணித்வம் இங்கு போற்றப்படுகிறது. இவ்வாசிரியரின் ஸ்ரீஸூக்திகள் இணையற்றவை. வேறு எவருடைய நூற்களும் அவற்றிற் கீடாகா என்று உலகில் வழங்கிவரும் கருத்து முற்றிலும் உண்மையானது. அவர் விட்டுப்போன ஸ்ரீஸூக்திகள் இங்ஙனமிருக்குமாயின், அவர் நேரேசாதித்த காலக்ஷேப ஸ்ரீஸூக்திகள் எப்படி இருந்திருக்கும்? அவற்றைக் கேட்டனுபவித்த சிஷ்யவர்க்கங்களின் அனுபவம் எத்தகையனவாய் இருந்திருக்கும் என்று ஆச்சரியப்படுகிறார். இங்கு ஒரு விஷயம் கவனிக்கப்படவேண்டும்.

மாமுனிகளியற்றிய ஸம்ஸ்கிருத சுலோகங்களும் தமிழ்ப்பாசுரங்களும் ஒருபுறமிக்க. அவருடைய மணிப்ரவாள நடை பரம விலக்ஷணமானது. உபய வேதாந்த ஸம்ப்ரதாயம் என்று யாவராலும் போற்றப்படும் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸம்ஸ்க்ருத நூல்களிலிருந்தும் தமிழ்ப் பிரபந்தங்களிலிருந்தும் பிரமாணங்களை எளிதாகவும், வெகுவாகவும் எடுத்துரைக்க வசதியாக இவ்விருமொழிகளிலிருந்து பதங்களை ஆங்காங்கே உபயோகித்து, மணிப்பிரவாளம் என்னும் ஒரு அபூர்வமான அழகிய நடையை நம்பூர்வாசாரியர்கள் கண்டுபிடித்தனர். மணி என்றால்

acharya.org

இரத்தினம், ப்ரவாளம் என்றால் பவழம். இவற்றோடு முத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆகவே இரத்தினம், முத்து, பவழம் இவற்றால் கோர்க்கப்பட்ட ஒரு மாலை எவ்வளவு அழகாக விளங்குமோ அப்படி விளங்குகிறது இந்த மணிப்ரவாளநடை என்று இதன் பொருள். ஸம்ஸ்கிருதமும், தமிழும் அழகாகச் சேர்க்கப்பட்டு அரிய விஷயங்களையும் அருமையாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கும் நடையாக இந்த மணிப்ரவாளம் அமைந்தது. எம்பெருமானாரின் சிஷ்யரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிய ஆறாயிரப்படி என்னும் திருவாய் மொழியின் முதல் வ்யாக்யானம் முதன் முதலில் எழுதப்பட்ட மணிப்ரவாளநூல், இவ்வாசிரியருக்குப் பிறகு பலபூர்வாசாரியர்கள் இம் மணிப்ரவாள நடையில் வ்யாக்யானங்கள், ஸூத்ரங்கள், சூர்ணிகைகள், ப்ரகரணங்கள் ஆகிய பலவிதமான நூல்களை இயற்றியுள்ளனர். ஒவ்வொரு ஆசாரியரின் மணிப்ரவாள சைலியிலும் ஒவ்வொரு வகைச் சிறப்பு காணப்படுகிறது. ஆயினும் மணவாளமாமுனிகளின் மணிப்ரவாள நடை அந்யாத்ருசமானது. இச்சொல்லையே இச்சுலோகத்தில் காண்கிறோம், எளிமை, இனிமை, தெளிவு, சுருக்கம், காம்பீர்யம் ஔசித்யம். இருமொழிகளுடையவும் பதங்களின் அஸாதாரணமான சேர்க்கை எல்லாம் ஒருங்கே அமையப்பெற்று விளங்குகிறது. மாமுனிகளின் மணிப்ரவாள வாக்ஜரீ, முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசனபூஷணம், ஆசார்யஹ்ருதயம், பெரியாழ்வார் திருமொழி, இராமானுச நூற்றந்தாதி முதலிய நூல்களின் வ்யாக்யாநங்களில் மாமுனிகளின் ஒப்பற்ற மணிப்ரவாள நடையை நன்கு அனுபவிக்கலாம். குறிப்பாக இராமானுச நூற்றந்தாதியின் வ்யாக்யானம் அத்யத்புதமாக வமைந்துள்ளது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் எழுத்தாளர் தர்மத்தை இந்நூலில் பரக்கக் காணலாம். பலவரிகளின் மூலம் விளக்க வேண்டிய ஒரு அரிய விஷயத்தை ஒரு சரியான ஸம்ஸ்கிருத பதத்தைத் தகுந்த இடத்தில் ஔசித்யம் குன்றாமல் பிரயோகித்து எளிதில் விளக்கும் ஆற்றல் இவ்வாசிரியருக்குக் கை வந்தகலை. ஒரு விஷயத்தை அதிகம் பெருக்காமலும் சுருக்காமலும் உள்ளபடி சரியாகக்கூறும் முறையை அந்யூநாதிரிக்தமாகக் கூறுதல் என்று வடமொழியாளர் கூறுவர். இவ்விலக்கணம் மாமுனிகளிடம் சிறப்பாகக் காணப்படுகிறது. மணிப்ரவாள நடையில் ஒரு பெரிய விஷயத்தை சுருக்கியருளும் ஆற்றல் மாமுனிகளைத் தவிர வேறு யாரிடமும் காண்கின்றிலோம், ஈட்டைப் பெருக்கிக் காலக்ஷேபம் சாதித்த இவ்வாசிரியர் தம் வ்யாக்யானங்களைச் சுருக்கியமைத்துள்ளது. மிகவும் ஸ்வாரஸ்யமானது. ஸம்ஸ்க்ருதவசன நடைக்கு எம்பெருமானாரும், தமிழ்வசன நடைக்கு மணவாளமாமுனிகளும் ஆதாசபுருஷர்கள் என்று சான்றோர்கள்பகர்வர். விசதவாக்சிகாமணி என்ற பட்டம் இவ்வாசாரியர் ஒருவருக்கே பொருந்தும். நம்பெருமாள் நம் மாமுனிகளுக்குத் தனியன் அருளிச் செய்தது இங்கு நினைக்கற்பாலது. என்னே மாமுனிகளின் புலமை!

உத்தரம் என்னும் உத்தராஷாடா நக்ஷத்திரம் இங்கு ஸூசிதம். விருத்தம் பாதந்தோறும் 14 அக்ஷரங்கள் கொண்ட வாஸந்தி.

யந்தாரம் ச்ரவணத்ருகாதிமேந்த்ரியாணாம்
ஹந்தாரம் ச்ரிதஜன துக்க ஸந்ததேஸ்தம் !
மந்தாரம் ஸததமிஹ த்வயஸ்ய வந்தே
கந்தாரம் நிகமயுகாந்தஸிந்து பாரம் !! 22

(பதவுரை) **ச்ரவணத்ருகாதிம் இந்த்ரியாணாம்-** காது, கண் முதலிய விஷயேந்திரியங்களை, **யந்தாரம்-** அடக்கியாள் பவரும், **ச்ரிதஜன-** ஆச்ரிதர்களுடைய,

acharya.org

துக்கஸந்ததே:- இன்னல்கள் யாவையும், **ஹந்தாரம்**- அழித்தொழிப்பவரும், **ஸததம்**- எப்பொழுதும் **இஹ**- இவ்வுலகில், **த்வயஸ்ய மந்தாரம்**- த்வய மந்திரத்தையநுஸந்திப்பவரும் **நிகம யுகாந்த ஸிந்துபாரம்**- உபயவேதாந்தத்தின் கரையை, **கந்தாரம்**- அடைந்தவரும் (உபயவேதாந்தங்களையும் கரை கண்டவரும் ஆன), **தம்**- அம்மாமுனிகளை, **வந்தே**- வணங்குகிறேன்.

மாமுனிகளின் ஞானம், பக்தி, வைராக்யம், சிஷ்யாபிமானம், புலனடக்கம் இவற்றை வருணிக்கிறார். முதல் பாதத்தில் அவர் இந்திரியங்களை யடக்கி ஜிதேந்த்ரியராகத் திகழ்வதைப் பேசுகிறார். இதனால் வைராக்ய குணம் கூறப்பட்டது. இரண்டாம் பாதத்தில் பக்தர்களின் இன்னல்களைப் போக்குவதைக் கூறும் முகத்தால் அவருடைய காருண்யம், சிஷ்யாபிமானம் இவை வருணிக்கப்பட்டன. மூன்றாம் பாதத்தில் கூறப்பட்ட த்வயாநுசந்தானம் மாமுனிகளின் பக்திக்குச் சிறந்த சான்று பூர்வதினசரியில்,

"மந்த்ரரத்னாநுஸந்தான ஸந்ததஸ்புரிதாதரம் !
ததர்த்ததத்வநித்யானஸந்நத்த புளகோத்கமம்"

என்னும் மாமுனிகளின் த்வயாநுஸந்தானமும் அதனால் ஏற்படும் களிப்பை வெளிப்படுத்தும் மயிர்க் கூச்சும் கூறப்பட்டுள்ள சுலோகம் இங்கநுஸந்தேயம்.

நான்காம் பாதத்தில் அவருடைய உபய வேதாந்த ஞானம் எடுத்துரைக்கப்படுகிறது. இவையனைத்தாலும் ஸ்வாமியின் ஆசார்யத்வபூர்த்தி நன்கு விளக்கப்பட்டது.

இச்சுலோகத்தில் நான்கு பாதங்களிலும் பிரயோகிப்பட்டுள்ள முதல் பாதங்களின் மூலம் அநுப்ராஸம் என்னும் சப்தாலங்காரம் (சொல்லணி) கையாளப்பட்டுள்ளது நோக்கற்பாலது.

ச்ரவணம் என்கிற திருவோண நக்ஷத்திரம் இங்கு ஸூசிதம். விருத்தம் பாதத்தோறும் 14 அக்ஷரங்கள் கொண்ட **ப்ரஹர்ஷிணீ** எனப்படும்.

ரமாகாந்த நிஷ்டா: சமர்த்யா தனிஷ்டா:
யமாஜ்ஞாத விஷ்டா: ப்ரமாணே கரிஷ்டா: !
பவேயு: க்ஷிதௌ தே ஹி ரம்யோபயந்து:
பதாம்போஜயுக்மம் ச்ரிதாயே நரோலம் !! 23

(பதவுரை) **யே**- எந்த, நர:- மனிதர்கள், **ரம்யோபயந்து**- மணவாள மாமுனியின், **பதாம் போஜயுக்மம்**- திருவடி தாமரைகளிரண்டையும், **ச்ரிதா:**- ஆச்ரயிக்கிறார்களோ, **தே**- அவர்கள், **க்ஷிதௌ**- பூமண்டலத்தில், **ரமாகாந்தநிஷ்டா:** ச்ரிய: பதியான சர்வேச்வரனிடத்தில், சிறந்த பக்தியையுடையவர்களாகவும், **சமர்த்யா- சமம்** என்னும் அதிகமான அடக்கத்தால், **தனிஷ்டா:**- (குண) தனவந்தர்களாகவும், **யமாஜ்ஞாதவிஷ்டா:**- யமனுடைய ஆணைக்கப்பாற்பட்ட வர்களாகவும் (யமாக்ஞைக்குக் கட்டுப்படாதவர்களாகவும்) **ப்ரமாணே**- சகல சாஸ்திரங்களிலும், **அலம் கரிஷ்டா:**- மிகவும் வல்லவர்களாகவும் (சாஸ்திர நிபுணர்களாகவும்), **பவேயு:**- ஆவார்கள், **ஹி**- நிச்சயம்.

மாமுனிகளின் திருவடியில் ஆச்ரயித்தவர்கள் பகவந் நிஷ்டையையுடையவர்களாகவும், சமம் என்னும் அடக்கத்தையே தனமாக உடையவர்களாகவும், யமனுக்கும் பயப்படவேண்டாத வர்களாகவும், சகல சாஸ்திர பாரங்கதர்களாகவும் ஆவார்கள் என்பது நிச்சயம். இதுவே

acharya.org

இச்சுலோகத்தின் ஆழ்ந்த பொருள். ஆசார்யகடாக்ஷம் ஏற்பட்டால் ஞானம், பக்தி, குணபூர்த்தி இவை ஏற்படுவதுடன் ஸம்ஸார பயமும் தொலையும் என்கை.

தனிஷ்டா என்ற பதத்தால் அவிட்ட நக்ஷத்திரம் ஸூசிதம். பாதந்தோறும் 12 அக்ஷரங்கள் கொண்ட **புஜங்கப்ரயாதம்** சுலோகவிருத்தம். **நா நரௌள நர:** என்னும் **சப்தம் காண்க.**

லம்படம் பவபுஜங்க தம்சனோச்-
சேதகர் மணி தமாச்ரயே குரும் !
கர்த்து ஸமசத பிஷக்வரா: பரே
பூர்வதோ யதுதயாந்ந தத்புவி !! 24

(பதவுரை) **பலபுஜங்க**- ஸம்ஸாரமாகிற பாம்பின், **தம்சன**- கடியை, **உச்சேதகர்மணி**- போக்கும் காரியத்தில் ஸம்ஸாரத்தையொழிப்பதில், **லம்படம்**- திறமைசாலியான **தம்**- அந்த, **குரும்**- மாமுனிகளாகிய குருவை, **ஆச்ரயே**- ஆச்ரயிக்கிறேன், **தத்**- அந்த ஸம்ஸார நிவ்ருத்தியாகிற காரியத்தை, **யதுதயாத்**- எவருடைய அவதாரத்திற்கு **பூர்வதோ**- முன்னால், **கர்த்தும்**- செய்வதற்கு, **பரேபிஷக்வரா:**- மற்ற வைத்ய நிபுணர்கள், **நஜசத**- சக்தர்களாக வில்லையோ!

ஸம்ஸாரத்தை அதாவது உலகத்தில் பிறப்பதை நெருப்பாகவும், கடலாகவும், பாம்பாகவும் ஆசாரியர்கள் கூறுவது வழக்கம். இங்கு அதனைக்கொடிய விஷப்பாம்பாக விளக்குகிறார் இந்நூலாசிரியர். அந்த ஸம்ஸாரமாகிற பாம்புக்கடியை அதாவது ஸம்ஸார பந்தத்தைப் போக்கவல்ல பெரிய வைத்யர் மாமுனிகள் ஒருவரே, அவர் அவதரிப்பதற்கு முன்னால் ஏனைய விஷவைத்யர்கள் அப்பணியைச் செய்யத் திறமையற்றவர்களாயொழிந்தனர். **ஸதாசார்ய** சம்பந்தத்தால் ப்ராப்தி எளிதில் ஏற்படும் என்னும் அர்த்தம் இங்கு விவக்ஷிதம்.

சதய நக்ஷத்திரம் **சதபிஷக்** என்னும் சொற்றொடரால் ஸூசிதம். விருத்தம் பாதந்தோறும் 11 அக்ஷரங்கள் கொண்ட **ரதோத்ததாவாகும்.**

விஸ்மர மாத்வம் ஸௌம்ய வரோக்தீ:
ஆஹித தத்வ ஜ்ஞானவிபாகா: !
சிந்திதபூர்வா பாத்ரபதாப்த்யை
நித்ய மிஹ ஸ்யுர்யா: கலபாசா: !! 25

(ப-ரை) **இஹ**- இவ்வுலகில், **நித்யம்**- எப்பொழுதும், **ஆஹித**- உண்டு பண்ணப்பட்ட (அடைவிக்கப்பட்ட), **தத்வஜ்ஞான விபாகா:**- பரிபக்குவமான தத்வஜ்ஞானத்தை யுடையவைகளும் (சிறந்த தத்வத்ஞானத்தையளிக்க வல்லவையும்), **கலபாசா:**- துர்வாதிகள் (குத்ருஷ்டிகளை முதலியவர்களுக்குக் காலபாசம் போலுள்ளவையுமான (குத்ருஷ்டிகளை நிரஸிப்பவைகளுமான) **யா:**- எந்த மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகள் **சிந்தித பூர்வா**- அநுஸந்திக்கப்பட்ட மாத்திரத்தில், **பாத்ரபதாப்த்யை**- பரமானந்தத்தையடைவதற்கு **ஸ்யு:** (சாதகமாக) ஆகின்றனவோ (அந்த) **ஸௌம்யவரோக்தீ:**- மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளை. **த்வம்**- நீ, **மா விஸ்மர**- மறவாதே (எப்போதும் தியானம் செய்து கொண்டிருப்பாயாக)

இதுவும் முமுக்ஷுவை விளித்துச் செய்யும் உபதேசமாகும். இந்நூலாசிரியர் மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளின் பெருமையை எடுத்துரைக்கிறார். அவை அநுஸந்திக்கப்பட்ட மாத்திர மோக்ஷம்

acharya.org

கிடைக்கும் படியான பரிபாக்குவமான **தத்துவ** ஜ்ஞானத்தையளிக்க வல்லன. குத்ருஷ்டிகளை நிரஸித்து ஸத்ஸம்பரதாயத்தை நிலவச் செய்கின்றன. அவற்றை மறக்காமல் எப்போதும் மனதில் கொண்டிரு.. எல்லாம் மங்களங்களும் ஏற்படுமென்கிறார்.

பூர்வா பாத்ரபதா என்னும் பதங்கள் **பூரட்டாதியை** ஸூசிப்பிக்கின்றன. விருத்தம் பாதமொன்றுக்கு 10 அக்ஷரங்கள் கொண்ட **ருக்மீவதீ** என்பதாகும்

சாங்கர சாக்யத்வைத மதாந்யுத்தர பூதைர் பாத்ரபதை !
யோநி ஜஸூக்தை: கண்டிதவான் ஸௌம்யவரோத்யயேந்ந: கலுஷம் !! 26

(பதவுரை) **ஸௌம்யவர:**- எந்த மாமுனிகள். **சாங்கர சாக்ய த்வைதமதாநி**- அத்வைதம், பௌத்தம், த்வைதம் முதலிய மதங்களை, **உத்தரபூதை:**- (பூர்வ பக்ஷங்களான அம்மத நூல்களுக்கு) சமாதானமானவையும். **பாத்ரபதை:**- மங்களகரமான (மங்களங்களை யளிக்கவல்லவையான). **நிஜஸூக்தை:**- தன் ஸ்ரீஸூக்திகளால் (நூல்களால்), **கண்டி தவான்**- கண்டித்தாரோ (அவர்) **ந:** நம்முடைய, **கலுஷம்**- பாபத்தை, **த்யேத்**= போக்கட்டும்.

பாஹ்ய குத்ருஷ்டி மதங்களைத் தன் நூல்களால் கண்டித்து அவற்றிற்கு சமாதானம் கூறியதுமல்லாமல் தன் மதத்தையும் ஸ்தாபித்த மணவாள மாமுனிகளாகிற ஆசார்ய ஸார்வபௌமர் நம் பாபங்களைப் போக்கட்டும் என்று மங்களாசாஸன பூர்வகமாகப் பிரார்த்திக்கிறார். **உத்தரபூதை: பாத்ரபதை:** என்கிற சொற்களின் மூலம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் ஸூசிப்பிக்கப்படுகிறது. பாதத்திற்கு 9 அக்ஷரங்கள் கொண்ட **மணிமத்யம்** இங்கு சுலோகவிருத்தமாகும்.

ஷட்தர்சன மஹாவ்ருக்ஷஷண்டகண்டனபண்டித: !
த்வம் ஸூக்திக்ரக சைரேவ தீவ்ரகோடிபிரீட்யஸே: !! 27

(ப-ரை) **தீவ்ரகோடிபி:**- சமாதானம் சொல்ல முடியாதபடி பலமான ப்ரமாணவாதங்களையுடைய (கூரானநுனிகளையுடைய) **ஸூக்திக்ரகை:**- ஸ்ரீஸூக்திகளாகிற ரம்பங்களாலேயே (பரபக்ஷங்களை வெட்டித்தள்ளும் இயல்பையுடைய ஸ்ரீஸூக்திகள் போன்ற ரம்பங்களாலேயே). **ஷட்தர்சன மஹாவ்ருக்ஷ ஷண்டகண்டனபண்டித:**- ஷட்தர்சனங்கள் என்று பிரபலமான ஆறுநாஸ்திக மதங்களாகிய பெரியகாட்டை அழிக்கும் திறமையையுடைய மகாபண்டிதரான, **த்வம்**- தேவரீர், **ஈட்யஸே**- யாவராலும் வணங்கப்படா நின்றீர்.

இந்த ச்லோகம் ச்லேஷபங்கியில் அமைந்துள்ளது. பண்டிதப்ரகாண்டரான மாமுனிகளை ஒரு பெரிய காட்டை அழித்து நகரமாக்கவல்லசமர்த்தனுடன் ஒப்பிடுகிறார். காடுவெட்டிக்கு கோடாலி, ரம்பம் முதலிய ஆயுதங்கள் இன்றியமையாதவை. அவை கூரான நுனிகளையுடையவையாய் இருக்க வேண்டும். அப்போதுதான் காடுகளை எளிதில் அழித்தொழிக்க முடியும். அதுபோல் மாமுனிகளுக்கு ஆயுதம் அவருடைய ஸ்ரீஸூக்திகள். அவை எதிரிகள் ப்ரதிவாதம் பண்ண முடியாதபடி அவ்வளவு புத்தி கூர்மையின் விளைவாக அருளிச் செய்யப்பட்டவை. அவற்றைக் கொண்டு அவர். சார்வாகம். பௌத்தம், ஜைனம், வைசேஷிகம், ஸாங்க்யம், யோகம் ஆகிய ஆறுநாஸ்திக மதக்காடுகளை வாதம் செய்து அழிக்கிறார். ஸ்ரீபாஷ்யகாரரும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில். (சாக்யோலூக்யாக்ஷபாதக்ஷபணகபில பதஞ்ஜலி மதாநிஷட்) என்று மேற்கூறிய ஆறுநாஸ்திக மதங்களையும் குறிப்பிடுகிறார். மாமுனிகள் காடுவெட்டியான தீரனுக்கும், அவருடைய ஸ்ரீஸூக்திகள் ரம்பம். கோடாலி முதலிய ஆயுதங்களுக்கும். ஸ்ரீஸூக்திகளின் நேர்த்திக்குக் காரணமான மாமுனிகளின் புத்தி கூர்மை

acharya.org

அவ்வாயுதங்களின் கூர்மைக்கும், ஷண்மதம் பெரிய காட்டுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளன. அம்மஹாசாரியர் யாவராலும் பக்தியுடன் சேவிக்கப்படுகிறார் என்று இச்சுலோகத்தால் விளக்கப்பட்டுள்ளது காண்க).

"க்ரகஜைசரேவதீவ்ரகோடிபி:" என்ற சொற்றொடரில் ரேவதீ என்னும் கடைசி நக்ஷத்ரம் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. விருத்தம் பாதத்திற்கு 8 அக்ஷரங்கள் கொண்ட அனுஷ்டுப்.

இத்துடன் நக்ஷத்ர மாலிகாஸ்தவத்தின் ஸ்துதிபாகம் முடிவடைந்தது. இந்தச்லோகம் "ஸ" என்னும் எழுத்தில் முடிகிறது. இதற்கு பிறகு 'ஹ' என்னும் எழுத்து ஒன்று உள்ளது. அதில் முடிய மற்றொரு சுலோகம் தேவைப்படுகிறது. இந்த ஸ்தோத்ர நூல் அக்ஷராந்தாதியாகவும், 'க' வர்க்கம் முதல் வரிசைக் கிரமமாகவும் அமைந்திருப்பதால், அந்தாதி மரியாதைக்குச் சேர ஆரம்ப எழுத்தாகிய 'க'வில் நூல்முடிக்க வேண்டும். அதற்கும் மற்றொரு ச்லோகம் அவசியம். ஆகவே இரண்டு ச்லோகங்களை இதற்குப்பின் அருளிச் செய்து முதலாவதால் நைச்யாநுஸந்தானமும், அடுத்ததால் மங்களாசாஸனமும் செய்து நூலைத் தலைக்கட்டுகிறார்.

ஸேயம் நக்ஷத்ரமாலாத்ய க்ரதிதா நிர்குணாபிமே !
பூயஸ்யை ரம்யஜாமாது: ப்ரீதயே பவதாதிஹ !! 28

(பதவுரை) மே- என்னுடைய. ஸா இயம்- மேலே கூறப்பட்ட இந்த நக்ஷத்ரமாலா- நக்ஷத்ரமாலா ஸ்தோத்ரமானது (மாலையின் பக்ஷத்தில் நக்ஷத்திரங்களாலாகிய மாலையானது). அத்ய- இப்பால், க்ரதிதா- இயற்றப்பட்டதாய் (கட்டப்பட்டதாய்), நிர்குணா அபி- அலங்காரம், ரஸம், த்வனி, ஔசித்யம் முதலிய காவ்ய குணங்கள் இல்லாத போதிலும். இஹா- இங்கே, ரம்யஜாமாது:- மணவாள மாமுனிகளுக்கு பூயஸ்யை- அதிகமான, ப்ரீதயே- பிரியத்தின் பொருட்டு, பவதாத்- ஆகக்கடவது.

இது நூலாசிரியரின் அவையடக்கச் சுலோகம். அலங்காரம், ரஸம், த்வனி முதலிய காவ்ய குணங்கள் இல்லாத போதிலும் அடியேனால் பக்திபூர்வகமாக இயற்றப்பட்ட இந்த நக்ஷத்ரமாலா ஸ்தோத்ரமானது மணவாள மாமுனிகளுக்கு மிகுந்த திருப்தியையளிக்கும் என்று நம்பி அதற்காக அவரைப் பிரார்த்திக்கிறார் ஆசிரியர்.

நக்ஷத்ரமாலாஸ்துதிக்கு நக்ஷத்திரங்களாகிய ஒரு மாலையை உபமானம் சொல்லி ச்லேஷபங்கியால் அமைத்து விளக்குகிறார். ஸ்துதியின் பக்ஷத்தில் குணம் என்றால் காவ்யகுணங்களாகிய அலங்காரம், ரஸம், த்வனி, ஔசித்யம், முதலியன. மாலையின் பக்ஷத்தில் குணம் என்றால் நூல் அல்லது நார் என்று பொருள். ஒரு மாலை கட்ட நூல் அல்லது நார் இன்றியமையாதது. ஆனாலும் மாலையாகக் கட்டப்படாத பூக்குவியலுக்கும் ஓரளவு அழகு உண்டு. பகவானின் திருவடிகளிலும் பூக்குவியலைச் சேர்க்கலாம். அர்ச்சனை பண்ணும் உதிரிப்பூக்கள் என்க. அம்மாதிரி அடியேனின் துதிநூலில் நார் ஸ்தானத்திலுள்ள காவ்ய குணங்கள் இல்லாவிடினும் மாமுனிகளிடம் அடியேனுக்குள்ள பக்தியும், அதனடியாக இயற்றப்பட்ட இந்நூலும் எம்பெருமானின் திருவடிகளிலுள்ள உதிரிப்பூக்களை ஒக்கும் என்றும், மாமுனிகளுக்கு இது திருப்திகரமாயிருக்கும் என்றும் கூறுகிறார்.

இச்சுலோகம் பரமவிலக்ஷணமானது. நக்ஷத்திரங்களின் பெயர்கள் முன்சுலோகத்தோடு முடிந்து விட்டபடியால், இதில் அதற்கு ப்ரஸக்தியில்லை. 'க' வர்க்கம் முதல் 'ஹ' ஈறாக அந்தாதி

acharya.org

ஸரணியில் துதியை இயற்றப் புகுந்த இவ்வாசிரியர் இச்சுலோகத்தை 'ஸ'வில் ஆரம்பித்து 'ஹ'வில் முடித்திருக்கிறார். அந்தாதியில் நூலின் ஆரம்பாக்ஷரமாக இருக்க வேண்டுமாதலால் அந்த நியமத்தை அடுத்த சுலோகத்தில் நிறைவேற்றுகிறார்.

ஹரிபக்திஸுதாஜஸ்ரபாநபீனஸ்வமானஸ: !
மங்களம் தனுதாந்நித்யம் ரம்ய ஜாமாத்ரு தேசிக: !! 29

(பதவுரை) **ஹரிபக்தி**- விஷ்ணு பக்தியாகிற, **ஸுதா**- அமுதத்தை, **அஜஸ்ர**- எப்பொழுதும், **பாந**- பருகுவதால், **பீன**- நிரம்பிய, (பருத்த), **ஸ்வமானஸ:**- **தன்னுடைய மனதையுடையவரான**, **ரம்யஜாமாத்ரு தேசிக** - அழகிய மணவாள மாமுனிகளாகிற ஆசாரியர், **நித்யம்**- அநுதினமும், **மங்களம் தனுதாத்**- மங்களத்தைப் பண்ணியருள் வாராக!

இது மங்களாசாஸன ச்லோகம், விஷ்ணு பக்தியாகிற அமுதத்தை சதாகாலமும் பருகி, அதனால் உத்ஸாஹம், ஆனந்தம் இவை நிரம்பிய மனதையுடைய அவ்வாசார்ய ஸார்வபௌமர் எக்காலத்திலும் ஸர்வமங்களங்களையும் குறைவற அனுக்ரஹிப்பாராக! என்று ஆசாஸனம் பண்ணி நூலைத் தலைக்கட்டுகிறார்.

இந்த சுலோகம் 'ஹ' என்னும் எழுத்தில் தொடங்கி நூலின் ஆரம்ப எழுத்தாகிய 'க'வில் முடிந்து அந்தாதி நூல் முறையைச் செவ்வனே பின்பற்றுகிறது.

ஸ்ரீமத்வரவரமுனிநக்ஷத்ரமாலிகா ஸ்தவம் முற்றிற்று

With Best Compliments from

SUPREME FURNITURE


(DIRECT SUPPLY FROM PONDICHERRY FACTORY FOR BULK ORDERS)

COMPANY AUTHORISED DISTRIBUTOR

DURGA MARKETING

No.1, South Street,
(Hanumar Koil Street), Radha Nagar,
Chrompet, Chennai - 600 044.
Ph. 241 5670.

acharya.org



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீ வேங்கடகுரவே நம:

-ஸ்வாமி விஷயமாக ஆசூரி ராமாநுஜாச்சாரியர் ஸ்வாமி

அருளிச் செய்த மங்களங்கள்

1. வாதூல ஸ்ரீசைலாச்சார்ய ப்$_3$ராது: சரணமாச்ரிதம்
   சமாகுண ஸம்பந்தம் வேங்கடார்யாய மங்களம்

2. த்ராவிடாம்ந்யாய ஸ்துதிபி: தேவராஜம் ஸூதோஷிணே
   ஸம்பந்த சிஷ்ய ப்$_3$ருத்தேணவேங்கடார்யாய மங்களம்

3. ஞானானுஷ்டாந பூர்ணாய ரஹஸ்ய த்ரய வேதிநே
   மந்த்ரராஜ ப்ரத$_3$ாதாய வேங்கடார்யாய மங்களம்

4. காஞ்சீபுர்யாம் நிவாஸாய சிஷ்ய ப்$_3$ருத்தே$_3$ந ஸேவிநே
   வாதூல வேங்கடார்யாய நித்யஸ்ரீர் நித்ய மங்களம்

5. ப்ரஸந்ந வதனோ நித்யம் சிஷ்ய ஜந பரிவ்ருதோ
   தேவராஜ ப்ரஸாதேந ஜீயா தாசந்தர தாரகம்

Space Sponsered by

P.S. ANJANEYULU,

CHITTOOR

acharya.org

மாமுனி காட்டும் மாண்புடை நெறி

ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசாரியார் ஸ்வாமி

நாதமுனிகள் முதலாய், எம்பெருமானார் நடுவாய், மணவாளமாமுனிகள் ஈறாயுள்ள மஹான்களைப் பூருவாசாரியார்கள் என்பர். அப்பூருவாசாரியர்களுள், எம்பெருமானார் ஏனைய ஆசாரியர்களிலும் மிகப் பெருமை பெற்றிருப்பவர். காரணம் பின் வருமாறு:

(1) அநாதியாய் விளங்கி வருவதான ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தை எம்பெருமானார் பல படிகளாலும் வளர்த்தருளினார் என்பது பற்றி, ஸ்ரீரங்கநாதன் இந்த ஸித்தாந்தத்திற்கு "எம்பெருமானார் தரிசனம்" என்றே பேரிட்டு ஸ்தாபித்து வைத்தான். இந்த உண்மையை மணவாள மாமுனிகள்,

"எம்பெருமானார் தரிசனமென்றேயிதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார் அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை யெம்பெருமானார் வளர்த்த அந்தச் செயலறிகைகா"

என்று அருளிச் செய்திருக்கிறார். உபதேசரத்தின மாலையில் காண்க.

(2) நாதமுனிகள், நம்மாழ்வார் பரமக்ருபைக்குப் பாத்திரமாயிருப்பவர். "நம்மாழ்வார், எம்பெருமானார் திருவவதாரம் செய்தருளுவதற்கு முன்னமேயே அவ்வெம்பெருமானாரைத் தம் பரம க்ருபையினால் காட்டிக்கொடுக்க, நாதமுனிகள் கண்டு அனுபவித்தவர்" என்பது பிரஸித்தம், இங்கு "யஸ் ஸ்வாபகாலே கருணாகரஸ்ஸந் பவிஷ்யதாசார்யவரஸ் ஸ்வரூபம் | ஸந்தர்சயாமாஸ மஹாநுபாவஸ் தம் காரிஸூநும் சரணம் ப்ரபத்யே ||" என்று ஸ்வப்நத்திலே நாதமுனிகளுக்கு, பவிஷ்யதாசார்யவர ஸ்வரூபத்தை நிர்ஹேதுக காருண்யத்தாலே ஆழ்வார் காட்டிக்கொடுத்தருளினார்—என்னும் சரமோபாய நிர்ணயத்தைக் காண்க.

(3) எம்பெருமானார், ஆளவந்தார் விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்திரராயும் இருப்பவர். "ஆமுதல்வன் இவன்" என்னும் பாசுர வியாக்கியானத்தில் உள்ள "திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார் திருமுன்பின் ஸோபானத்திலே ஆளவந்தார் எழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக எழுந்தருளி நிற்கிறவரைக் கண்டு, 'ஆமுதல்வன் இவன்' என்று அருளிச் செய்தாராம்" என்னும் ஈடு இங்கு அனுபவிக்கத்தக்கதாம்.

(4) தேசிகன், 'பத்யு:ஸம்யமிநாம் ப்ரணம்ய சரணௌ தத்பாத கோடீரயோஸ்ஸம்பந்தேந ஸமித்யமாந விபவாநு தந்யாம்ஸ்த தாந்யாந் குரூந்' என்று ந்யாய பரிசுத்தியின் தொடக்கத்திலும், "அமுநா தபநாதிசாயி பூம்நா யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ: | மஹதீ குருபங்க்திஹாரயஷ்டிர் விபுதாநாம் ஹ்ருதயங்கமா விபாதி" || என்று யதிராஜ ஸப்ததியிலும் அருளிச் செய்திருக்கிறார். மேற்கூறிய இரு சுலோகங்களுள், முன்னது—"எம்பெருமானார் திருவடிகளையும், எம்பெருமானார் திருவடிகளை எவர் வணங்குகின்றனரோ, எம்பெருமானார் எவரை வணங்குகின்றனரோ, அவ்விருவகையிலுள்ளவரும் இவ்வாறு எம்பெருமானாரோடு தொடர்புள்ளவரும், அத்தொடர்பினாலேயே நன்கு விளங்குகின்ற ஞானம் முதலிய சிறப்புள்ளவருமான தந்யர்களான ஏனைய ஆசார்யர்களையும் வணங்கி" என்னும் கருத்தையும், பின்னது, "ஸூரியனிலும் மிக்க ஒளியுடைய எம்பெருமானாராகிற நாயகரத்தினத்தைக் கொண்டுள்ள பெரிய குருபரம்பரையாகிற முத்தாரமானது வித்துவான்களுக்கு ஹ்ருதயங்கமமாயிருக்கிறது" என்னும் கருத்தையும் கொண்டுள்ளன—இக்கருத்துக்களைக் காண்பவர்க்கும் எம்பெருமானார் பெருமை மிகத் தெளிவு.

(5) மணவாள மாமுனிகள், திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளைப் பற்றியிருந்தவர். எனினும், அத்திருவாய்மொழிப்பிள்ளை எம்பெருமானார் திருவடிகளையே பூசித்திரும் என்று, தம் பரமக்ருபையினாலே காட்டிக்கொடுக்க, அவ்வெம்பெருமானார்

acharya.org

திருவடிகளில் ஸேவையைச் செய்துகொண்டிருந்தவர்—மணவாள மாமுனிகள், தாம் அருளிச்செய்த யதிராஜவிம்சதியில், "ஸ்ரீமந் யதீந்த்ர பவதீய பதாப்ஜ ஸேவாம் ஸ்ரீசைலநாத கருணாபரிணாமதத்தாம் | தாமந்வஹம் மம விவர்த்தய நாத தஸ்யா: காமம் விருத்தமகிலம் ச நிவர்த்தய த்வம்" என்று அருளிச்செய்திருக்கிறார். இதன் கருத்து—

பகவத் கைங்கர்ய ஸ்ரீயை உடைய யதீந்திரரே! எந்தை திருவாய்மொழிப் பிள்ளையின்னருளால் உபகரித்தருளினதாய் தேவரீர் திருவடித்தாமரைகளில் எப்போதும் உள்ள அனுபவகைங்கர்யமாகிற ஸேவையை நாடோறும் அதில்லாவிடில் செல்லாமையாகிற இயல்பு உடைய அடியேனுக்கு, மேன் மேலும் தழைத்துச் செல்லும்படியான வளர்த்தி தந்தருளவேணும். ஸ்வாமியே! அந்த ஸேவைக்குத் தடையான விஷய ப்ராவண்யம் என்னும் காமத்தையும் போக்கியருளவேணும்" என்பது.

இதனாலும், எம்பெருமானாருக்குள்ள பெருமை நன்கு விளங்கும்; "இங்ஙனம் நம்பெருமாள், நம்மாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், தேசிகன், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாள மாமுனிகள் ஆகிய அனைவருமே எம்பெருமானாருக்குள்ள முக்கியத்வத்தைப் பிரகாசப்படுத்தியிருக்கிறார்கள்" என்பதைச் சுருக்கமாய்க் கண்டோம்—

இவ்வாறு முக்கியத்வம் பெற்றுள்ள எம்பெருமானார் திருவடிகளையே மணவாள மாமுனிகள் தம் ஆத்ம க்ஷேமத்திற்கும் ஏனையோரான நம் ஆத்மக்ஷேமத்திற்கும் தஞ்சமாகத்தாம் அறுதியிட்டிருந்தவர். இவ்வுண்மையைப் பின்வருமாறு நாம் நன்கு அறியலாகும் :—

"வேதங்களும், அவ்வேதப் பொருள்களைத் தெரிவிக்க வந்துள்ள ஸ்ம்ருதி முதலிய நூல்களும் பரமபுருஷனுடைய ஆஜ்ஞைகளாம். அவற்றில், செய்யலாகாது என்று கூறப்பெற்றுள்ளவையை நாம் செய்கிறோம்; செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளவையைச் செய்யாது விட்டுவிடுகிறோம். பரமபுருஷன் திருவுள்ளம் புண்படுமாறு அவன் கைங்கர்யத்திற்குள்ள பொருள்களை அக்கைங்கர்யத்திற்கு இல்லை செய்து நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்க்கும் பயன்படும்படி செய்துகொள்கிறோம். அவனடியார் திருவுள்ளம் புண்படும்படி நடக்கிறோம். அவனும் அவனடியார்களும் இருப்பதையே நாம் பொறுப்பதுமில்லை. இங்ஙனமான பாவங்களைத் தொன்று தொட்டு மனம், வாக்கு, காயம் இவற்றால் செய்துகொண்டிருக்கிறோம். இனி வருங்காலத்தில் செய்யவும் போகிறோம். இவ்வாறான எண்ணற்ற நம்மால் செய்யப் பெற்றுள்ள நம் பாவங்களே நம் ஆத்ம க்ஷேமத்திற்குத் தடையாம். இத்தடை நீங்குவதற்கு எம்பெருமான் க்ஷமை என்னும் குணத்தைத் தவிர வேறொன்றும் ஏதுவன்று. எம்பெருமான் செய்ய வேண்டிய அந்த க்ஷமையை அவன் ஸந்நிதியில் வேண்டிக்கொண்டிருக்கிறார்—எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தம் பெற்றவர்களுக்கு அவருக்கு வச்யனான எம்பெருமான் க்ஷமைதான் க்ஷேமத்தைச் செய்கிறது" என்பதே மணவாள மாமுனிகள் அறுதியிட்ட, அவர்தம் பெருமை பொருந்திய கொள்கையாம். இக்கொள்கை "காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ | ஸா சத்வயைவ கமலாரமணேர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச் ச்ரிதாநாம்" என்னும் அவர்தம் சுலோகத்தில் நன்கு விளங்குகின்றது.

இவ்வாறு மணவாளமாமுனிகள் காட்டியருளிய எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தமடியாக ஏற்படும் எம்பெருமான் க்ஷமையே நமக்கு க்ஷேமகரம் என்பதை நாம் நாடி, எம்பெருமானார் திருவடிகள் ஸம்பந்தத்தை, அவ்வெம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தம் பெற்றவர்களும் அவர் தாம் ஏற்படுத்தியருளின எழுபத்திநான்கு ஸிம்மாஸநாதிபதிகளுமான நம் பூர்வாசாரியர்களின் ஸந்ததிகள் முகமாகப் பெற்று, ஆத்ம க்ஷேமத்தை அடைந்து வாழ்வோமாக!

acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

"சாளக்ராம சிலா மாஹாத்மியம்"

"अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः ।
पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येताश्चतुर्दश: ।"

அங்கானி வேதா - சத்வார: மீமாம்ஸ
ந்யாய விஸ்தர: ।
புராணம் தர்மசாஸ்த்ரம் வித்யா சஹ்யேதா:
சதுர்ச: ।।

1. பதினான்கு வித்யைகள் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளில் ப்ரதானம் வேதம். வைதிக மதத்தை ஆச்ரயித்தவர்கட்கு வேதம்தான் முக்கிய ப்ரமாணமாக எடுக்கப்பட்டிருக்கிறது. வேதார்த்தங்களை இதிகாஸ புராணங்களால்தான் தெரிந்து கொள்ளவேண்டும் இதிகாஸ புராணங்கள் இரண்டையும் வேதத்திற்கு சமானமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பதினெட்டு மஹாபுராணங்களை ரிஷிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

2 ப்ராம்மம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்னேயம் பவிஷ்யம், ப்ரம்ம வைவர்த்தம்; லைங்கம், வராகம், ஸ்காந்தம்; வாமனம், கூர்மம், மாத்ஸ்யம், காருடம், ப்ரஹ்மாண்டம் என்கிறதாகப் பதினெட்டு புராணங்கள்.

புராணங்களில் ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்கிற மூன்று விதமாக மாத்ஸ்யாதி புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது. தாமஸ புராணங்களைக் காட்டிலும் ராஜஸ புராணங்கள் ச்ரேஷ்டம் ராஜஸ புராணங்களைக் காட்டிலும் ஸாத்விக புராணங்கள் ப்ரபலமானவை

3. ஸாத்விக புராணங்கள்: விஷ்ணு புராணம், நாரத புராணம் ஸ்ரீ பாகவதம் கருட புராணம், பாத்ம புராணம்; வராக புராணம் என்பதாக ஆறு புராணங்கள். இவைகளில் பாத்ம புராணம் மிகவும் விஸ்தாரமாக ஆறு கண்டங்களாக உள்ளது. நானாவித தர்ம ப்ரதிபாதங்களை உடையது

4. இந்த பாத்ம புராணத்தில் சொல்லியிருக்கிறபடியே எல்லா விஷ்ணு கோயில்கள், சிவாலயங்கள் முதலிய அனைத்து கோயில்களிலும் ப்ரதான மூர்த்தியாக மூலவருடைய பக்கத்தில் சாளக்கிராமங்களை பெட்டியில் எழுந்தருளப் பண்ணியிருக்கிறார்கள். மூலமூர்த்தி, உத்ஸவமூர்த்திகளுக்கு அர்க்ய பாத்ய, ஆசமனாதிகள், தூபதீபங்கள் சமர்ப்பித்த பிறகு தீர்த்த எம்பெருமானை சாளக்கிராம மூர்த்திகளுக்கே திருமஞ்சனம் நடைபெறுகிறது. பிறகு தான் அலங்காரம், தளிகை முதலியவை சமர்ப்பிக்கப்படுகிறது.

5 ஒவ்வொரு சிவாலயத்திலும் மகா விஷ்ணுவிற்கு ஒரு கர்ப்பகிருகமிருப்பது அனைவரும் அறிந்தது. அந்தந்த மூர்த்திகளுக்கருகிலும் சாளக்கிராமங்கள் திருவாராதனத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது.

acharya.org

6. ப்ராம்மணனானவன் ப்ரதி தினமும் சாளக்ராமத்திற்குத் திருமஞ்சனம் செய்து அந்த தீர்த்தத்தை ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டும் என்று சாஸ்த்ரத்தில் சொல்லி யிருக்கிறது.

7. ஸ்ரீ மாத்வ வைஷ்ணவர்களிடம் இவ் அனுஷ்டானத்தை ப்ரத்யக்ஷமாக பார்க் கலாம். அவர்கள் தாங்கள் புண்ட்ரதாரணம் செய்துகொள்ளும் பெட்டியில் ஒரு சாளக் ராமத்தையாவது எழுந்தருளப் பண்ணி யிருப்பார்கள். அவர்கள் தீர்த்தமாடி, புண்ட்ரதாரணம் செய்துகொண்ட உடன் சாளக்ராமத்திற்கு திருமஞ்சனம் செய்து அந்த தீர்த்தத்தை ஸ்வீகரித்துக்கொண்ட பிறகுதான் மற்றவேலைகளைச் செய்வார்கள். ஸ்ரீ வைஷ்ணவர்கள் கிருஹத்தில் பெரியவர் ஒருவர் ஆராதனம் செய்து மீதி உள்ளவர்கள் சாற்றுமுறையில் கலந்து கொண்டு அந்த திருமஞ்சன தீர்த்தத்தைப் பெரியவரிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள் அதற்கும் சௌகரியமில்லாதவர்கள் கோவில்களில் சாளக்ராம தீர்த்தம் வாங்கிக் கொள்வது அனைவரும் அறிந்த விஷயம். ஆகையால் ஸகல வைதீகமதத்தவர் களுக்கும் சாளக்ராமபூஜை மிகவும் முக்கிய மானதாக ஏற்படுகிறது.

8. பாத்ம புராணத்தில் பாதாள கண்டத்தில் சாளக்ராம ஆராதனையைப் பற்றி விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. அனேக ஸஹஸ்ர பாபங்களைச் செய்தாலும் கூட சாளக்ராம தீர்த்தத்தை ஸ்வீகரிப் பதினால் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடு கிறான். ஸ்த்ரீகள் சாளக்ராம பூஜையை கண்டிப்பாக செய்யக் கூடாது. எவர் ஒருவர் சாளக்ராமத்தை நிந்திக்கிறாரோ அவர்கள் கும்பீபாகம் என்னும் நரகத்தில் விழுவார்கள்.

9. பூர்வ காலத்தில் சபலன் என்கிற வேடன் இருந்தான். அவன் பிரதிதினமும் தனுர்பாணியாய் எல்லாப் பிராணிகளையும் கொன்றுகொண்டிருந்தான். தீர்த்த யாத் திரையாகப் போகிறவர்களையும் கொன்று அவர்களின் திரவ்யங்களை அபகரித்துக் கொண்டு காம, க்ரோதவசராய்த் திரிந்து கொண்டிருந்தான். அவனது அந்திம காலத்தில் யமதூதர்கள் அவனை இரும்பு சங்கிலியால் கட்டி நரகலோகத்திற்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். அவ்வழியாக நாராயண பராயணராக உள்ள விஷ்ணு தூதர்கள் அவனைப் பார்த் தார்கள். மிகவும் கிருபையுடன் இவன் மகா பாபியாக இருந்தாலும்கூட இவனை இக்கஷ்டத்திலிருந்து விடுபட எண்ணினார் கள். தன்னுடைய சாமான்களுடன் கூட பெட்டியிலிருக்கும் சாளக்ராமத்துடன்கூட அந்த பாபி இருக்கும் இடம் வந்தார்கள். அவன் முகத்தில் சாளக்ராம தீர்த்தத்தை ப்ரோக்ஷணம் செய்தார்கள். காதில் ஸ்ரீராம மந்த்ரத்தை ஜெபித்தார்கள். அவனது தலையில் துளசியை வைத்தார்கள். யம தூதர்களைப் பார்த்து சாளக்ராம தீர்த்த ப்ரோக்ஷணத்தால், ஸ்ரீ ராமநாம ஜெபத் தால் இவன் இப்பொழுது பரிசுத்தனாகி விட்டான். விஷ்ணு தூதர்கள் கூறுகிறார் கள். 'யமபடர்களா நீங்கள் இவனை விட்டு விடவேண்டும்' என்று.

யமதூதர்கள் சொல்கிறார்கள்:—

இவன் ப்ரஹ்மஹத்யாதி பாபங்களா லேயும் அனேக கோடி ப்ராணிவதை செய்த பாபங்களாலேயும் பீடிக்கப்பட்டிருக் கிறான். ஆகையால் இவனை நரகத்திற்கு அழைத்துப் போவதாக இருந்தோம். உங்களது தர்ஸன மாகாத்மியத்தால் இவன் விடுவிக்கப்பட்டான். ஆகையால் சிறிது காலம் சொர்க்கத்தில் இருந்து பிறகு மனித னாகப் பிறந்து சாளக்ராம பூஜையாலும், ராம ஜெபத்தாலும் விஷ்ணு லோகத்தை அடையட்டும் என்று கூறிச்சென்றார்கள்.

acharya.org

उभयवेदान्तहृदयेन श्रीवरवरयोगिना रामानुजदासेनकृता
श्रीवेङ्कटाचार्यदिनचर्या समाप्ता ।।

ஸ்ரீ வேங்கடசார்ய திநசர்யை ஸமாப்தம்.

அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்.
ஆழ்வார், எம்பெருமானார், ஜீயர் திருவடிகளே சரணம்

acharya.org

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீவேங்கடகுரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்
ஸ்ரீவைஷ்ணவசிரோபூஷா ஸ்ரீராமாநுஜபாதுகா।
ஸ்ரீவாதூல குலோத்தம்ஸ: ஸ்ரீ தாசரதிரேததாம் ।।

நம் ஸ்வாமி திருமாளிகையில் திருமஞ்சன காலத்தில் அனுசந்திக்கப்படும் கட்டியங்கள்

தொகுத்தருளியவர் - நம் வர்த்தமான (குமார ராமாநுஜாசார்யார்) ஸ்வாமி

ஜய விஜயீபவ. தேவ தேவோத்தம. தேவ கம்பீர
தேவதா ஸார்வ பௌம. பராக், ஸ்வாமிந் பராக்.

ஸ்ரீவரதன்

ஸ்ரீநிதிம் நிதிம பார மர்த்திநாம்
அர்த்தி தார்த்த பரிதாந தீக்ஷிதம்
ஸர்வ பூத ஸுஹ்ருதம் தயாநிதிம்
தேவராஜ மதிராஜ மாச்ரயே

பெரிய பெருமாள்

ஸ்ரீ ஸ்தநா பரணம் தேஜ: ஸ்ரீ ரங்கேசயமாச்ரயே ।
சிந்தாமணி மிவோத்வாந்த முத் ஸங்கே அநந்த போகிந: ॥

திருவேங்கடமுடையான்

ச்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேர்த்தினாம் ।
ஸ்ரீ வேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாசாய மங்களம் ॥

ஸ்ரீ வேங்கடேசதயிதாம் ச்ரியம் கடகபாவத ।
ஸமாச்ரித்ய வ்ருஷாத்ரீச சரணம் சரணம் ச்ரயே ॥

பெருந்தேவி தாயார்

ஆகாரத்ரய ஸம்பந்நாம் அரவிந்த நிவாஸிநீம் ।
அசேஷ ஜகதீசத்ரீம் வந்தே வரத வல்லபாம் ॥

தேவப்பெருமாள்

வரதம் த்விரதாத்ரீசம் ஸ்ரீநிதிம் கருணா நிதிம் ।
சரண்யம் சரணம்யாமி ப்ரணதார்த்தி ஹரம் ஹரிம் ॥

acharya.org

சம்பத் குமாரன்

கமலாகுச கஸ்தூரி கர்த்த மாங்கித வக்ஷஸே ।
யாதவாத்ரி நிவாஸாய சம்பத் புத்ராய மங்களம் ॥

அழைத்து வாழ்வித்தவர்

ஆஹூய ரக்ஷகஹரே தவ மங்களம் ஸ்யாத்
அஸ்மத் குரூத்தம குாதிப மங்களம் ஸ்யாத் ।
ஏவம் விதாம் கிரமுதீரய தச்சிரேண
புஷ்ணாது மங்கள ததிம் பகவான் குரோர்மே ॥


லக்ஷ்மீ ந்ருஸிம்மன்

மாதவ் முகுந்த மதுஸூதன முராரே
வாமந ந்ருஸிம்ஹ சரணம் பவ நதாநாம் ।
காமத க்ருணிந் நிகில காரண நயேயம்
கால மமரேச நரஸிம்ஹ நரஸிம்ஹ! ॥

என்னை தீமணம் கெடுத்த பிரான்

ஆர்த்தானாம் துக்க சமனே தீக்ஷிதம் ப்ரபு மௌயயம் ।
அசேஷ ஜெகதாதாரம் லக்ஷ்மீ நாராயணம் பஜே ॥

With Best Compliments from



SUSWAAD

Sweets & Savouries (p) Ltd.,
The Delicious Home Made Sweets & Savouries

3/2, Venkatraman Street, T.Nagar, Chennai - 17.
E-mail: krishramesh@vsnl. com.

acharya.org

வரதம் த்விரதாத்ரீசம் ஸ்ரீநிதிம் கருணா நிதிம் ।
சரண்யம் சரணம்யாமி ப்ரணதார்த்தி ஹரம் ஹரிம் ॥

ஆஹூய ரக்ஷகஹரே தவ மங்களம் ஸ்யாத்
அஸ்மத் குருத்தம குாதிப மங்களம் ஸ்யாத் ।
ஏவம் விதாம் கிரமுதீரய தச்சிரேண
புஷ்ணாது மங்களா ததிம் பகவான் குரோர்மே ॥

ஸ்ரேயம்ஸி கரிஸைரேந்த்ர கருணா வருணாலாய:
தோதுஹ்யாத் வரதஸ் ஸ்ரீமா நர்த்திநாம் நிதிரவ்யய:

கமல நிவேஸி தாங்க்ரிமமலம் கமலா பரணம்
கநமணி பூஷணத்யதி கடாரித காத்ரருசிம்
அபய கதா, ஸுதர்ஸந, ஸ்ரோருஹ, சாருகரம்,
கரிகிரி ஸேகரம் கிமபி சேதஸி சேதஸி மே நிததே

ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று
நான்முகன் தன்னொடு தேவருலகோடு உயிர் படைத்த பெருமாள்
பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்பதங்களும் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளியனலும் பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல் மாருதமும் குரைகடலேழும் ஏழுமாமலைகளும் விசும்பும்
அண்டமும் தானாய் நின்ற எம்பெருமான், நம் அழைத்து வாழ்வித்த பெருமாள்

என்னெஞ்சமேயான் என் சென்னியன்* தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன்
முன்னம் சேய் ஊழியான் ஊழி பெயர்த்தான் உலகேத்தும்
ஆழியான் அத்தியூரான் நம் ஆஹூய ரக்ஷக பெருமான்

அத்தியூரான் புள்ளையூர்வான் அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல் துயில்வான் முத்தி
மறையாவான் மாகடல் நஞ்சுண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான் நம் ப்ரணதார்த்திஹரவரதப் பெருமான்

வன் பெருவானகமுய்ய, அமாருய்ய, மண்ணுய்ய
மண்ணுலகில் மனிசருய்ய, துன்பமிகு துயரகல
அயர் வொன்றில்லாச்சுகம் வளர அகமிகமும் தொண்டர் வாழ
அத்திகிரி அருள் வடிவே திருமஞ்சனமாடி அருள்வதே ஜய விஜயீ பவா!

த்வம்மே அஹம்மே குதஸ்தத்
ததபிகுத இதம் வேத மூல - ப்ரமாணாத்
ஏதச்ச அநாதி ஸித்தாத் அநுபவ - விபவாத்தர்ஹி
ஸாக்ரோச ஏவ ।
க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மம விதித:
கோத்ர ஸாக்ஷீ ஸுதி: ஸ்யாத்
ஹந்த ! த்வத் பக்ஷபாதீ ஸ இதி
ந்ருகலஹே ம்ருக்ய: - மத்யஸ்த்வத் த்வம் ॥

acharya.org

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மன் திருமஞ்சன கட்டியம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ மஹாஸிம்ஹ திவ்யஸிம்ஹ லாயுத ।
கிரி ஸம்பவ தேவேச ரக்ஷமாம் சரணாகதம் ॥

வாமம் பாதம் ப்ரசரா்ய ஸ்புதகண முதிதம் தக்ஷிணம் குஞ்சயித்வா
வாமோருந்யஸ்த ஹஸ்தம் வரதஅபயிதும் பாணிநா தக்ஷிணேன
சங்கம் சக்ரம் ததாநம் சசிநிப வதநம் ஸா்வ வந்த்யம் த்ரிநேத்ரம்
வந்தேஹம் பாடலாத்ரௌ விநிசிதம் அநிசம் வஜ்ரதம்ஷ்ட்ரம் ந்ருஸிம்மம்

அங்கண் ஞாலத்தை அமுது செய்த பெருமான்
அங்கு ஓா் ஆளரியாய் அனுக்ரஹித்த பெருமான்
அவுணன் பொன்ற ஆகம் வல்லுகிரால் போழ்ந்த புனிதனாம் நம் பெருமான்
நம் வாதூல தேசிக குல எம்பெருமான்

பைங்கநானை கொம்பு கொண்டு பத்திமையால் அடிக்கீழ்
செங்கணாளி இட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றுடைய பெருமாள்
நம் தாசரதி குலம் விளங்கச் செய்யும் பெருமான்


முளைத்த சீற்றம் விண்சுடப் போய் மூவுலகும் பிறவும்
அனைத்தும் அஞ்ச ஆளரியாய் இருந்த எம்பெருமான்
நம் தெளிசிங்கப் பெருமாள்

நல்லை நெஞ்சே நாம் தொழுதும் நம்முடைய நம்பெருமான்
நம் அண்ணாவிலப்ப பெருமான்

த்வம்மே அஹம்மே குதஸ்தத்
தத்பிகுத இதம் வேத மூல - ப்ரமாணாத்
ஏதச்ச அநாதி ஸித்தாத் அநுபவ - விபவாத்தா்ஹி
ஸாக்ரோச ஏவ ।
க்வாக்ரோச: கஸ்ய கீதாதிஷு மம விதித:
கோத்ர ஸாக்ஷி ஸுதி: ஸ்யாத்
ஹந்த ! த்வத் பக்ஷபாதீ ஸ இதி
ந்ருகலஹே ம்ருக்ய - மத்யஸ்த்வத் த்வம் ॥

acharya.org

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம : ஸ்ரீ : ஸ்ரீவேங்கடகுரவே நம :



ஸ்ரீமத் வரவரமுநயே நம :

அண்ணாவில்லப்பன் திருவடிகளே சரணம்

அப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

ஆழ்வார்கள் வாழிதிருநாமம்

தனியன்

நேரிசை வெண்பா

அம்புவியிலாழ்வார்களாண்டாள் மதுரகவி*
தம்பதிநாள்மாதந் தமிழ்த்தொகையை* - நம்புவிக்கே
செம்புளாழின்றனமாய்ச் சேர்ந்த பெருவாழிசெய்த *
அப்புள்ளான்தானே யரண்.

நூற்பயன்

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

மண்ணுலகத்துள்ளோர்கள் மகிழ்ந்துவாழ
மண்வாளமாமுனிகளருள் தன்னாலே
பண்ணருளிச்செயல்விளக்கம் வாழிநாமம்
பத்தியுடனிவ்வுலகிற் பயில்வார் கேட்பார்
விண்ணுலகத்தோர்களினுங் கீர்த்தியுற்று
விளங்கிட மெய்ஞ்ஞானவாழ்வுபெற்றே
கண்ணடியார்களுடன் கலந்து நாளும்
காசினியில்சதிராக வாழ்வர்தாமே.

வேதத்தினுண் பொருளைத் தமிழால்நாளும்
விளங்கியிடப்பன்னிருவர் வந்துதோன்றும்
மாதத்தை அவரவர்களுதித்த நாளை
வாழ்பதியைக் கலைத்தொகையை மனத்தில் வைத்துப்
போதத்தைத்தருந்தமிழால் வாழி நாமம்
பூதலத்திற்பேசுகின்றே னிதனைக்கற்பார்
பாதத்தை என்முடிமேலணியாப்பூண்டு
பன்னாளுங்கைகூப்பிப் பணிவேன்யானே,

நூல்

போதமிகும்பொய்கையார் பூதத்தார் வாழியே*
புகழ்பேயார் மழிசையர்கோன் புத்தூரான் வாழியே*
நாதமுனிதொழுங் குருகைநாவீறன் வாழியே*
நற்பாணன் கொல்லிநகர்நாதனார் வாழியே*
ஆதரிக்குந்தொண்டரடிப்பொடிதாள்கள் வாழியே*
அருட்கலியன் மதுரகவி ஆண்டாளும் வாழியே*
ஏதமற்ற நாலாயிரப்பனுவல் வாழியே*
இவருதித்த நான் மாத மெழிற்பதியும் வாழியே. (1)

acharya.org

பொய்கையாழ்வார்

செய்யதுலாவோணத்தில் செகத்துதித்தான் வாழியே*
        திருக்கச்சிமா நகரம் செழிக்கவந்தோன் வாழியே*
வையந்தகளிநூறும் வகுத்துரைத்தான் வாழியே*
        வனசமலர்க்கருவதனில் வந்தமைந்தான் வாழியே*
வெய்யகதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே*
        வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே*
பொய்கைமுனிவடிவழகும் பொற்பதமும் வாழியே*
        பொன்முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே. (2)

பூதத்தாழ்வார்

அன்பேதகளிநூறு மருளினான் வாழியே*
        ஐப்பசியில்விட்டத்தி லவதரித்தான் வாழியே*
நன்புகழ்சேர்குருக்கத்தி நாண்மலரோன் வாழியே*
        நல்லதிருக்கடன்மல்லை நாதனார் வாழியே*
இன்புருகுசிந்தை திரியிட்டபிரான் வாழியே*
        எழின்ஞானச்சுடர்விளக்கை யேற்றினான் வாழியே*
பொன்புரையுந்திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே*
        பூதத்தார்தாளிணையிப் பூதலத்தில் வாழியே. (3)

பேயாழ்வார்

திருக்கண்டேனெனநூறும் செப்பினான் வாழியே*
        சிறந்தவைப்பசியிற்சதயம் செனித்தவள்ளல் வாழியே*
மருக்கமழும்மயிலைநகர் வாழவந்தோன் வாழியே*
        மலர்க்கரியநெய்தல்தனில் வந்துதித்தான் வாழியே*
நெருக்கிடவேஇடைகழியில் நின்றசெல்வன் வாழியே*
        நேமிசங்கன்வடிவழகை நெஞ்சில்வைப்போன் வாழியே*
பெருக்கமுடன் திருமழிசைப்பிரான் தொழுவோன் வாழியே.
        பேயாழ்வார்தாளிணை இப்பெருநிலத்தில் வாழியே. (4)

திருமழிசையாழ்வார்

அன்புடனந்தாதி தொண்ணூற்றாறுரைத்தான் வாழியே*
        அழகாருந்திருமழிசையமர்ந்த செல்வன் வாழியே*
இன்பமிகுதையில்மகத் திங்குதித்தான் வாழியே*
        எழிற்சந்தவிருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே*
முன்புகத்தில்வந்துதித்த முனிவனார் வாழியே*
        முழுப்பெருக்கில் பொன்னியெதிர் மிதந்த சொல்லோன்
நன்புவியில் நாலாயிரத்தெழுநூற்றான் வாழியே* [வாழியே *
        நங்கள்பத்திசார னிருநற்பதங்கள் வாழியே. (5)

நம்மாழ்வார்

ஆனதிருவிருத்தம்நூறு மருளினான் வாழியே*
        ஆசிரியமேழுபாட்டளித்தபிரான் வாழியே*
ஈனமறவந்தாதியெண்பத்தேழீந்தான் வாழியே*
        இலகுதிருவாய்மொழி யாயிரத்தொருநூற் றிரண்டுரைத்
வானணியும்மாமாடக்குருகைமன்னன் வாழியே* [தான்வாழியே*
        வைகாசிவிசாகத்தில் வந்துதித்தான் வாழியே*
சேனையர்கோனவதாரஞ் செய்தவள்ளல் வாழியே* !
        திருக்குருகைச்சடகோபன் திருவடிகள் வாழியே. (6)

acharya.org

குலசேகராழ்வார்

அஞ்சனமாமலைப்பிறவி ஆதரித்தோன் வாழியே

அணியரங்கர்மணத்தூணை அடைந்துய்ந்தோன் வாழியே*

வஞ்சிநகரந்தன்னில் வாழவந்தோன் வாழியே*

மாசிதனிற்புனர்பூசம் வந்துதித்தான் வாழியே*

அஞ்சலென்னக்குடம்பாம்பி லங்கையிட்டான் வாழியே*

அநவரதமிராமகதை அருளுமவன் வாழியே*

செஞ்சொல்மொழி நூற்றஞ்சும் செப்பினான் வாழியே*

சேரலர்கோன் செங்கமலத்திருவடிகள் வாழியே. (7)

பெரியாழ்வார்

நல்லதிருப்பல்லாண்டு நான்முன்றோன் வாழியே*

நானூற்றறுபத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே*

சொல்லரிய ஆனிதனிற் சோதிவந்தான் வாழியே*

தொடைசூடிக்கொடுத்தவள் தம்தொழுந் தமப்பன் வாழியே*

செல்வநம்பிதன்னைப்போலச் சிறப்புற்றான் வாழியே*

வில்லிபுத்தூர் நகரத்தை விளங்கவைத்தான் வாழியே*

வேதியர்கோன் பட்டர்பிரான் மேதினியில் வாழியே. (8)

தொண்டரடிப்பொடியாழ்வார்

மண்டங்குடியதனில் வாழவந்தோன் வாழியே*

மார்கழியிற்கேட்டைநாள் வந்துதித்தான் வாழியே*

தெண்டிரைசூழரங்கரையே தெய்வமென்றான் வாழியே*

திருமாலை யொன்பதஞ்சும் செப்பினான் வாழியே*

பண்டுதிருப்பள்ளியெழுச்சிப் பத்துரைத்தான் வாழியே*

பாவையர்கள் கலவிதன்னைப் பழித்தசெல்வன் வாழியே*

தொண்டுசெய்துதுளபத்தால் துலங்கினான் வாழியே*

தொண்டரடிப்பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே. (9)

திருப்பாணாழ்வார்

உம்பர்தொழும்மெய்ஞ்ஞானத் துறையூரான் வாழியே*

உரோகிணிநாள்கார்த்திகையி லுதித்தவள்ளல் வாழியே*

வம்பவிழ்தார்முனிதோளில் வந்தபிரான் வாழியே*

மலர்க்கண்ணை வேறொன்றில் வையாதான் வாழியே*

அம்புவியில்மதிளரங்க ரகம்புகுந்தான் வாழியே*

அமலனாதிபிரான்பத்து மருளினான் வாழியே*

செம்பொனடி முடியளவும் சேவிப்போன் வாழியே*

திருப்பாணன்பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே. (10)

திருமங்கையாழ்வார்

கலந்ததிருக்கார்த்திகையில் கார்த்திகைவந்தோன் வாழியே*

காசினியிலொண் குறையலூர்க்காவலோன் வாழியே*

நலந்திகழாயிரத்தெண்பத்துநாலுரைத்தான் வாழியே*

நாலைந்துமாறைந்தும் நமக்குரைத்தான் வாழியே*

இலங்கெழுகூற்றிருக்கை இருமடலீந்தான் வாழியே*

இம்மூன்றில் இருநூற்றிருபத்தேழீந்தான் வாழியே*

வலந்திகழுங்குமுதவல்லிமணவாளன் வாழியே*

வாட்கலியன் பரகாலன் மங்கையர்கோன் வாழியே. (11)

acharya.org

மதுரகவியாழ்வார்

சித்திரையிற் சித்திரைநாள் சிறக்கவந்தோன் வாழியே*
திருக்கோளூரவதரித்த செல்வனார் வாழியே*
உத்தரகங்காதீரத் துயர்தவத்தோன் வாழியே*
ஒளிகதிரோன்தெற்குதிக்க உகந்துவந்தோன் வாழியே*
பத்தியொடு பதினொன்றும் பாடினான் வாழியே*
பராங்குசனே பரனென்று பற்றினான் வாழியே*
மத்திமமாம்பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே*
மதுரகவிதிருவடிகள் வாழிவாழிவாழியே. (12)

ஆண்டாள்

திருவாடிப்பூரத்திற் செகத்துதித்தாள் வாழியே*
திருப்பாவைமுப்பதும் செப்பினாள் வாழியே*
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே*
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள் வாழியே*
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே*
உயரரங்கர்க்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே*
மருவாருந்திருமல்லி வளநாடி வாழியே*
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே. (13)

ஓரான்வழி ஆசாரியர்கள் வாழிதிருநாமம்

பெரியபெருமாள்

திருமகளும்மண் மகளும் சிறக்கவந்தோன் வாழியே*
செய்யவிடைத்தாய்மகளார் சேவிப்போன் வாழியே*
இருவிசும்பில் வீற்றிருக்கு மிமையவர்கோன் வாழியே*
இடர்கடியப் பாற்கடலை யெய்தினான் வாழியே*
அரிய தயரதன்மகனா யவதரித்தான் வாழியே*
அந்தரியாமித்துவமு மாயினான் வாழியே*
பெருகிவரும் பொன்னிநடுப் பின்துயின்றான் வாழியே*
பெரியபெருமா ளெங்கள்பிரா னடிகள் வாழியே. (1)

பெரியபிராட்டியார்

பங்கயப்பூவிற்பிறந்த பாவைநல்லாள் வாழியே*
பங்குனியில்உத்திர நாள் பாருதித்தாள் வாழியே*
மங்கையர்கள் திலகமென வந்தசெல்வி வாழியே*
மாலரங்கர்மணிமார்பை மன்னுமவள் வாழியே*
எங்களெழிற்சேனை மன்னர்க் கிதமுரைத்தாள் வாழியே*
இருபத்தஞ்சுட்பொருள்மா லியம்புமவள் வாழியே*
செங்கமலச்செய்யரங்கம் செழிக்கவந்தாள் வாழியே*
சீரங்கநாயகியார் திருவடிகள் வாழியே. (2)

acharya.org

சேனைமுதலியார்

ஓங்குதுலாப்பூராடத் துதித்தசெல்வன் வாழியே*
ஒண்டொடியாள் சூத்திரவதியுறைமார்பன் வாழியே*
ஈங்குலகில்சடகோபற் கிதமுரைத்தான் வாழியே*
எழிற்பிரம்பின்செங்கோலை யேந்துமவன் வாழியே*
பாங்குடன் முப்பத்துமூவர் பணியுமவன் வாழியே*
பங்கயத்தாள் திருவடியைப் பற்றினான் வாழியே*
தேங்குபுகழரங்கரையே சிந்தைசெய்வோன் வாழியே*
சேனையர்கோன் செங்கமலத்திருவடிகள் வாழியே. (3)

நம்மாழ்வார்

மேதினியில் வைகாசிவிசாகத்தோன் வாழியே*
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே*
ஆதிகுருவாய்ப் புவியிலவதரித்தோன் வாழியே*
அனவரதம் சேனையர்கோ னடிதொழுவோன் வாழியே*
நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே*
நன்மதுரகவிவணங்கும் நாவீரன் வாழியே*
மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே*
மகிழ்மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே. (4)

ஸ்ரீமந்நாதமுனிகள்

ஆனிதனி லனுடத்தி லவதரித்தான் வாழியே*
ஆளவந்தார்க்குபதேசம் அருளிவைத்தான் வாழியே*
பானுதெற்கிற்கண்டவன் சொல்பலவுரைத்தான் வாழியே*
பராங்குசனார் சொற்பிரபந்தம் பரிந்துகற்றான் வாழியே*
கானமுறத் தாளத்திற்கண்டுரைத்தான் வாழியே*
கருணையினா லுபதேசக் கதியளித்தான் வாழியே*
நானிலத்திற் குருவரையை நாட்டினான் வாழியே*
நலந்திகழும் நாதமுனிநற்பதங்கள் வாழியே. (5)

உய்யக்கொண்டார்

வாலவெய்யோன்தன்னை வென்றவடிவழகன் வாழியே*
மால்மணக்கால்நம்பிதொழு மலர்ப்பதத்தோன் வாழியே*
சீலமிகுநாதமுனி சீருரைப்போன் வாழியே*
சித்திரையில்கார்த்திகைநாள் சிறக்கவந்தோன் வாழியே*
நாலிரண்டு மையைந்தும் நமக்குரைத்தான் வாழியே*
நாலெட்டினுட்பொருளை நடத்தினான் வாழியே*
மாலரங்கமணவாளர் வளமுரைப்போன் வாழியே*
வையமுய்யக்கொண்டவர்தாள் வையகத்தில் வாழியே. (6)

acharya.org

மணக்கால்நம்பிகள்

தேசமுய்யக்கொண்டவர்தாள் சென்னிவைப்போன் வாழியே*
தென்னரங்கர்சீரருளைச் சேர்ந்திருப்போன் வாழியே*
தாசரதிதிருநாமம் தழைக்கவந்தோன் வாழியே*
தமிழ்நாதமுனியுகப்பைத் தாபித்தான் வாழியே*
நேசமுடனாரியனை நியமித்தான் வாழியே*
நீணிலத்தில் பதின்மர்கலை நிறுத்தினான் வாழியே*
மாசிமகந்தனில் விளங்க வந்துதித்தான் வாழியே*
மால்மணக்கால் நம்பிபதம் வையகத்தில் வாழியே. (7)

ஸ்ரீ ஆளவந்தார்

மச்சணியும் மதிளரங்கம் வாழ்வித்தான் வாழியே*
மறைநான்கு மோருருவில் மகிழ்ந்துற்றான் வாழியே*
பச்சையிட்டராமர்பதம் பகருமவன் வாழியே*
பாடியத்தோனீடேறப் பார்வைசெய்தோன் வாழியே*
கச்சிநகர்மாயனிருகழல் பணிந்தோன் வாழியே*
கடகவுத்தராடத்துக்காலுதித்தான் வாழியே*
அச்சமறமனமகிழ்ச்சி அணைந்திட்டான் வாழியே*
ஆளவந்தார் தாளிணைகளனவரதம் வாழியே. (8)

பெரியநம்பிகள்

அம்புவியில் பதின்மர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே*
ஆளவந்தார் தாளிணையை அடைந்துய்ந்தோன் வாழியே*
உம்பர்தொழுமரங்கேசர்க் குகப்புடையோன் வாழியே*
ஓங்குதனுக்கேட்டைதனி லுதித்தபிரான் வாழியே*
வம்பவிழ்தார்வரதருரை வாழிசெய்தான் வாழியே*
மாறனேர்நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே*
எம்பெருமானார்முனிவர்க் கிதமுரைத்தான் வாழியே*
எழில்பெரியநம்பிசர ணினிதூழி வாழியே.

திருக்கச்சிநம்பிகள்

மருவாருந்திருமல்லி வாழவந்தோன் வாழியே*
மாசிமிருகசீரிடத்தில் வந்துதித்தான் வாழியே*
அருளாளருடன் மொழிசொல்லதிசயத்தோன் வாழியே*
ஆறுமொழிபூதூரர்க் களித்தபிரான் வாழியே*
திருவாலவட்டம்செய்து சேவிப்போன் வாழியே*
தேவராசாட்டகத்தைச் செப்புமவன் வாழியே*
தெருளாருமாளவந்தார் திருவடியோன் வாழியே*
திருக்கச்சிநம்பியிருதிருவடிகள் வாழியே. (10)

acharya.org

எம்பெருமானார்

அத்திகிரியருளாள ரடிபணிந்தோன் வாழியே*
அருட்கச்சிநம்பியுரையாறு பெற்றோன் வாழியே*
பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே*
பதின்மர்கலையுட்பொருளைப் பரிந்துகற்றான் வாழியே*
சுத்தமகிழ்மாறனடி தொழுதுய்ந்தோன் வாழியே*
தொல்பெரியநம்பிசரண் தோன்றினான் வாழியே*
சித்திரையிலாதிரை நாள் சிறக்கவந்தோன் வாழியே*
சீர்பெரும் பூதூர்முனிவன் திருவடிகள் வாழியே. (11)

எண்டிசையெண்ணிளையாழ்வா ரெதிராசன் வாழியே*
எழுபத்துநால்வர்க்கு மெண்ணுரைத்தான் வாழியே*
பண்டைமறையைத் தெரிந்த பாடியத்தோன் வாழியே*
பரகாலனடியிணையைப் பரவுமவன் வாழியே*
தண்டமிழ்நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே*
தாரணியும் விண்ணுலகும் தானுடையோன் வாழியே*
தெண்டிசைசூழ்பூதூ ரெம்பெருமானார் வாழியே*
சித்திரையிற் செய்யதிருவா திரையோன் வாழியே. (12)

எம்பெருமானார் விஷயமாக மணவாளமாமுனிகள் அருளிய வாழி திருநாமம்

சீராருமெதிராசர் திருவடிகள் வாழி
திருவரையிற்சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் செய்யவடி வெப்பொழுதும் வாழி
இலக்கிய முந்நூல்வாழியிணைத் தோள்கள் வாழி
சோராத துய்யசெய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல்வாழி துணைமலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமமணிந்தஎழில் வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே. (13)

அறுசமயச் செடியதனை யடியறுத்தோன் வாழியே
அடர்ந்துவரும் குதிட்டிகளை யறத்துறந்தோன் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டோன் வாழியே
தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தோன் வாழியே
மாறனுரைசெய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
அறமிகு நற்பெரும்பூதூ ரவதரித்தான் வாழியே
அழகாருமெதிராசர் அடியிணைகள் வாழியே. (14)

சங்கரபாற்கர யாதவபாட்டப் பிரபாகரர் தங்கள்மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறுநமக்கிலையென்று மிகத்தளர்நாள்
மேதினிநஞ்சுமை யாறுமெனத்துயர்விட்டு விளங்கியநாள்
மங்கையராளி பராங்குசமுன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னியதென்னரங்காபுரிமாமலை மற்றுமுவந்திடுநாள்
செங்கயல்வாவிகள் சூழ்வயல்நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமான் இளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரைநாளே (15)

acharya.org

கூரத்தாழ்வான்

சீராருந்திருப்பதிகள் சிறக்கவந்தோன் வாழியே*
தென்னரங்கர்சீரருளைச் சேருமவன் வாழியே*
பாராருமெதிராசர்பதம்பணிந்தோன் வாழியே*
பாடியத்தினுட்பொருளைப் பகருமவன் வாழியே*
நாராயணன்சமயம் நாட்டினான் வாழியே*
நாலூரான் தனக்கு முத்தி நல்கினான் வாழியே*
ஏராருந் தையிலத்தத் திங்குவந்தான் வாழியே*
எழில்கூரத்தாழ்வான்தன் னிணையடிகள் வாழியே. (13)

ஸ்ரீ முதலியாண்டான் வாழி திருநாமம் –1 (சித்திரை – புனர்வசு)

சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன் வாழியே
ஸ்ரீரங்கராஜரடி சிந்தை செய்வோன் வாழியே
பக்தியுடன் பதின்மர்கலை பயின்றுரைப் போன் வாழியே
பாதுகையாய் யதிபதிதாள் பதிக்குமவன் வாழியே
முத்திதருமெட்டெழுத்தை மொழிந்தருள்வோன் வாழியே
முக்கோலென்றேதிராசர் மொழி பெற்றோன் வாழியே
தத்துவநூல் பாஷியத்தைத் தரித்துரைப்போன் வாழியே
தாசரதி உபயமலர்த் தாளிணைகள் வாழியே. (1)

அத்திகிரியருளாள ரடிபணிந்தோன் வாழியே
அனவரதமெதிராசரடி தொழுவோன் வாழியே
சித்திரையில் புனர்வசு நாள் சிறக்க வந்தோன் வாழியே
சீபாஷியச் செழும் பொருளைச் செப்புவன் வாழியே
பச்சை வாரணம் விளங்கப் பார்வை செய்தான் வாழியே
பரகாலனடியிணைகள் பரவுமன் வாழியே
உத்தமவாதூகுல முகந்துதித்தான் வாழியே
உய்யதுணை முதலியாண்டான் ஒண்பதமிரண்டும் வாழியே. (2)

அத்திகிரியருளாள ரருள்பெறுவோன் வாழியே
அருள் பச்சைவாரணத்தி லவதரித்தோன் வாழியே
சித்திரையில் புனர்பூசம் சிறக்கவந்தோன் வாழியே
சீபாடிய மீடுமுதல் சீர் பெறுவோன் வாழியே
உத்தமமாம் வாதூல முயர வந்தோன் வாழியே
ஊர்திருந்த சீர்பாத மூன்றினான் வாழியே
முத்திரையும் செங்கோலும் முடிபெறுவோன் வாழியே
முதலியாண்டான் பொற்பதங்கள் ஊழிதோறும் வாழியே.

ஸ்ரீ முதலியாண்டான் நாள் பாட்டு

எட்டுமிரண்டுடனே தமிழ் வேதமோதியுணர்ந்திடுநாள்
எங்குமிடர்கெட அங்கமுபாங்கமுமோங்கியுயர்ந்திடு நாள்
மட்டவிழும் பொழில்மன்னுமரங்கர்தம்செங்கோல்சிறந்திடுநாள்
மாகுடபாலைந்து நாரணனார்பதி வாழ்வு பொலிந்திடுநாள்
இட்டமுயர்ந்தெதிராசருடன் மறைமுப்புரியூட்டிய நாள்
என்முறுமானென்றிவர் பதமும் தண்டமுமாக்கி கொண்டருள் நாள்
சிட்டர்மகிழந்திட தாசரதிக்குருபோந்து பிறந்தருள் நாள்
சித்திரையில் புனர்பூசமதாகிய செல்வம் மகிழ்ந்திடு நாளே

acharya.org

திருவரங்கத்தமுதனார்

எந்தாதைகூரேச ரிணையடியோன் வாழியே*
    எழில்மூங்கிற்குடி விளங்க இங்குவந்தோன் வாழியே*
நந்தாம லெதிராசர்நலம் புகழ்வோன் வாழியே*
    நம்மதுரகவிநிலையை நண்ணினான் வாழியே*
பைந்தாமவரங்கர்பதம் பற்றினான் வாழியே*
    பங்குனியிலத்தநாள் பாருதித்தோன் வாழியே*
அந்தாதிநூற்றெட்டு மருளினான் வாழியே*
    அணியரங்கத்தமுதனா ரடியிணைகள் வாழியே. (15)

எம்பார்

பூவளரும்திருமகளார் பொலிவுற்றோன் வாழியே*
    பொய்கைமுதல்பதின்மர்கலைப் பொருளுரைப்போன் வாழியே*
மாவளரும் பூதூரன் மலர்ப்பதத்தோன் வாழியே*
    மகரத்திற்புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே*
தேவுமெப்பொருளும் படைக்கத் திருந்தினான் வாழியே*
    திருமலைநம்பிக் கடிமைசெய்யுமவன் வாழியே*
பாவையர்கள்கலவியிருள் பகலென்றான் வாழியே*
    பட்டர்தொழு மெம்பார் பொற்பதமிரண்டும் வாழியே. (16)

பட்டர்

தென்னரங்கர்மைந்தனெனச் சிறக்கவந்தோன் வாழியே*
    திருநெடுந்தாண்டகப்பொருளைச் செப்புமவன் வாழியே*
அன்னவயல்பூதூர னடிபணிந்தோன் வாழியே*
    அநவரத மெம்பாருக் காட்செய்வோன் வாழியே*
மன்னுதிருக்கூரனார் வளமுரைப்போன் வாழியே*
    வைகாசியனுடத்தில் வந்துதித்தோன் வாழியே*
பன்னுகலைநால்வேதப்பயன் தெரிவோன் வாழியே*
    பராசரனாம் சீர்பட்டர் பாருலகில் வாழியே. (17)

நஞ்சீயர்

தெண்டிரைசூழ்திருவரங்கம் செழிக்கவந்தோன் வாழியே*
    சீமாதவனென்னும் செல்வனார் வாழியே*
பண்டைமறைத்தமிழ்ப்பொருளைப் பகரவந்தோன் வாழியே*
    பங்குனியிலுத்தரநாள் பாருதித்தான் வாழியே*
ஒண்டொடியாள்கலவிதன்னை ஒழித்திட்டான் வாழியே*
    ஒன்பதினாயிரப்பொருளை ஓதுமவன் வாழியே*
எண்டிசையும்சீர்பட்ட ரிணையடியோன் வாழியே*
    எழில் பெருகும் நஞ்சீயர் இனிதூழி வாழியே. (18)

நம்பிள்ளை

தேமருவும்செங்கமலத் திருத்தாள்கள் வாழியே*
    திருவரையில் பட்டாடை சேர்மருங்கும் வாழியே*
தாமமணிவடமார்வும் புரிநூலும் வாழியே*
    தாமரைக்கையிணையழகும் தடம்புயமும் வாழியே*
பாமருவுந் தமிழ்வேதம் பயில்பவளம் வாழியே*
    பாடியத்தின் பொருள் தன்னைப் பகர்நாவும் வாழியே*
நாமநுதல்மதிமுகமும் திருமுடியும் வாழியே*
    நம்பிள்ளைவடிவழகும் நாடோறும் வாழியே. (19)

acharya.org

காதலுடன் நஞ்சீயர்கழல்தொழுவோன் வாழியே*
கார்த்திகைக்கார்த்திகையுதித்த கலிகன்றி வாழியே*
போதமுடனாழ்வார்சொற் பொருளுரைப்போன் வாழியே*
பூதூரன்பாடியத்தைப் புகழுமவன் வாழியே*
மாதவாலெவ்வுயிர்க்கும் வாழ்வளித்தான் வாழியே*
மதிளரங்கரோலக்கம் வளர்த்திட்டான் வாழியே*
நாதமுனியாளவந்தார்நலம் புகழ்வோன் வாழியே*
நம்பிள்ளை திருவடிகள் நாடோறும் வாழியே* (20)

வடக்குத்திருவிதிப்பிள்ளை

ஆனிதனிற்சோதிநா ளவதரித்தான் வாழியே*
ஆழ்வார்கள்கலைப்பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே*
தானுகந்தநம்பிள்ளை தாள்தொழுவோன் வாழியே*
சடகோபன் தமிழ்க்கீடு சாற்றினான் வாழியே*
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே*
நல்லவுலகாரியனை நமக்களித்தான் வாழியே*
ஈனமறவெமையாளு மிறைவனார் வாழியே*
எங்கள் வடவீதிப்பிள்ளையிணையடிகள் வாழியே. (21)

பிள்ளைலோகாசார்யர்

அத்திகிரியருளாள ரனுமதியோன் வாழியே*
ஐப்பசியில் திருவோணத் தவதரித்தான் வாழியே*
முத்திநெறிமறைத்தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே*
மூதரியமணவாளன் முன்புதித்தான் வாழியே*
நித்தியம் நம்பிள்ளைபதம் நெஞ்சில்வைப்போன் வாழியே*
நீள்வசனபூடணத்தால் நியமித்தான் வாழியே*
உத்தமமாம்முடும்பைநக ருதித்தவள்ளல் வாழியே*
உலகாரியன்பதங்களூழிதொறும் வாழியே. (22)

கூரகுலோத்தமதாசர்

சந்ததமு மாழ்வார்கள் தமிழ் வளர்த்தோன் வாழியே*
தாரணியிற் சிறுநல்லூர் தானுடையோன் வாழியே*
எந்தையுலகாரியனை யிறைஞ்சுமவன் வாழியே*
இலகு துலாவாதிரையி லிங்குதித்தான் வாழியே*
இந்தவுலகத்தோர்க் கதிமுரைத்தோன் வாழியே*
எழில்வசனபூடணத்துக் கினிமைசெய்தான் வாழியே*
குந்திநகர்சிந்தைகொண்ட செல்வனார் வாழியே*
கூரகுலோத்தமதாசர் குரைகழல்கள் வாழியே ! (23)

திருவாய்மொழிப்பிள்ளை

வையகமெண்சடகோபன் மறைவளர்த்தோன் வாழியே*
வைகாசிவிசாகத்தில் வந்துதித்தான் வாழியே*
ஐயனருண்மாரிகலை ஆய்ந்துரைப்போன் வாழியே*
அழகாருமெதிராச ரடிபணிவோன் வாழியே*
துய்யவுலகாரியன்தன் துணைப்பதத்தோன் வாழியே*
தொல்குருகாபுரியதனைத் துலக்கினான் வாழியே*
தெய்வநகர்குந்திதன்னில் சிறக்கவந்தோன் வாழியே*
திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகள் வாழியே. (24)

acharya.org

மணவாளமாமுனிகள்

இப்புவியிலரங்கேசர்க் கீடளித்தான் வாழியே*
எழில்திருவாய்மொழிப்பிள்ளை யிணையடியோன் வாழியே*
ஐப்பசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே*
அரவரசப்பெருஞ்சோதி யனந்தனென்றும் வாழியே*
எப்புவியும் ஸ்ரீசைலமேத்தவந்தோன் வாழியே*
ஏராருமெதிராச ரெனஉதித்தான் வாழியே*
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான் வாழியே*
மூதரிய மணவாளமாமுனிவன் வாழியே. (25)

திருநாள் பாட்டு

பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியச் சந்தவிருத்தம்

செந்தமிழ் வேதியர் சிந்தைதெளிந்து சிறந்துமகிழ்ந்திடுநாள்*
சீருலகாரியர்செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடுநாள்*
மந்தமதிப்புவிமானிடர் தங்களை வானிலுயர்த்திடுநாள்*
மாசறுஞானியர்சேரெதிராசர் தம்வாழ்வு முளைத்திடுநாள்*
கந்தமலர்ப்பொழில் சூழ்குருகாதிபன்கலைகள் விளங்கிடுநாள்*
காரமர்மேனியரங்கநகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்*
அந்தமில்சீர்மணவாளமுனிப்பர னவதாரம்செய்திடுநாள்*
அழகுதிகழ்ந்திடு மைப்பசியில் திருமூலமதெனுநாளே. (26)

அப்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை

தண்(ன்)மை சிங்கம் ரோகிணிநாள் தழைக்க வந்தோன் வாழியே*
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே*
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே*
பூதூர் எதிராசர் தாள்,புகழுமவன் வாழியே*
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே*
மறை நாலின் பொருள் தன்னைப் பகுத்துரைத்தான் வாழியே*
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே*
அபயப்ரதராசர் தாள் அனவரதம் வாழியே.

தீதறு நம்பிள்ளைபதம் சென்னிவைப்போன் வாழியே*
திருமலையில் மால்பதத்தைச் சிறந்து பெற்றான் வாழியே*
ஆதரவாய்த் தனிச்லோகி அருளினான் வாழியே*
ஆழ்வார்கள் சொற்பொருளை அறிந்துரைப்போன் வாழியே*
ஓதுபுகழ்ச் சங்கநல்லூர் உகந்து பெற்றான் வாழியே*
உரோகிணிநாள் ஆவணியில் உதித்தபிரான் வாழியே*
ஏதமிலெண் மூவாயிரம் இயம்புமவன் வாழியே*
எழில் பெரியவாச்சான்பிள்ளை இணையடிகள் வாழியே.

acharya.org

அழகியமணவாளப்பெருமாள் நாயனார்

மன்னியசீர் மதிளரங்கம் மகிழவந்தோன் வாழியே*
மார்கழியில் அவிட்டத்தில் வந்த வள்ளல் வாழியே*
மின்னுபுகழ் ஆரியமனம் மொழிந்தருள்வோன் வாழியே*
மேன்மைமிகு திருப்பாவை விரித்துரைத்தான் வாழியே*
தென்னுரையில் உலகாரியன் திருவடியோன் வாழியே*
ஸ்ரீக்ருஷ்ணபாதகுரு செல்வமைந்தன் வாழியே*
அன்னபுகழ் முடும்பை நம்பிக் கன்புடையோன் வாழியே*
அழகியமணவாளன்தன் அடியிணைகள் வாழியே*

வேதாந்தாசாரியார்

கன்னிதன்னிலோணத்தில் கச்சிவந்தோன் வாழியே
கலைபலவும் திருநாவில் கமழநின்றோன் வாழியே
மன்னுபுகழ் உலகாரியன் மலரடியோன் வாழியே
மதிளரங்கர் மலரடியின் மாண்புரைத்தோன் வாழியே
துன்னுபுகழாழ்வார்கள் தூய்மை சொல்வோன் வாழியே
தூயவர்சேர் அயிந்தைமெய்ய னடிபணிந்தோன் வாழியே
மின்னிலகுமணி மகுடத் தொப்பாரம் வாழியே
வேதாந்தவாசிரியன் தன்விரிபுகழும் வாழியே

ஒன்றான வானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி

திருவிருந்த மலர்த் தாள்கள் வாழியே
சிறந்த செந்துவ ராடையும் வாழியே
தருவிருந்த கைமுக்கோலும் வாழியே
தடம்புயத் தினில்சங்காழி வாழியே
மருவு கொண்டல் மணவாள யோகியை*
வாழ்த்தி வாய்ந்தருள் வாய்மலர் வாழியே
கருணை மேவு மிராமா நுசமுனி
கனக மௌலி கலந்தாழி வாழியே.

அடியவர்தம் துயரனைத்தும் அறுத்தருள்வோன் வாழியே*
அணிபொழில் சீவரமங்கை அவதரித்தோன் வாழியே*
கடிபொழில்சூழ் பூதூர்மன் கழல் பணிந்தோன் வாழியே*
கருத்தையடர் புல்லெண்ணந் தாங் கடிந்துவிட்டோன் வாழியே*
வடமொழி தென்மொழி மறைகள் வகுத்துரைப்போன் வாழியே*
மணவாள மாமுனியை வாழ்த்துமவன் வாழியே*
இடருததி முழுகுமெனை எடுத்தளிப்போன் வாழியே*
என்னப்பனிராமாநுச முனிவன் வாழியே.

வாழி திருநாமம் ஸம்பூர்ணம்.

acharya.org

॥ श्रीः ॥

॥ श्रीमते रामानुजाय नमः ॥

॥ धाटीपञ्चकम् ॥

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தாடீபஞ்சகம்

पाषण्डद्रुमषण्ड दावदहनः चार्वाकशैलाशनिः बौद्धध्वान्तनिरासवासरपतिः जैनेभ कण्ठीरवः ।
मायावादि भुजङ्गभङ्गगरुडः त्रैविद्यचूडामणिः श्रीरङ्गेशजयध्वजो विजयते रामानुजोऽयं मुनिः ॥ १ ॥

பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந: சார்வாக சைலாசநி:
பௌத்தத்வாந்தநிராஸவாஸரபதி: ஜைநேபகண்டீரவ: ।
மாயாவாதி புஜங்கபங்ககருட: த்ரைவித்யசூடாமணி:
ஸ்ரீரங்கேச ஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோயம் முநி: ॥ 1 ॥

पाषण्डषण्डगिरि खण्डनवज्रदण्डाः प्रच्छन्नबौद्धमकरालयमन्थ दण्डाः ।
वेदान्तसार सुखदर्शनदीपदण्डाः रामानुजस्य विलसन्ति मुनेस्त्रिदण्डाः ॥ २ ॥

பாஷண்டஷண்டகிரிகண்டந வஜ்ரதண்டா: ப்ரச்சந்ந பௌத்த மகராலய மந்த தண்டா: ।
வேதாந்த ஸாரஸுகதர்சந தீபதண்டா: ராமாநுஜஸ்ய விலஸந்தி முநேஸ்த்ரிதண்டா: ॥ 2 ॥

चारित्रोद्धारदण्डं चतुरनयपथालंक्रिया केतुदण्डं सद्विद्यादीपदण्डं सकलकलिकथासंहृतेः कालदण्डम् ।
त्रय्यन्तालम्बदण्डं त्रिभुवनविजयच्छत्रसौवर्णदण्डं दत्ते रामानुजार्यः प्रतिकथक शिरोवज्रदण्डं त्रिदण्डम् ॥

சாரித்ரோத்தார தண்டம் சதுர நயபதாலங்க்ரியா கேதுதண்டம்
ஸத்வித்யாதீபதண்டம் ஸகலகலிகதா ஸம்ஹ்ருதே: காலதண்டம் ।
த்ரய்யந்தாலம்பதண்டம் த்ரிபுவந விஜயச்சத்ர ஸௌவர்ணதண்டம்
தத்தே ராமாநுஜார்ய: ப்ரதிகதகசிரோவஜ்ரதண்டம் த்ரிதண்டம் ॥ 3 ॥

त्रय्या माङ्गल्यसूत्रं त्रियुगपदयुगारोहणालम्बसूत्रं सद्विद्यादीपसूत्रं सकलकलिकथासंहृतेः कालसूत्रम् ।
प्रज्ञासूत्रं बुधानां प्रशमधनमनःपद्मिनीनालसूत्रं रक्षासूत्रं मुनीनां जयतु यतिपतेः वक्षसि ब्रह्मसूत्रम् ॥

த்ரய்யா மாங்கல்யஸூத்ரம் த்ரியுகபதயுகாரோஹணாலம்ப ஸூத்ரம்
ஸத்வித்யாதீபஸூத்ரம் ஸகலகலிகதாஸம்ஹ்ருதே காலஸூத்ரம் ।
ப்ரஜ்ஞாஸூத்ரம் புதாநாம் ப்ரசமதநமந: பத்மிநீ நாலஸூத்ரம்
ரக்ஷாஸூத்ரம் முநீநாம் ஜயதி யதிபதே: வக்ஷஸி ப்ரஹ்மஸூத்ரம் ॥ 4 ॥

पाषाण्डसागरमहाबडवामुखाग्निः श्रीरङ्गराज चरणाम्बुजमूलदासः ।
श्रीविष्णुलोकमणिमण्डप मार्गदायी रामानुजो विजयते यतिराजराजः ॥ ५ ॥

பாஷண்டஸாகரமஹாபடபாமுகாக்நி: ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜமூலதாஸ: ।
ஸ்ரீ விஷ்ணுலோக மணிமண்டப மார்க்கதாயீ ராமாநுஜோ விஜயதே யதிராஜராஜ: ॥ 5 ॥

॥ इति धाटी पञ्चकम् ॥

acharya.org

॥ श्रीः ॥

श्रीवरवरमुनिभिरनुगृहीतं

॥ देवराजमङ्गलम् ॥

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

தேவராஜ மங்களம்



தேவாதிராஜன்

தனியன்

यश्चक्रे देवराजाय मङ्गलाशासनं मुदा । तं वन्दे रम्यजामातृमुनिं विशदवाग्वरम् ॥

யச்சக்ரே தேவராஜாய மங்களாசாஸனம் முதா

தம் வந்தே ரம்யஜாமாத்ருமுநிம் விசதவாக்வரம்

ஸ்ரீதேவராஜமங்களாசாஸநஸ்துதியை உகந்து அருளிச்செய்த விசதவாக் சிகாமணிகளென்று ப்ரஸித்தரான மணவாளமாமுனிகளை வணங்குகிறேன்.

मंगलं वेधसो वेदिमेदिनीगृहमेधिने । वरदाय दयाधाम्ने धीरोदाराय मङ्गलम् ॥

மங்களம் வேதஸோ வேதிமேதிநீக்ருஹமேதிநே ।

வரதாய தயாதாம்நே தீரோதாராய மங்களம்॥ 1

பிரமனுடைய (யாகத்தில்) உத்தரவேதிஸ்தலத்தை இருப்பிடமாகவுடையவரும், பேரருளாளனும், மஹா தீரனும் உதாரனுமான வாதராஜப் பிரானுக்குப் பல்லாண்டு.

acharya.org

वाजिमेधे वपाहोमे धातुरुत्तरवेदितः । उदिताय हुतादग्नेरुदाराङ्गाय मङ्गलम् ॥

வாஜிமேதே வபாஹோமே தாருருத்தர்வேதித :
உதிதாய ஹு்தாதக்நேருதாராங்காய மங்களம் 2

பிரமனுடைய அச்வமேதயாகத்தில் வபையையெடுத்து ஹோமம் செய்தவுடனே உத்தர வேதியில் ஹோமாக்நியிலிருந்து உதித்தருளினவரும், அழகிய வரதனுமான பெருமானுக்குப் பல்லாண்டு.

यजमानं विधिं वीक्ष्य स्मयमानमुखश्रिये । दयमानदृशे तस्मै देवराजाय मङ्गलम् ॥

யஜமாநம் விதிம் வீக்ஷ்ய ஸ்மயமாந முகச்ரியே
தயமாநத்ருசே தஸ்மை தேவராஜாய மங்களம். 3

தம்மை ஸாக்ஷாத்கரிக்கும் பொருட்டு வேள்விவளர்த்த பிரமனை நோக்கிப் புந்நகை செய்து கொண்டு அருள் நோக்கம் தந்தருளின தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.

वारिदश्यामवपुषे विराजत्पीतवाससे । वारणाचलवासाय वारिजाक्षाय मङ्गलम् ॥

வாரிதச்யாமவபுஷே விராஜத்பீதவாஸஸே ।
வாரணாசலவாஸாய வாரிஜாக்ஷாய மங்களம் ॥ 4

கருமுகில்போல்வதோர் மேனியுடையவரும், பீதகவாடை திகழும் திருவரையுடையவரும், திருவத்திமாமலையைத் தன்னிருப்பிடமாகக் கொண்டவரும் செந்தாமரைக் கண்ணருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.

अद्यापि सर्वभूतानामभीष्टफलदायिने । प्रणतार्तिहरायास्तु प्रभवे मम मङ्गलम् ॥

அத்யாபி ஸர்வபூதாநாம் அபீஷ்டபலதாயிநே ।
ப்ரணதார்த்திஹராயாஸ்து ப்ரபவே மம மங்களம் ॥ 5

பிரமனுக்கு அருள் செய்தது போலவே இன்றும் ஸகல ஜீவராசிகளுக்கும் வேண்டிய பலன்களெல்லாவற்றையும் அருளுபவரும், ஆச்ரிதர்களின் இன்னல்களைக்களைந்தருளுபவரும், அடியேனுடைய ப்ரபுவுமான தேவப் பெருமாளுக்குப்பல்லாண்டு.

दिव्यावयवसौन्दर्य दिव्याभरणहेतये । दन्तावलगिरीशाय देवराजाय मङ्गलम् ॥

திவ்யாவயவ ஸௌந்தர்ய திவ்யாபரண ஹேதயே ।
தந்தாவளகிரீசாய தேவராஜய மங்களம் ॥ 6

திவ்யமான அவயவ ஸௌந்தர்யமுடையவரும், திவ்யமான ஆயுத, ஆபரணங்களைப்பூண்டவரும் ஸ்ரீ ஹஸ்திகிரி நாதருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.

पुरुषाय पुराणाय पुण्यकोटि निवासिने । पुष्पितोदारकल्पद्रुकमनीयाय मङ्गलम् ॥

புருஷாய புராணாய புண்யகோடி நிவாஸிநே !
புஷ்பிதோதார கல்பத்ருகமநீயாய மங்களம் ॥ 7

புண்யகோடி விமானத்தில் எழுந்தருளியிருப்பவரும், அநாதி ஸித்த புருஷரும், பூத்து அழகிய கல்பகவ்ருக்ஷம் போல் விரும்பத்தக்கவருமான தேவப்பெருமாளுக்குப் பல்லாண்டு.

acharya.org

काञ्चनाचलशृङ्गाग्रकालमेघानुसारिणे । सुपर्णांसावतंसाय सुरराजाय मङ्गलम् ॥

காஞ்சநாசலச்ருங்காக்ர காளமேகாநு ஸாரிணே।

ஸுபர்ணாம்ஸாவதம்ஸாய ஸுரராஜாய மங்களம் ॥ 8

பொன்மயமானதொரு மலையுச்சியின்மேல் காளமேகம் திகழ்வதுபோல் பெரிய திருவடியின் திருத்தோள்கலங்காரமாகின்ற தேவப் பெருமாளுக்கு மங்களம்.

भोगापवर्गयोरेकं वाञ्छद्भ्यो ददते द्वयम् । श्रीमद्वरदराजाय महोदाराय मङ्गलम् ॥

போகாபவர்க்கயோ ரேகம் வாஞ்சத்ப்யோ தததே த்வயம்।

ஸ்ரீமத்வரதராஜாய மஹோதாராய மங்களம் ॥ 9

இஹலோகத்தில் போகங்களையோ பரலோகத்தில் போகங்களையோ ஏதொன்றையே விரும்பிக் கேட்டாலும் இரண்டையுமே தந்தருளும் பேரருளாளனான வரதராஜப் பெருமாளுக்குப் பல்லாண்டு.

मतङ्गजाद्रितुङ्गाग्रशृङ्गशृङ्गारवर्ष्मणे । महाकृपाय मद्रक्षादीक्षितायास्तु मङ्गलम् ॥

மதங்கஜாத்ரிதுங்காக்ரச்ருங்க ச்ருங்கார வர்ஷ்மணே।

மஹாக்ருபாய மத்ரக்ஷா தீக்ஷிதாயாஸ்து மங்களம் ॥ 10

ஸ்ரீ ஹஸ்திகிரியின் மிக வுயர்ந்த உச்சிக்கு அலங்காரமாயிருக்கும் திருமேனியையுடையவரும், அடியேன்போல்வாரை ரக்ஷித்தருள்வதில் தீக்ஷை கொண்டவருமான பேரருளாளப் பிரானுக்குப் பல்லாண்டு.

श्रीकाञ्चीपूर्णमिश्रेण प्रीत्या सर्वाभिभाषिणे । अतीतार्चाव्यवस्थाय हस्त्यद्रीशाय मङ्गलम् ॥

ஸ்ரீமத்காஞ்சீ பூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே।

அதீதார்ச்சாவ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம். 11

அர்ச்சாவதாரஸமாதியைக்கடந்து திருக்கச்சி நம்பிகளுடன் மிகவும் ப்ரீதியுடன் எப்போதும் வார்த்தையாடியருளின ஹஸ்திகிரீசனை பெருமாளுக்குப் பல்லாண்டு.

अस्तु श्रीस्तनकस्तूरीवासनावासितोरसे । श्रीहस्तिगिरिनाथाय देवराजाय मङ्गलम् ॥

அஸ்து ஸ்ரீஸ்தந கஸ்தூரீ வாஸநாவாஸி தோரஸே।

ஸ்ரீஹஸ்திகிரி நாதாய தேவராஜாய மங்களம் ॥ 12

பெரிய பிராட்டியார் எப்போதும் திருமார்புடன் அணைந்திருக்கையால் அவள் மார்பில் சாத்தின கஸ்தூரிக்காப்பின் நறுமணம் கமழும் திருமார்பையுடைய தேவப் பெருமாளுக்குப் பல்லாண்டு.

मङ्गलाशासनपरैः मदाचार्यपुरोगमैः । सर्वैश्च पूर्वैराचार्यैः सत्कृतायास्तु मङ्गलम् ॥

மங்களாசாஸனபரை: மதாசார்ய புரோகமை: ॥

ஸர்வைச்ச பூர்வைராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம் ॥ 13

எப்போதும் பல்லாண்டு பாடிக்கொண்டிருக்கும் அடியேனுடைய ஆசார்யர் முதலான எல்லா பூர்வாசார்யர்களாலும் போற்றப்பெற்ற பெருமானுக்குப் பல்லாண்டு.

ஜீயர் திருவடிகளே சரணம்

acharya.org

திருமலையில் ஸ்ரீ முதலியாண்டான் வம்ச வழித்தோன்றலான ஸ்ரீ அப்பாச்சியாரண்ணா செய்தருளிய கைங்கர்யம்

திருமலை திருப்பதி தேவஸ்தான கல்வெட்டு தொகுதி

No 80.

(No. 337—T. T.)

[On the east wall (outer side), north of first gopuram in Tirumala Temple.]

Text

1 ஸ்வஸ்தி [ஸ்ரீ]ஸ்ரீ ஸகாப்த ஆயிரத்து நானூற்று அஞ்சின்மேல் செல்லாநின்ற சோபகிருது வருஷத்து துலாநாயற்று பூர்வபக்ஷத்து த்விதீயையும் சுக்ரவாரமும் பெற்ற ஸ்வாதி நக்ஷத்ரத்து நாள் திருமலையில் ஸ்தானத்தாரோம் கந்தாடை

2 அப்பாச்சியாரண்ணாவுக்கு ஸிலா ஸாஸநம் பண்ணிக்குடுத்தபடி திருவேங்கடமுடையானுக்கு தம்முடைய பேரால பொலிவூட்டாக மாஸப்ரதி புனர்பூச திருநக்ஷத்ரத்து ஒரு அப்பப்படி அமுதுசெய்தருளும்படிக்கு இன்று நாம் ஸ்ரீபண்டாரத்துக்கு ஒடுக்கின பு ௩௱ ௵

3 ப்பணம் முன்னூற்றுக்கும் மாஸம்தோறும் புனர்பூசத்திருநாளும் ஸ்ரீபண்டாரத்திலே விட்டு வரும் அப்பப்படி ஒன்றுக்கு படிகின்ற காணால் அமுதுபடி இரண்டு மரக்காலும் நெய்அமுது இரு நாழியும் சர்க்கரை அமுது நாற்பது பலமும் மிளகு அமுது ஆழாக்கும் இந்த வகைப்படி ஸ்ரீ

4 பண்டாரத்திலே விட்டுப்போதக்கடவதாகவும் அமுதுசெய்தருளின அப்ப ஷூவாதத்தில் விட்டவன் கிழக்காடு நீக்கி நின்றது பூர்வத்துப் பொலிவூட்டு அப்பபடி அடைப்பிலே சிலவழித்துக்கொள்ளக்கடவோமாகவும் விட்டவன் கிழக்காடு அப்பஷூவாதம் பதின்மூன்று

5 க்கு நிர்வாகம் ஒன்றுக்கு அப்பஷூவாதம் அரையாக நிர்வாகம் பன்னிரண்டினும் ஆறு அப்பஷூவாதம் பெறக்கடவோமாகவும் நீக்கி நின்ற அப்பஷூவாதம் ஏழும் அப்பச்சியாரண்ணா பெறக்கடவராகவும் இப்படிக்குத் தம்முடைய ஸந்தாநவம்ஸ பரம்பரை ஆசந்த்ரார்க்-

6 வரை நடக்கக்கடவதாகவும் இப்படிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் பணியால் கோயில்கணக்கு திருநின்றவூருடையான் எழுத்து ௨ இவை ஸ்ரீவைஷ்ணவரக்ஷை ௨

Translation

1-2. May success attend! In the Śōbhakṛit year current with the Śaka year 1405, in the Tulā-sun (month), in the bright fortnight, on the day of the star Svāti which occurred on Friday[1], the 2nd lunar day, the following is the *śilāśāsanam* as it was executed by the *Sthānattār* of Tirumala in favour of Kandāḍai Appāchchiyār-aṇṇā, to wit,

2. the money which you rendered into the *Śrī-Bhaṇḍāram* this day for the purpose of presenting 1 *appa-paḍi* to Tiruvēṅkaṭamuḍaiyān on the day of Puṇarpūśam (Punarvasu) star (occurring) each month, in your name, as a charge upon the interests, is 300 *paṇam.*

acharya.org

3–4. In lieu of this (capital of) 300 *paṇam*, shall be supplied from the *Śrī-Bhaṇḍāram*, month after month on each occasion of the Punarpūsam (star), (articles) on the following scale which are usually issued from the *Śrī-Bhaṇḍāram* towards (an offering of) 1 *appa-paḍi*, (viz.)

2 *marakkal* of rice, (measured with the *Malaininrān-kāl*,
1 *nāḻi* of ghee,
100 *palam* of jaggery, and
1 *uḻakku* of pepper.

4–5. Deducting the donor's share from the entire *appa-prasādam* offered, the remainder we shall be empowered to distribute during the time of the distribution in the forenoon of the *appa-paḍi* (offered out of) the interest (on the several capital sums invested).

From the 13 *appa-prasādam* falling to the donor's share, we shall be entitled to appropriate 6 *appa-prasādam* for the 12 *nirvāham* at the rate of ½ *appa-prasādam* per each *nirvāham*.

The balance of 7 *appa-prasādam* still remaining Appachchiyāraṇṇā shall be entitled to receive.

Thus shall (this charity) continue throughout the succession of your heirs, till the moon and the sun endure.

6. In this manner (just as the record was executed by the *Sthānattār*) is (it) copied by the temple-accountant *Tiruninra-ūr-udaiyān*, with the permission of the Śrīvaishṇavas. May these the Śrīvaishṇavas protect!

---

24. Wherefore under the authority of the Śrīvaishṇavas is (this deed) drawn up by the temple-accountent *Tiruninṟa-ūr-uḍaiyān*. The protection of the Śrīvaishṇavas (is sought for) this (charity).

No. 136.

(No. 336—T. T.)

[On the north wall of the second prakara in Tirumala Temple.]

Text

1 ௳ [illegible] ஆயிரத்து [illegible]
அட்டித்தேன் செல்லாநின்ற [illegible] அப-
வர்த்த [illegible] புகைசமும் பெற்ற [illegible] திருமலையில்
[illegible] திருமலை திருப்பதியில் [illegible] அப்பச்சியார்
2 அரங்கனுக்கு [illegible] பண்ணிகொடுத்தபடி [illegible]
யான் பதினாறு [illegible] பெருங்கணக்கன் [illegible]
காப்பு [illegible] உடுக்காப்பு [illegible]
[illegible] இராமானு[ஜ] [illegible] பெரிய [illegible]
3 [illegible] இரண்டு அதிரசப்படியும் அமுதுசெய்தருளப்பண்ணும் [illegible]
[illegible] பண்ணி [illegible] ஸ்ரீபண்டாரத்து [illegible]
இப்பணம் ஆயிரத்து [illegible]
[illegible] கடப்பிதாகில் [illegible]

acharya.org

4 பெருந்நாள் திருவேங்கடமுடையான் பக்கு ஒன்றும் கைக்கொண்டு வடுக-
நாதராயிரர் பக்கு அரையும் [illegible] பங்காய் [illegible][1]-
[illegible] பக்கு அரையும் ஆக [illegible][2] கொண்டு-
டைய [illegible] பக்கு [3]இரண்டும் [4][illegible] ஸ்ரீபண்டாரத்துக்கு
5 குடுக்கையில் இந்த சர்வமான்யமாக ஆயிரத்து ஐநூற்று அறுபது
இத்தொகை ஸ்ரீபண்டாரத்துக்கு சேர்க்கைக்கு பெற்றுக்கொண்ட பணம்
நூற்று [illegible] இப்பணம் [illegible] [5][illegible]
கொண்ட இந்த இரண்டு பங்கில் விளைந்த [illegible] இந்த இரண்டு
பங்கை
6 கொண்டு [illegible] திருவேங்கடமுடையான் [illegible]
[illegible] திருவேங்கட-
முடையானும் [illegible] பதினாறு [illegible]
[illegible] பழுதுகாப்பு [illegible] பழுது-
காப்பு

1. Read [illegible]
2. Read [illegible]—
3. Read [illegible]
4. Read [illegible]
5. Read [illegible]
6. Read [illegible]
7. Read [illegible]
8. Read [illegible]
9. Read—[illegible]

7 சாத்தி அருளும்படி இராமானுசஅய்யங்கார் உகந்தருளி அமுது
செய்தருளும் அதிரசப்படி இரண்டுக்கு [illegible]
அமுதுபடி இரண்டு [illegible] [illegible] சர்க்கரை
அமுது இருநாழி பருப்பும் [illegible] அமுது உடுக்கும்
8 ஆக இந்த வகைப்படி ஸ்ரீபண்டாரத்திலே விட்டு பழுதுகாப்ப [1][illegible]
[illegible] அமுது செய்தருளக்கடவர்களாகவும் அமுதுசெய்தருளின
அதிரசப்படி [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible]
9 [illegible] [illegible]-
[illegible] [illegible] இப்படிக்கு
தம்முடைய சந்த்ராதித்தவரை [illegible] [illegible]-
வும் இப்படிக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் பரிபாலனம்
10 [illegible] திருவேங்கடமுடையான் [illegible] ஸ்ரீ [illegible]

Translation

1–2. Hail, Prosperity! On the day[1] of the Pushya (star) occurring on Wednesday, being the 2nd lunar day of the dark fortnight in the month of Dhanus in the year Naḷa, corresponding with the Śaka year 1418, the *Sthānattār* of Tirumala registered the following *śilāśāsanam* in favour of Kandāḍai Appachchiyār-Aṇṇā, viz.,

acharya.org

2-5. in as much as you stipulated for the offering of 2 *atirasa-paḍi* to Tiruvēṅkaṭamudaiyān immediately after His hearing the *ulā* (sung) in the name of Kandāḍai Rāmānujayyaṅgār at the time of the smearing of the *Puḻugu-Kāppu-muṟai* on each (alternate) Friday (occurring) once in 15 days, and, in lieu of a capital of 1500 *paṇam* to be paid this day into the *Śrī-Bhaṇḍārm*, you purchased two *sarvamānya* shares (of land), viz., one share from Parundūr Tiruvēṅkatamuḍaiyān, one of the *Mahājanam* (of Kaḍappēri); half a share from Kaitaḍuppūr Vaḷittuṇainâyanār, and half a share sold to you by the *Mahājanam* being the share of Ekāmbara-Paṇḍitar, in Kaḍappēri (village) in Kalavai-paṟṟu (forming a part of) *Paḍaivīḍu-rājyam*, and handed over the documents to the *Śrī-Bhaṇḍāram*,

and being credited with the payment of 1460 *paṇam* in consideration of the value of the above *sādhanam*, you have paid 40 *paṇam* in cash this day into the *Śrī Bhaṇḍāram* making a total of 1500 *paṇam*,

5-8. from the income obtained from the said two shares purchased with the above 1500 *paṇam* together with the total income from the common land comprising the house-sites, their boundary extents and their back yards (situated in and) belonging to the above said two shares, shall be supplied from the *Śrī-Bhaṇḍāram* towards the 2 *atirasa-paḍi* to be offered at the time of smearing the *Puḻugu-Kāppu* on the occasions of the *Puḻugu-Kāppu-muṟai*

1. Read ஜேஷ்டாஷ்டாமீ. 2. Read ஸப்தாஹம்.

NOTE 31—21st December 1490 A.C. is the equivalent date.

on (alternate) Fridays occurring once in fifteen days for Tiruvēṅkaṭamuḍaiyān and Alaimēlmaṅgai-Nāchchiyār, immediately after the chanting of the *ulā* (in the name) of Rāmānujayyaṅgār,

2 *marakkāl* of rice with the *Malaikiniyaninṟān-kāl*,
1 *nāḻi* of ghee,
200 *palam* of jaggery and
1 *uḻakku* of pepper ;

and these shall be offered on the successive occasions of the *Puḻugu-Kāppu*.

8-9. The 13 *atirasa-prasādam*, forming the donor's share in each *paḍi* of the *atirasa-prasādam* offered, you will yourself be entitled to receive;

the balance of the *atirasa-prasādam* remaining we shall be empowered to distribute during the forenoon *aḍaippu*.

In this manner shall (this charity) continue to last throughout the succession of your descendants, till the moon and the sun endure.

9-10. Hence, is (this record) written up, with the permission of the Śrīvaishṇavas, by the temple-accountant *Tiruninṟa-ūr-uḍaiyān*. The protection of the Śrīvaishṇavas (is sought for) this (charity).

acharya.org

ஸ்ரீமதே ராமானுஜாய நம:



ஸ்ரீவேங்கட குரவே நம:



ஸ்ரீ குமார ராமானுஜாசாரியார் ஸ்வாமி

acharya.org